₹10

fmpb

# அறைகூவல்

Volume 55 | Issue 5 | May 2025

*“தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்.” ரோ. 8:29*

## பரிசுத்தம்



## பரிசுத்தத்தில் இன்னும் அதிகமாய்

ஈசோப்பு மலர்கள்

இவைகளிலும் அதிகமாய்

யோவான்.21:15



# ஆரம்ப வரிகள்...

## கம்பளத்தின் (Carpet) கீழ் ...

ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்வின் மேலான நோக்கம், ஒவ்வொரு நாளும் அவன் பரிசுத்தமாய் வாழ்ந்து இயேசுவைப்போல் மாறுவதாகும். ஹோரேஷியஸ் போனர் என்பவர் பரிசுத்தத்தை பின்வருமாறு விவரிக்கிறார். "பரிசுத்தம் என்பது ஒரு கிறிஸ்தவனின் வாழ்வில் ஒவ்வொரு பகுதியிலும் அதாவது அவன் வாழுமிடம், செய்யும் வேலை, சந்திக்கும் நபர், பேச்சு, திட்டமிடுதல், அன்பு, மகிழ்ச்சி, தனிமை, நட்பு, உறவுகள், வாசிப்பு, எழுத்து மேலும் ஆவி, ஆத்துமா மற்றும் சரீரத்தின் ஒவ்வொரு அசைவிலும் பரிசுத்தம் எல்லையின்றி விரிவடைய வேண்டும்." நமது இயக்கத்தின் மூன்றாவது Ethos "பரிசுத்தம்" (ரோமர் 8:29).

அநேக ஆண்டுகள் பழமையான, உறுதியான மரம் ஒன்று திடீரென விழுந்துவிட்டது. அந்த மரத்தை ஆராய்ந்து பார்த்தபோது கரையான்கள் அதன் மையப்பகுதியை உள்ளேயிருந்து அரித்துவிட்டன என்பது தெரியவந்தது. அந்த மரம் வெளித் தோற்றத்தில் உறுதியாக, வலிமையாக காணப்பட்டாலும் உள்ளேயிருந்த பாதிப்பு அதனை விழத்தள்ளியது. அதுபோல நாமும் கூட ஆவிக்குரிய வாழ்வில் மிகவும் வலிமையானவர்களாக, முன்மாதிரியானவர்களாகத் தோன்றலாம். ஆனால் வெளி உலகிற்கு தெரியாத அந்தரங்க பாவங்கள், இரட்டை வேடங்கள் நமது ஆவிக்குரிய வாழ்வை அழிக்க நமக்குள் ஒட்டி வளரும் ஒட்டுண்ணிகள் போல மெதுவாக நம்மை பெலவீனப்படுத்தி விழத்தள்ளும்.

ஆண்டவரின் நோக்கத்திற்காக பிரித்தெடுக்கப்பட்டு, அவருடைய பிள்ளைகளாக வாழ அழைக்கப்பட்ட நாம், பழைய சுபாவத்தில் சிலவற்றை இரகசியமாகப் பற்றிக்கொண்டிருக்கிறோம். அது நமது ஆவிக்குரிய வாழ்வில், தேவ பயத்தை தொலைத்து, தேவ நம்பிக்கையை விட்டு விலகச் செய்கிறது. நாம் தேவனிடம் நம்மை முழுமையாக அர்ப்பணிக்காததால் அதன் பாதிப்புகளுடன் அன்றாடம் போராடிக் கொண்டிருக்கிறோம். எப்படி கரையான் புற்றின் ஆரம்ப பகுதியை கண்டு மருந்து வைக்கும்போது அந்த மரம் குணப்படுகிறதோ, அதுபோல கிறிஸ்துவின் அன்பின் ஒளியில் நமது கம்பளத்தின் (Carpet) கீழுள்ள பாவங்களை தேவனிடம் வெளிப்படுத்துவோமானால், பரிசுத்த ஆவியானவரின் ஆளுகை நம் வாழ்வில் எங்கும் ஊடுருவிச் சென்று நம்மை தேவனுடைய ராஜ்ஜியத்தின் கனிதரும் விருட்சமாக வேரூன்றி வளரச் செய்வார். முழுமையான அர்ப்பணிப்பு எங்கு இருக்கிறதோ அங்கு பரிசுத்தம் இருக்கும். நிர்விசாரத்தினால் பரிசுத்த குலைச்சலும் ஆவிக்குரிய வீழ்ச்சியும் ஏற்படும். எனவே நம்மை நாமே ஆராய்ந்து நமது கம்பளத்திற்கு (Carpet) அடியில் மறைந்து கிடக்கும் அசுத்தங்களை அப்புறப்படுத்துவோம்.

*இதைத் தடுக்க இரண்டு விஷயங்கள் நடக்கவேண்டும்:*

**1. பாவத்தை அறிக்கை செய்தல்:** இருளுக்குள் நம் பாவங்களை மறைப்பதைப் பார்க்கிலும் தேவனுக்கு முன்பாக அறிக்கை செய்வது நல்ல ஆவிக்குரிய முதிர்ச்சியைத் தருகிறது (1 யோ. 1:9).

**2. முழுமையான அர்ப்பணிப்பு:** தேவனிடம் அறிக்கை செய்த பாவத்தை, அதன் சுவடுகளை அழித்து, தேவன் நமக்குள் செயல்பட நம்மை முழுவதுமாக அவருக்கு அர்ப்பணிக்க வேண்டும். (நீதி. 28:13-14).

கிறிஸ்துவின் பரிசுத்த ஒளியில் நம்மை அர்ப்பணிக்கும்போது நமது புதுவாழ்வு துளிர்விடும். கிறிஸ்துவின் சாயல் நம்மில் வெளிப்படும். நம் தனிப்பட்ட வாழ்வில் நாம் வெற்றி பெறுவதோடு பிறரையும் வெற்றியின் பாதையில் நடத்திச் செல்ல கர்த்தர் நமக்கு கிருபை செய்வாராக!

*"தனி வாழ்வில் வெற்றியில்லை எனில் பொது வாழ்வில் வெற்றியில்லை" - திரு. ஜாண் சாமுவேல்*

**- மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

**"இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாக்குகிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்த மாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்."**
*2 கொரி. 7:1*

**தேவனின் பரிசுத்தத்தைப் புரிந்துகொள்ளும்போதுதான் நமது பாவத்தின் ஆழத்தைப் புரிந்துகொள்வோம்.**
*– பில்லி கிரஹாம்*

**"யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே"** *எபி. 12:14*

**பரிசுத்தம் என்பது இயேசுவை நேசித்து நீங்கள் விரும்பியதைச் செய்வது அல்ல. பரிசுத்தம் என்பது கடவுளை நேசித்து அவர் விரும்புவதைச் செய்வது.**
*– சி. வாக்னர்*

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது தரிசனம்

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

### நமது ஊழியம்

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...



கிறிஸ்துவில் அன்பானவர்களே,

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்கள்!

சமீபத்திய காலத்தில் எனது தவகால தனிப்பட்ட வேத தியானத்தின்போது லூக்கா 19:31இல் கொடுக்கப்பட்டுள்ள **அது ஆண்டவருக்கு வேண்டும்** என்ற ஒரு எளிய சொற்றொடரால் நான் ஈர்க்கப்பட்டேன். முதல் பார்வையில் இச்சொற்றொடர் இயேசு கிறிஸ்து தன் சீடர்களுக்குக் கொடுத்த அறிவுறுத்த லாகும். எதிரே இருக்கிற கிராமத்திற்குப் போங்கள், கழுதைக்குட்டியைக் கட்டியிருக்கக் காண்பீர்கள், அதை அவிழ்த்துக்கொண்டு வாருங்கள். யாராவது உங்களிடத்தில் கேள்வி எழுப்பினால் **அது ஆண்டவருக்கு வேண்டும்** என்ற இந்த மூன்று வார்த்தைகளைக் கூறுங்கள் என்றார். இந்த வார்த்தைகள் என் இருதயத்தில் தொடர்ந்து ரீங்காரமிட்டுக்கொண்டே இருக்கிறது.

வேதாகமத்தில் சில வசனங்கள் பலத்த இடிமுழக்கத்தைப் போன்றும் மற்றவை அமைதலாய் மெல்லியக் குரலில் நம்மிடம் இடைபடும் வசனங்களாகவும் உள்ளன. எதுவாகிலும் அது நம்மில் கிரியை செய்ய நாம் அனுமதிக்கும்போது இரண்டுமே நம்மை மாற்றுகின்றன. இந்த வசனங்கள் சிறியவையாக இருந்தாலும் அதன் தாக்கங்கள் பெரியது. அது மிக பெரிய இரகசியத்தை வெளிப்படுத்துகிறது. தேவன் தன் நோக்கத்தை பலத்தினாலோ அல்லது வற்புறுத்தியோ நம்மிடம் நிறைவேற்ற விரும்பவில்லை. மாறாக, நம்முடைய அர்ப்பணிப்பின் மூலமாகவே அதை நிறைவேற்றுகிறார். அவர் நம்மை அவரின் ஊழியத்திற்கு அழைப்பது அவருக்கு ஆட்கள் இல்லாமையால் அல்ல. மாறாக, நாம் அவருடன் ஒரு பங்காளராக இருப்பதையே விரும்புகிறார். தேவ தூதர்களின் கூட்டத்திற்குக் கட்டளையிடுகிறவர், நட்சத்திரங்களை வானமண்டலங்களில் தூவியவருக்கு ஒரு தேவை இருக்கு மென்று கூறுவாரா? ஆனாலும் தமது மேன்மையான ஞானத்தினால் சாதாரண மனிதர்களைக் கொண்டு அசாதாரண மான காரியங்களைச் செய்ய, அவரின் உன்னதப் பணியில் பயன்படுத்த நம்மைத் தெரிந்துகொண்டார்.

## தேவனுக்காக செயல்படுவோருக்குக் கிடைக்கும் பலன்

இச்சம்பவத்தில் வரும் கழுதை அதன் பலத்திற்காகவோ, ஆற்றலுக்காகவோ தேர்ந்தெடுக்கப்படவில்லை. அது ஆயத்த மாகவோ, பார்வையாகவோ இல்லை. யாரும் அதன்மீது பயணித்ததுமில்லை. ஆனால் அது கிடைக்கக் கூடியதாக

இருந்தது. இதுவே போதுமானதாக இருந்தது. நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் சகரியா 9:9இல் கூறப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜாவாக எருசலேமிற்குள் பவனிச் சென்றார். இது தேவனின் மீட்பின் திட்டத்தின் இறுதிக் கட்டத்திற்கு வழிவகுத்தது. அந்த கழுதையின் உரிமையாளரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. அவரின் கதையும் முழுமையாக சொல்லி முடிக்கப்பட வில்லை. ஆனால் அவரின் அமைத லான கீழ்படிதலின் மூலம் கழுதை முக்கியமான கதாபாத்திரத்தில் வருகிறது.

## ஊழியத்தின் உள்ளார்ந்த வாஞ்சை

சாதாரணமானவர்களின் எளிய காணிக்கையின் மூலம் தேவன் அசாதாரணமான காரியங்களைச் செய்வதை கவனிக்கலாம். சரித்திரத் திலும், ஊழியர்கள் வாழ்விலும், ஊழிய கூட்டாண்மைகளிலும் இப்படிப்பட்ட காரியங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தேவன் நமது முழு அர்ப்பணிப்பை எதிர்பார்க்கிறார். அவர் திறமை வாய்ந்தவர்களை அழைப்பவர் அல்ல. ஆனால் அழைக்கப் பட்டவர்களைத் திறமையானவர்களாக மாற்றுகிறார். நீங்கள் எப்படி? உங்கள் கழுதைக்குட்டி எது? உங்கள் நேரமா, நீங்கள் கர்த்தருக்குக் கொடுக்கத் தயங்கிய உங்கள் தாலந்தா, திறமையா, அழைக்கப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வு இருந்தாலும் செயல்பட மறுக்கும் காரியமா அல்லது இது ஒரு சிறிய காரியம் என்று புதைக்கப்பட்ட கனவா? நாம் நம் ஆண்டவருக்கு வேண்டும் என்று தேவன் நம்மிடம் கேட்கிறார். நாம் தேவனுக்குக் கிடைக்கக் கூடியவர்களாக இருக்கிறோமா?

## ஓர் ஆழமான அர்ப்பணிப்புக்கு அழைப்பு

‘‘தேவனுக்கு உங்களின் பெலன் தேவையில்லை; அது அவருக்குப் போதுமான அளவிற்கு மேலாய் உள்ளது.அவர் உன் பெலவீனத்தைக் கேட்கிறார். அது அவரிடம் சற்றும் இல்லை.” – சார்லஸ் ஸ்பர்ஜன். தேவன் அதிக திறமைவாய்ந்தவர்களையோ, படித்தவர்களையோ, வசதிகள் உள்ளவர் களையோ தேடவில்லை. அவர் தேடுவதெல்லாம் அர்ப்பணமுள்ள இதயங்களையே. என்னிடம் உள்ளதைக் கொடுக்கிறேன் என்று கூறும் மக்களையே தேவன் தேடுகிறார். கடமைக்காக அல்லாமல் அன்போடு அவருக்கு அடிபணியும் மக்களையே தேடுகிறார். இந்தியாவில் தேவனுடைய ஊழியம் வளர முன்பைவிட அதிகமான அர்ப்பணிக்கப்பட்ட ஊழியர்கள் தேவை. யுக்திகள், திட்டங்கள் மற்றும் வளங்கள் அவசியமானாலும், தேவன் அழைக்கும்போது நான் உள்ளேன் என்று கூறுபவர்களையே அவர் தேடுகிறார். ஒரு சிறிய கீழ்ப்படிதலின் மூலம் தேவன் நடப்பிக்கும் கிரியையை நாம் குறைத்து மதிப்பிடமுடியாது. அந்தக் கழுதைக்குட்டியின் உரிமை யாளர் இயேசுவுக்கு தன் கழுதைக் குட்டியை காணிக்கையாக தந்தது, இத்தனைத் தலைமுறைகளைக் கடந்தும் அது பேசப்படும் என்று அவர் எண்ணியிருக்க மாட்டார். நாமும் தேவனுக்குக் கொடுக்கும் காணிக்கைச் சிறியதாக இருந்தாலும் தேவன் அதை கணக்கில் வைத்துள்ளார். இவ்வூழியப்

பிரயாணத்தில் நீங்களும் எங்களுடன் பயணிக்க அழைக்கிறேன். ஜெபத்தில் இன்னும் ஆர்வமாய், கொடுப்பதில் இன்னும் உதாரத்துவமாய், உழைப்பில் இன்னும் உண்மையாயிருப்போம். நாம் எதையும் நமக்கென்று வைத்துக் கொள்ளாமல் தேவனின் கரங்களில் ஒப்புக்கொடுக்கும்போது கழுதைக் குட்டியைப்போல நம்மையும் அவர் தமது மகிமைக்கென பயன்படுத்துவார்.

## புனித மைல்கல் - கிருபையின் தருணம்

தேவனின் மிகுந்த கிருபையினால் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் புதிய காரியதரிசியாக பொறுப்பேற்கும் ஆராதனை ஏப்ரல் 1, 2025 அன்று சென்னை வேப்பேரியிலுள்ள இம்மானு வேல் மெத்தடிஸ்ட் ஆலயத்தில் நடை பெற்றது. இது ஒரு விழாவாக அல்லாமல் ஆவிக்குரிய, தேவ பிரசன்னம் நிறைந்த தேவ பிள்ளைகளின் ஐக்கியத்தோடுக் கலந்த சரித்திரத் தருணமாக அமைந்தது. தேசமெங்கிலுமிருந்து ஊழியர்கள், ஊழிய ஸ்தாபனத் தலைவர்கள், ஜெப வீரர்கள் மற்றும் பங்காளர்கள் மகிழ்ச்சியோடு, ஒருமனதுடன் கலந்துகொண்டது நம் ஊழியத்தின் மீது அவர்கள் கொண்டிருந்த அன்பையும், அர்ப்பணிப்பையும் படம் பிடித்துக் காட்டியது. உங்களின் வருகை எங்களுக்கு மிகுந்த உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் அளித்தது. இதினி மித்தம் அறியப்படாதோரை சந்திக்கும் பணியில் நம் அனைவருக்கும் இருக்கும் அழைப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆராதனையை சிறப்பித்த பேராயர், ஸ்தாபன ஊழியர்கள், இயக்கத் தலைவர்கள் மற்றும் கலந்துகொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஆவியானவரின் வழிநடத்துதல்

இந்த ஆராதனை தீர்க்கதரிசன ஜெபங்களாலும், தேவ வழிநடத்து தலினாலும் நிறைந்திருந்தது. நான் இந்த தலைமைத்துவப் பொறுப்பை ஏற்கும் வேளையில் ஞாபகப்படுத்தப்பட்ட ஒரு காரியம், பணி உயர்வுகள் தேவனிடமிருந்து மாத்திரம் வருகிறது. சங். 75:6-7இல் கிழக்கிலும் மேற்கிலும், வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது. தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்துகிறார் என்று வாசிக்கிறோம். இது ஒரு புதிய ஆரம்பமே. ஆழ்ந்த விசுவாசத்தோடும், உறுதியானக் கூட்டு முயற்சியோடும், பகிரப்பட்ட தரிசனங்க ளோடும் முன்னேறிச்சென்று, சுவிசேஷத்தை இன்னும் கேள்விப் படாதோர் மத்தியில் எடுத்துச்செல்வோம். அறுப்பு மிகுதி எனவே திறமைமிக்க தேவனின் வல்லமையால் நாம் இணைந்து முன்னேறுவோம்.

## புதிய நிர்வாகிகளின் அறிமுகம் & ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட ஒரு கூடுகை

ஏப்ரல் 6ஆம் தேதி பாளையங்கோட்டை யிலுள்ள FMPB, சிநேகாலயாவில் நிர்வாகக் குழுவினரின் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. அர்ப்பணமுள்ளத் தலைவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூடுகையில் தலைவர்கள், ஆதரவாளர்கள் மற்றும் ஜெப வீரர்கள் என 300க்கும் மேற்பட்டோர் தென் தமிழக பணி மாவட்டங்களிலிருந்து

வந்திருந்தனர். இந்தக் கூடுகை ஓர் ஆவிக்குரிய ஐக்கியத்திற்கும், வல்லமையான ஜெபத்திற்கும் வழிவகுத்து கொடுத்தது. அனைவரையும் கனிவோடு உபசரித்து, திறம்பட திட்டமிட்டு இக்கூடுகை நடத்திய தலைவர்களின் குழுவிற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது இயக்கத்தின் தலைவர் திரு. ஜாண் சாமுவேல், உபதலைவர் திரு. சாம் பொன்னையா, நிதிக்காவலர் திரு. நெல்சன் அவர்களோடு நானும் புதிய பொதுச் செயலராக இணைந்து FMPBயின் தரிசனத்தைப் பற்றிப் பகிர்ந்து கொண்டதில் பேரானந்தம் கொண்டோம்.

## திருச்சபை ஊழிய உறவு மற்றும் கூட்டாண்மை

ஏபரல் 5 அன்று நெல்லை சி.எஸ்.ஐ. பேராயர் அருட்திரு. பர்னபாஸ் ஐயா அவர்களுடன் நாங்கள் செலவிட்ட நேரங்கள் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. திருச்சபைகளின் ஊழிய சரித்திரத்தைத் திரும்பிப்பார்க்க செய்த ஒரு அர்த்தமுள்ள சந்திப்பாக இருந்தது. இது ஒரு சாதாரண சந்திப்பாக மாத்திரம் இல்லாமல் மறுபடியும் இணையும் ஒரு தருணமாக இருந்தது. தேவனின் இறுதிக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஒவ்வொரு திருச்சபையும் FMPB போன்ற ஊழியங்களுடன் இணைந்து செயல்படுதைக் குறித்துக் கலந்தாலோசித்தோம்.

திருச்சபையானது ஊழியத்தின் பிறப்பிடமாக இருந்து விசுவாசத்தை ஊட்டி, ஊழியர்களை அறுவடைக் களங் களுக்கு அனுப்பியது. பேராயருடனான எங்கள் குழுவின் கலந்துரையாடல் மூலம் இந்த உண்மையை உறுதிப் படுத்திக்கொண்டு நமது கூட்டாண்மையை வலுப்படுத்த புதிய வழிகள் பிறந்தன. நாங்கள் ஒன்றிணைந்து நமது அங்கத்தினர்களுக்கு ஊழிய விழிப்புணர்வு, இணைந்து ஜெபிக்கும் கூடுகைகள், வாலிபர்களின் ஈடுபாடுகள் மற்றும் தலைமைத்துவப் பயிற்சிகள் போன்ற வலுவான வழிகளை ஆராய்ந்தோம். தேவ இராஜ்ய விரிவாக்கத்திற்காக திருச்சபையும், ஸ்தாபனமும் இணைந்து செயல்பட வேண்டுமென தீர்மானித்தோம்.

## உண்மையுள்ள ஊழியர்கள் எழும்ப ஓர் அழைப்பு

இந்திய தேசம் முழுவதிலும் பரப்பரப்பான நகரங்கள் துவங்கி கிராமங்கள் வரை கிறிஸ்துவின் ஒளி வீச செய்வதற்கு அநேக ஊழியர்கள் எழும்பவேண்டும். ஊழியத்திற்கான அழைப்பென்பது எங்கோ தூரத்திலிருந்து ஒலிக்கும் எதிரொலி அல்ல. இத்தேசத்தின் இதயத்திலிருந்து எழும்பும் தெய்வீக அழைப்பு. இந்தியாவுக்கு சுவிசேஷம் தேவை. ஆனால் யார் அதை எடுத்துச் செல்வார்கள்? ஆம் என்று சொல்லும் ஓர் சந்ததியை தேவன் எதிர்பார்க்கிறார். சுகபோகத்தைவிட்டு தேவனுக்குக் கீழ்ப்படிந்து, தியாகத் தோடு தேவை நிறைந்த இடத்தில் சுவிசேஷத்தை அறிவிக்க சுதேச ஊழியர்கள், போதகர்கள், ஆசிரியர்கள், செவிலியர்கள் மற்றும் பரிந்து பேசுபவர்கள் இன்று தேவை. நீங்கள் செல்வீர்களா? அல்லது உங்கள் குடும்பத்திலிருந்து, சபையிலிருந்து வாலிபர்களை அனுப்புவீர்களா?

## ஆசிரியர்களாகப் பணிசெய்ய ஓர் அழைப்பு

அமைதலான பழங்குடி கிராமங்களில் அமைந்திருக்கும் ஜாவ்டா (குஜராத்), பந்தேனி (ஜார்கண்ட்) ஆகிய பள்ளிகளில் நம் விசுவாசிகளின் பிள்ளைகள் கல்விக் கற்று வருகின்றனர். சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிள்ளைகளுக்கு படிப்பை மாத்திரம் அல்லாமல் சமுதாயத்தில் மதிப்பையும், கனவையும், எதிர்காலத்தைக் குறித்த தான நம்பிக்கையையும் ஊட்டி வளர்க்கிறோம். கல்வி கற்றுக்கொடுப்பவர்களாக மாத்திரமல்ல, அக்குழந்தைகளுக்கு வழிகாட்டுபவர்களாக, ஊக்குவிப்பவர்களாக, ஒவ்வொரு குழந்தையையும் ஓர் ஆத்துமா எனக் கருதி அவர்களுக்காக தங்கள் வாழ்க்கையை முதலீடு செய்யத் துணிந்த கிறிஸ்தவ ஆசிரியர்கள் தேவை. இது ஒரு உத்யோகம் அல்ல, இது ஒரு அழைப்பு. ஒரு குழந்தையின் திறமையில் நம்பிக்கை வைக்கும் ஆசிரியர்கள் அவர்கள் வாழ்க்கையை மாற்றும் வாய்ப்பைப் பெறுகின்றனர். எனவே வாய்ப்பு உண்மையானது. தேவையும் அவசரமானது.

## நடைபெறவிருக்கும் மாநாடுகளுக்காக ஜெபிக்க ஓர் அழைப்பு

தமிழ் நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெறும் மாநில மற்றும் பிராந்திய மிஷன் மாநாடுகளுக்காக நாம் ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறோம். இவை நற்செய்தி பணியின் வளர்ச்சிக்கான முக்கியத்துவம் வாய்ந்த கூடுகைகள். இக்கூடுகைகள் ஆவியானவரின் வழிநடத்துதலின் படி நடைபெறவும், அநேகருடைய வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டு, மிஷனெரி தரிசனத்தைப் பெற்றுக்கொள்ளவும், தேவனுக்கு தங்களை அர்ப்பணிக்கும் ஊழியர்கள் அநேகர் எழும்பிடவும் உங்கள் ஊக்கமான ஜெபத்தை எதிர்நோக்கி இருக்கிறோம்.

## நிர்வாகக் குழு கூட்டம்

2025 மே 3-4 தேதிகளில் நடைபெறும் நிர்வாகக் குழு கூட்டத்தில் எடுக்கப்படும் திட்டங்கள், தீர்மானங்கள் ஊழியத்தின் வளர்ச்சிக்குப் பிரயோஜனமாக இருக்க ஜெபியுங்கள்.

## நிலத்தில் விழுந்த கோதுமை மணி

ஹரியானாவில் ஊழியம் செய்து வந்த நமது மிஷனெரி திருமதி. ஜெயந்தி கார்த்திகேயன் (வயது 42) 14.04.2025 அன்று சாலை விபத்தில் உயிரிழந்தார். ரத்தியா பணித்தளத்தில் நடைபெற்ற அவரது அடக்க ஆராதனையில் ஆழ்ந்த வேதனையுடன் கலந்துகொண்டேன். திரு. கார்த்திகேயன் மற்றும் அவரது இரண்டு பிள்ளைகளை தேவன் ஆறுதல்படுத்த ஜெபிப்போம். மிகவும் சவாலான, ஆபத்தான பகுதிகளில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரிகளின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியத்திற்காக தொடர்ந்து கருத்தாய் ஜெபிப்போம்.

உங்கள் தொடர் ஜெபங்கள் மற்றும் ஆதரவுகள் தேவ இராஜ்ய பணியில் எங்களை பெலப்படுத்துகிறது. தேவன் நமக்கு முன்செல்கிறார் என்ற விசுவாசத்திலும், நம்பிக்கையிலும் முன்னேறிச்செல்ல தேவன் நமக்கு உதவி செய்வாராக!

தாழ்மையுடன் தேவ பணியில்,



**அருள்திரு. விஜய் பிரசன்னா ஐசக்**



# பரிசுத்தத்தில் இன்னும் அதிகமாய்

*"நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" 1பேதுரு 1:16*

எர்மைன் (Ermine) என்ற சிறிய விலங்கு 4-7 ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழும். வெள்ளை நிறத்தில், 13-29 செ.மீ. நீளம் உடைய இந்த விலங்கு, 300 கிராம் எடை கொண்டது. ரோமத்திற்காக இவைகள் வேட்டையாடப்படுகின்றது. முற்காலத்தில் இந்த சிறிய எர்மைன் விலங்கு தூய்மையின் சின்னமாகக் காணப்பட்டது. வேட்டைக்காரர்கள் இதைப் பிடிக்க வரும்போது அதனுடைய வெண்மையான ரோமம் களங்கப்படுவதைப் பார்க்கிலும் சாவதே மேல் என்று உயிரை விட்டுவிடுமாம் (Death before Defilement). இந்த சிறிய விலங்கே தூய்மையை தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டிருக்குமானால், தேவனுடைய சாயலாக உருவாக்கப்பட்ட நாம் எவ்வாறு பரிசுத்தமுள்ளவர்களாக வாழ வேண்டும் என்பதை சிந்திக்க வேண்டும்.

பரிசுத்தம் என்றால் **பிரித்தெடுக்கப்படுதல்** என்று பொருள்படுகிறது. பாவம் நிறைந்த உலகத்தின் செயல்பாடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு வாழ்வு. ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்த உடன் படிக்கைப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் எல்லாம் சாதாரணமாக உபயோகப்படுத்தப்பட்டவைதான். ஆனால் எப்போது அவைகள் உடன் படிக்கைப் பெட்டிக்குள் தனியாக **பிரித்தெடுக்கப்பட்டு** வைக்கப்பட்டதோ அப்போதே அவைகள் மிகவும் பரிசுத்தமானவைகளாகியன (எபி.9:3-4).

எபி.12:14இல் சொன்னபடி பரிசுத்தமில்லாமல் நாம் தேவனை தரிசிக்க முடியாது. பரிசுத்தம் தேவனின் குணாதிசயம். அதை இயேசு கிறிஸ்துவில் அவரது வார்த்தைகளின் மூலம் தேவன் நமக்கு வெளிப்படுத்தி இருக்கிறார். நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களை அறிக்கையிட்டு, அவரின் இரத்தத்தின் மூலமாக பாவ மன்னிப்பைப் பெற்று, பிதாவாகிய தேவனோடு ஒப்புரவாகி, இயேசு கிறிஸ்துவின் சாயலில் இந்த உலகத்தில் சாட்சிகளாக வாழ்வதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம்.

## எதிலெல்லாம் பரிசுத்தம் தேவை?

- ஆடை அலங்காரங்களில் (யாத்.40:13-15).
- கண்களின் பார்வையில் (யோபு 31:1, மத்.5:28, 6:22-23).
- பேச்சில், எண்ணங்களில் (சங்.66:18).
- சரீரம் மற்றும் பாலியல் உறவில் பரிசுத்தம் (1கொரி.3:17, 6:19, 1பேதுரு 1:14-15)

இப்படிப்பட்ட அநேக காரியங்களில் நாம் பரிசுத்தத்தோடு கூடிய முன்மாதிரியான வாழ்வு வாழ வேண்டும். யோ.8:36இல் ''குமாரன் (இயேசு) உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" என்று சொல்லியபடி நம் பாவங்களை, அக்கிரமங்களை, மீறுதல்களை அகற்றி பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுதலையாக்கி பரிசுத்தப்படுத்துவார்.

## பரிசுத்தத்தில் வளர நாம் செய்யவேண்டியவை

### 1. அனுதின ஜெபத்தில் நிலைத்திருத்தல்

***ஜெபிக்கக் கற்றுக்கொண்டவன் பரிசுத்த வாழ்வின் இரகசியத்தை அறிந்து அனுபவிக்கிறான்.***
*– வில்லியம் ஷா*

பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள அனுதின ஜெபம் மிக மிக அவசியம்.

- இயேசு பிதாவிடம் தனித்து ஜெபித்தார் – மாற்கு 1:35 (தனி ஜெபம்)
- தனது சீஷர்களோடு ஜெபித்தார் – லூக்கா 21:36-37 (குழு ஜெபம்)
- லாசருவின் கல்லறையில் ஜெபித்தார் – யோவான் 11:41-44.

நாமும் தனி ஜெபம், குழு ஜெபம், குடும்ப ஜெபம் என பல்வேறு விதங்களில் அடிக்கடி, தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். இந்த ஜெபப் பழக்கம் நம்மை பரிசுத்தத்தில் வளர்வதற்கு வழிநடத்தும். இயேசுவுக்கு ஒப்பான முன் மாதிரிகளாக வாழ்வதற்கு நம்மை தகுதிபடுத்தும்.

- ஜெபம் தேவ பிள்ளைகளின் உயிர் மூச்சு
- ஜெபம் நம் வாழ்வில் பரிசுத்தத்தைக் கூட்டும்
- ஜெபம் தேவனின் சிங்காசனத்தை அசைக்கும்

***அடிக்கடி ஜெபம் செய்யுங்கள், ஏனென்றால் ஜெபம் ஆத்துமாவுக்கு ஒரு கேடயம், தேவனுக்குச் செலுத்தும் ஒரு பலி, சாத்தானுக்கு அது சவுக்கடி.***
*– ஜான் பனியன்*

எனவே, நாம் தேவனோடு ஜெபத்தில் அமர்ந்திருக்கும் நேரங்களை அதிகப் படுத்த வேண்டும். மோசே, நெகேமியா, எஸ்தர், எசேக்கியா, யோபு, தானியேல் போன்ற தேவ பிள்ளைகள் ஜெபத்தால் தங்கள் வாழ்வில் வெற்றி பெற்றவர்கள். நமது ஊழியத்தில் ராஜஸ்தான் மாநிலம் கஜுராலா பணித்தளத்தில் விகாஷ் என்பவர் TVS ஏஜென்சி நடத்தி வந்தார். நான்கு மாத காலமாக பயங்கர முதுகு வலி, இதய வீக்கம், கல்லீரல் வீக்கம் என பல நோய்களால் மரண அவதிப்பட்டார். அவரது மனைவி மாதுரி இயேசுவை ஏற்றுக்கொண்டு கணவருக்காக கண்ணீரோடு ஜெபித்தபோது தேவன் அவருக்கு பரிபூரண சுகம் தந்தார்.

***கண்களிலிருந்து கண்ணீர் மழை பொழியாத வரை ஆத்துமாவில் அழகிய வானவில் தோன்றாது.***
*– ஜான் வான்ஸ்*

தொடர்ந்து நம்முடைய தனிப்பட்ட வாழ்விலும், குடும்பங்களிலும் காலை, இரவு ஜெப நேரங்களை கூட்டுவோம், அதிகமாய் ஜெபிப்போம், ஜெயம் பெறுவோம்.

## 2. தேவனின் வார்த்தையில் நிலைத்திருத்தல்

யோவான் 15:7இல் "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்."

- இயேசு வேதபாரகரோடு வேதத்தை வைத்து ஆலோசித்தார் (லூக்கா 2:46).
- சோதனையின் போது வேத வசனங்களை பதிலாகச் சொன்னார் (மத்தேயு 4:4,7,10).
- எனவே நாமும் வேத வசனங்களை அதிகம் வாசிக்க வேண்டும் (சங்கீதம் 119:7-11).
- வேத வசனங்களை ஆராய்ந்து தியானிக்க வேண்டும் (யோவான் 5:39).

பல சமயங்களில் நம்மிடம் இருக்கும் வேதாகமத்தின் முக்கியத்துவத்தை நாம் பொருட்படுத்துவதில்லை, உதாசீனப் படுத்துகிறோம். வேதம் பாதைக்கு வெளிச்சம் காட்டும் என்பதை மறந்து வேறு பாதையை நோக்கி செல்கிறோம். இந்த வெளிச்சத்தை பலபேர் காணக் கூடாமல் இருக்கின்றார்கள். நானும் அதில் ஒருவனாக இருந்தேன்.

வேதத்தை வாசிப்பதால் மாற்றம் ஏற்படுமா என்றால் நிச்சயமாக மாற்றம் உண்டாகும். நான் வைராக்கியமான ஒரு இந்துக் குடும்பத்தில் பிறந்து பக்தி மார்க்கத்தில் வளர்க்கப்பட்டேன். நான் 8ஆம் வகுப்பு படிக்கும்போது கிறிஸ்மஸ் நாட்களில் ஈரோடு கிதியோனியர் சங்கம் எங்கள் பள்ளிக்கு வந்து கேக் மற்றும் ஒரு புதிய ஏற்பாட்டை கொடுத்தார்கள். இனிப்பை வாங்குவதற்காக ஆர்வமுடன் சென்ற நான் அந்த புதிய ஏற்பாட்டையும் வாங்கினேன். அநேக நாட்கள் அந்த புதிய ஏற்பாட்டில் உள்ள வசனங்களை வெறும் பேச்சு போட்டிக்காக மட்டுமே உபயோகப்படுத்தினேன். 1984ஆம் ஆண்டு எனது 18ஆம் வயதில் என் அப்பா புதிய ஏற்பாடு + சங்கீதங்களும் என்ற புத்தகத்தை வாசிப்பதைப் பார்த்தேன். அதைப் பார்த்த நானும் என் புதிய ஏற்பாட்டை வாசிக்க ஆரம்பித்தேன். மூன்று மாதங்களில் 6 முறை வாசித்தேன். வசனங்கள் எனக்குள் கிரியை செய்ய ஆரம்பித்தது. இயேசு கிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று, கடந்த 41 ஆண்டுகள் இயேசுவின் பிள்ளையாக வாழ தேவன் கிருபை செய்திருக்கிறார். கடந்த 33 ஆண்டுகள் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் முழுநேர மிஷனெரிப் பணியாளனாக ஊழியம் செய்யும் கிருபையை தேவன் எனக்குத் தந்துள்ளார்.

***சத்திய வேதம் நம் அறிவை பெருக்குவதற்காக அல்ல, நம் வாழ்க்கையை மாற்றுவதற்காகவே கொடுக்கப்பட்டது.*** *- டி.எல். மூடி*

## 3. தேவ பிள்ளைகளோடு ஐக்கியத்தில் நிலைத்திருத்தல்

யோவான் 15:12இல் இயேசு கூறியதாவது "நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது." இயேசுவின் அன்பிலே நாம் வாழ

வேண்டும். அது நமக்காக தன்னையே தியாகமாய் சிலுவையில் தந்த அன்பு. நம்மை முழுமையாய் மன்னித்து, உள்ளபடி ஏற்றுக்கொண்டு, அரவணைக்கும் அன்பு. இந்த இயேசுவின் அன்பை நாம் நம்முடைய குடும்பங்களில் காட்டவேண்டும். கணவன், மனைவி, பிள்ளைகள், பெற்றோர், உடன் பிறந்தோர், நெருங்கிய உறவினர்கள், நண்பர்களோடு சேர்ந்து வாழ வேண்டும் (கொலோ.3:13).

நாம் வாழும் சமுதாயத்தில், திருச் சபையில் முன் மாதிரிகளாக வாழ வேண்டும். நாம் ஊழியம் செய்யும் குஜராத் மாநிலம், அம்பாபானி கிராமத்தில் சிலர் ஆண்டவரை ஏற்றுக்கொண்டதால், கிராமத்து பொது கிணற்றில் அவர்கள் தண்ணீர் எடுப்பதற்கு கிராமத் தலைவர் தடை செய்தார். விசுவாசிகள் அனை வரும் ஆலயத்தில் கூடி ஜெபித்தனர். ரஞ்சித் என்ற நமது விசுவாசி தனது தோட்டத்தில் ஒரு கிணறு தோண்ட தேவன் சொன்னதாக ஒரு தரிசனம் கண்டார். 10 அடி ஆழத்தில் ஊற்றுத் தண்ணீர் கிடைத்தது. சில மாதங் களில் பொது கிணறு கோடை வெப்பத்தால் வறண்டுபோனது. அதே கிராம தலைவர் ரஞ்சித் மனைவி யிடம் வந்து, உங்கள் கிணற்றில் தண்ணீர் இறைத்துக்கொள்ளலாமா என்று கேட்டார். ரஞ்சித்தின் மனைவி கிராமத்தில் உள்ள அனைவரும் தண்ணீர் இறைத்துக்கொள்ளலாம் என்று கூறி இயேசுவின் அன்பை வெளிப்படுத்தினார். இந்த செயல் கிராமத் தலைவரின் மனதை மிகவும் தொட்டது. இதைத் தொடர்ந்து அம்பாபானி கிராமத்திலிருந்த 40 குடும்பங்களும் ஆண்டவரை ஏற்றுக்கொண்டனர். நாமும் இவ்வாறு அன்பின் கிரியைகள் மூலமாக ஆண்டவரை அறிவிக்க வேண்டும்.

### 4. கனி தரும் வாழ்வில் நிலைத்திருத்தல்

பரிசுத்தருக்காக கனிதரும் வாழ்வு வாழ வேண்டும். யோவான் 15:16ஆம் வசனத்தில் "நீங்கள் போய் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்" என்கிறார். இந்த இயேசு கனி தரும்படி நம்மை தகுதிப்படுத்துகிறார். ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலா.5:22,23). வேதத்தில் பக்தன் யோசேப்பின் வாழ்வை நாம் தியானிக்கும்போது, கடினமான சூழ்நிலைகளில் தனது அரசு பணியிலும், குடும்பத்தார் மத்தியிலும், ஆவியின் கனியின் குணாதிசயங்களை அவரது வாழ்வில் நிறைவேற்றி தேவனுக்கு மகிமையாக வாழ்ந்துள்ளார் (ஆதியாகம் 37-50 அதிகாரங்கள்).

***நாம் அதிகமான கனிகளை கொடுப்பதற்கு:***

- கொடியோடு இணைந்திருக்க வேண்டும்.
- கிளை வெட்டி, நறுக்கி நம்மை சுத்தம் செய்ய அவரில் நிலைத்திருக்க வேண்டும்.

*அவருக்காக பயன்பட நம்மை அழைக்கிறார். எனவே...*

- தனிப்பட்ட நபர்களுக்கு இயேசுவை சொல்லுவோம்.
- ஜெபக்குழுக்களை ஏற்படுத்தி நம் வீடுகளில் ஜெபிப்போம்.
- புதிய நபர்கள், குடும்பங்களைச் சந்தித்து, நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவின் ஊழியக் காரியங்களைச் சொல்லி மிஷனெரி தரிசனத்தைக் கொடுப்போம்.
- வியாதியஸ்தர்களை சந்தித்து ஜெபித்து வருவோம்.
- படிக்கும், வேலை பார்க்கும் இடங்களில் உடன் இருப்பவர்களுக்கு இயேசுவின் அன்பை சொல்வோம்.

இப்படி நாம் பரிசுத்த வாழ்வில் வளர்ந்து மற்றவர்களையும் பரிசுத்த வாழ்விற்கு நேராக வழிநடத்த தேவன் நமக்கு கிருபை செய்வாராக! ஆமென்.

*பரிசுத்தம் ஒன்றையே*
*வாஞ்சிக்கிறேன்*

*ஆனால் பலமுறை ஏனோ*
*தவறுகின்றேன்*

*உம்மால் அன்றி என்னால்*
*இயலாதையா*

*பரிசுத்தம் காத்திட பெலன் தந்திடும்*

**அருள்திரு. மணிமாறன்,**
செயலர் – மத்திய மண்டலம், திருச்சி.

# இந்திய வேதாகம சங்கத்துடன் கூட்டாண்மை



நமது இயக்கத்தின் தலைவர் திரு. ஜாண் சாமுவேல் அவர்கள், இந்திய வேதாகம சங்கத்தின் பொதுச் செயலாளர் Rev. Dr. கவிட்டோ ஜி. ஜிமோ அவர்களை பெங்களூரிலுள்ள அவர்களது அலுவலகத்தில் சந்தித்தார். இது ஒரு பயனுள்ள சந்திப்பாக இருந்தது. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூலம் நடைபெறும் வேதாகம மொழிப்பெயர்ப்புப் பணியிலும் மற்றும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்களால் மொழிபெயர்க்கப்பட்ட பல்வேறு மொழி வேதாகமங்களை வெளியிடுவதிலும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிற்கும், வேதாகம சங்கத்திற்கும் இடையிலான கூட்டாண்மை பற்றி கலந்தாலோசித்தார். இந்த சந்திப்பு எதிர்காலத்தில் நமது வேதாகம மொழிபெயர்ப்பு ஊழியத்தில் மேலும் முன்னேற உதவியாக இருக்க ஜெபிப்போம்.

# அப்படி இருக்கலாகாது...



பிரியமான சகோதர சகோதரிகளே!

“நான் கிறிஸ்துவை நேசிக்கிறேன், ஆனால் அநேக கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை பிரதிபலிக்கவில்லை. அவர்கள் வேதாகமம் காட்டும் கிறிஸ்துவின் போதனைகளின்படி வாழ்ந்தால் இந்தியர் அனைவரும் இன்று கிறிஸ்தவர்களாகி இருப்பார்கள்” என மகாத்மா காந்தி ஸ்டான்லி ஜோன்ஸிடம் கூறினார். இயேசு அவரைப்போல் வாழவேண்டியதின் அவசியத்தை நமக்கு கற்பித்தார். கிறிஸ்தவர்கள் வேதாகமத்தின் மதிப்பீடுகளின்படி வாழ்ந்தால் மட்டுமே உலகத்தில் கிறிஸ்துவின் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

## உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது

தேவ இராஜ்யத்தின் மதிப்பீடுகள் அநேக வேளைகளில் இந்த உலகத்தின் மதிப்பீடுகளுக்கு எதிர்மறையாகவே இருக்கும். இம்முரண்பாட்டை நாம் புரிந்துகொள்ள மிகவும் போராடுகிறோம். கிறிஸ்துவின் சிந்தையை ஏற்றுக்கொண்டு அதன்படி செயல்படுவது நமக்கு கடினமாக இருக்கிறது. அதனால்தான் இயேசு தனிப்பட்டமுறையில் தன்னுடைய சீஷர்களை அழைத்து மத்.20:25-26இல் இராஜ்யத்தின் மதிப்பீடுகளை அவர்களுக்கு கற்பித்தார். உலகத்தின் அதிகாரிகள் பெருமையுடனும், ஆதிக்கத்துடனும் தங்கள் அதிகாரத்தை செலுத்துகிறார்கள். ஆனால் கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கு அழைக்கப்பட்டவர்களாகிய ‘**உங்களுக்குள்ளே அப்படியிருக்கலாகாது**’ .

உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு பணிவிடைக்காரனாய் இருக்கக்கடவன். தேவன் பிரபலங்களை தேடவில்லை. மாறாக சேவை புரியும் தலைவர்களையேத் தேடுகிறார். ஏனென்றால் தேவ இராஜ்யத்தின் மகத்துவம் பணிவிடை ஊழியருக்கு சொந்தமானது. கிறிஸ்தவர்களாகிய நம்மில் அன்பு, இரக்கம், பணிவு, நேர்மை ஆகிய புதிய கலாச்சாரம் காணப்படவேண்டும் என்பது எனது விருப்பம். இந்த ‘புதிய கலாச்சாரம்’ நம்முடைய வாழ்வு முறையில் சில மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ள அழைக்கிறது.

### 1. கழுதைப் பணியைச் செய்யுங்கள் (மத்.21:2)

இயேசுவின் சீஷர்கள் கிராமங்களுக்குச் சென்று பிரசங்கம் செய்து, அநேகரை குணப்படுத்தியப் பின் திரும்பி இயேசுவிடம் வந்தபோது இயேசு அவர்களில் இருவரை அழைத்து சற்றும் எதிர்பாராத ஒரு வேலையைக் கொடுக்கிறார். அது என்னவெனில் கழுதையைக் கொண்டுவரும் பணியை கொடுத்தார். அது இழிவானதாகத் தோன்றினாலும், அவர்கள் முணுமுணுக்காமல் கீழ்ப்படிந்து செய்தனர். அதைத்தான் கழுதைப் பணி என்று அழைக்கிறேன். இழிவாக கருதப்பட்ட எந்தப் பணியாக இருந்தாலும் அதை முன்வந்து செய்ய விருப்பம் காட்டவேண்டும். தேவன் நமக்கு

எந்த ஒரு வேலையைக் கொடுத்தாலும் அவருக்காக செய்து முடிப்போம் என்று தேவன் நம்மை நம்பமுடியுமா?

அநேக வருடங்களுக்கு முன்பு திருநெல்வேலி கல்லூரி மாணவர்களுக்காக பாபநாசத்தில் ஒரு பெரிய மாணவர் முகாம் நடத்தினோம். செயின்ட் சேவியர்ஸ் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் ராஜதுரை அவர்கள், முகாமிற்கு தேவையான காய்கறிகள் மற்றும் உணவுப் பொருட்களை வாங்கி, திருநெல்வேலியிலிருந்து பாபநாசத்திற்கு பேருந்தில் கொண்டுவரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் என்பது எனக்கு நினைவிருக்கிறது. இந்த முகாமில் கல்லூரி பேராசிரியர் இந்த அற்பமான வேலையைச் செய்தது பலருக்கு ஆசீர்வாதமாக அமைந்தது. இப்பணியே தேவ இராஜ்யத்திற்கான கழுதைப் பணி எனலாம்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுத் தலைவர்கள் அங்கத்தினர்களின் குடும்பங்களைச் சந்திக்க நீண்ட தூரம் நடந்து, அல்லது சைக்கிளில் செல்வதை நான் அறிவேன். அவர்களோடு வேதம் வாசித்து, ஜெபித்து அவர்களிடமிருந்து காணிக்கையைப்பெற்று அனுப்புகிறார்கள். இது ஒரு கடினமான வேலையாக இருந்தாலும், அற்பமாகத் தோன்றினாலும், தேவ இராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காக இப்பணியைச் செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரையும் தேவன் ஆசீர்வதிப்பார். தேவனின் பணியைச் செய்ய ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலுமிருந்து நமக்கு அர்ப்பணமுள்ள ஊழியர்கள் இன்றைய தேவை.

## 2. தலைவனே ஊழியன்; ஊழியனே தலைவன்

தலைவன் என்பவன் பணிவிடை ஊழியன்; பணிவிடை ஊழியனே தலைவன் என்ற இயேசுவின் போதனை உலகத்தின் பார்வையில் தலைகீழானது, குழப்பமானதாகவும் இருக்கிறது. இது பணிவிடை ஊழியம் செய்ய ஒரு புதிய சேவை கலாச்சாரத்தை அறிவுறுத்துகிறது. இயக்கத்தின் பொதுச் செயலாளர் முதல் மிஷனெரி வரை, இயக்கத்தின் தலைவர் முதல் ஜெபக்குழுத் தலைவர் வரை ஒவ்வொருவரும் அதிகாரத்துடன் ஆதிக்கம் செலுத்த அல்ல, அன்புடன் ஒருவருக்கொருவர் பணிவிடை செய்ய அழைக்கப்படுகிறோம். நம் இயக்கத்தின் தலைமைத்துவம் இயேசுவை பிரதிபலிக்கும் வண்ணமாக அன்பு, பணிவு, கருணை மற்றும் அக்கறை போன்றவற்றில் முன்மாதிரியாக இருக்க வேண்டும். தன்னலமற்ற சேவை என்பது கிறிஸ்தவத்தின் முத்திரை அடையாளமாகும்.

தேவனால் தூண்டப்பட்டு, ஏற்படுத்தப்பட்ட ஒரு இயக்கமாக இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வாழும் ஏழைகள் மற்றும் நலிந்தவர்களின் முழுமையான வளர்ச்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறோம். ஏனெனில் தேசத்திற்கு பணிவிடைச் செய்யவும், தேசத்தைக் கட்டி எழுப்பவும் விரும்புகிறோம். ஊழியத்தின் மற்றொரு பகுதியாக முதியோர் கல்வி, சுகாதார பராமரிப்பு, சிறுவர் மேம்பாட்டுத் திட்டம், சமுதாய மேம்பாட்டுத் திட்டம், சிறுவர் கல்வி, விடுதிகள், ஆவிக்குரிய வளர்ச்சி திட்டம், சபை வளர்ச்சி திட்டம் போன்றவற்றிலும் ஈடுபட்டு வருகிறோம். இவ்விதமான சேவைப் பணிகளில் ஈடுபடும்போது உங்கள் ஜெபத்தையும், ஆதரவையும் வேண்டுகிறோம்.

டோனாவூர் ஐக்கியம் மற்றும் சந்தோஷ வித்யாலயாவை சகோ. ஜேம்ஸ் தர்ம பாலனுடன்பார்வையிட்டேன். அங்கு படிக்கும் நமது மிஷனெரிகளின் பிள்ளைகள், பள்ளி முதல்வர் மற்றும் தலைவரோடு செலவிட்ட நேரம் மகிழ்ச்சியாக இருந்தது. FMPB மற்றும் NSM மிஷனெரிகளின் 300க்கும் மேற்பட்ட பிள்ளைகள் இங்கு தங்கி படிக்கிறார்கள். நான் அவர்களை சந்தித்தபோது அவர்கள் கண்களில் பிரகாசத்தையும், அவர்களின் அணுகுமுறையில் ஆர்வத்தையும் காணமுடிந்தது.

நம் நாட்டின் எதிர்கால தலைவர்களாக நான் அவர்களைப் பார்க்கிறேன். நமது தேசத்தில் மிஷனெரி மருத்துவர்களாக, பொறியாளர்களாக, சிவில் ஊழியர்களாக, நீதிபதிகளாக, விஞ்ஞானிகளாக, ஆசிரியர்களாக, முழுநேர மிஷனெரிகளாக, சமுகத்தில் ஒரு தீர்க்கமான மாற்றத்தை கொண்டுவரும் அரசியல் தலைவர்களாக அவர்களைப் பார்க்கிறேன். அவர்களின் மென்மையான வாழ்க்கையில் பள்ளிப்படிப்பு மாத்திரமல்ல, பல்கலைக்கழகக் கல்வி, தொழில் மேம்பாடு, குணநலன் மேம்பாடு மற்றும் மிஷனெரி அழைப்பு ஆகியவற்றிற்காக செலவிட விரும்புகிறோம். பணித்தளங்களைப் பார்வையிட செல்வதுபோல நீங்களும் சந்தோஷ வித்யாலயாவில் படிக்கும் நமது மிஷனெரிகளின் பிள்ளைகளை சந்தித்து அவர்களை உற்சாகப்படுத்த வேண்டுகிறோம்.

1901ஆம் ஆண்டு அயர்லாந்தைச் சேர்ந்த ஏமி கார்மைக்கேல் அம்மா அவர்களால் மீட்கப்பட்ட குழந்தைகளுக்காக நிறுவப்பட்ட டோனாவூர் ஐக்கியம் தன்னலமற்ற சேவைக்கு அடையாளமாக இன்றும் திகழ்கிறது. அங்குள்ள வயதானவர்களுக்கும், ஏழைகளுக்கும் கிடைக்கும் இரக்கம் மற்றும் அக்கறையுள்ள சேவையைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். பணிவிடைத் தலைமைத்துவம் என்பது வாழ்வில் உடைந்தவர்களுக்கும், ஒதுக்கப்பட்டவர்களுக்கும் பணிவிடை செய்ய புறப்படுவதாகும். பணிவிடைத் தலைமைத்துவம் (Servant Leadership) என்பது போவதும் அல்லது அனுப்புவதுமே கிறிஸ்துவின் சேவைப் பணியாகும்.

### 3. அரைக்கச்சையுடன் பணிவிடை

அரசியல் பொறுப்பு வகிக்காதவர், நிறுவனத்தை கட்டாதவர், இராணுவத்தை ஒருபோதும் வழிநடத்தாதவர் முற்றிலும் மாறுபட்ட தலைமைத்துவத்தை அறிமுகப்படுத்தினார். அதை நிர்வாக கூடுகையில் உருவாக்காமல் ஒரு மேல் வீட்டு அறையில் அறிமுகப்படுத்தினார். இயேசுவின் கடைசி இராப்போஜனத்தின்போது இயேசு தமது அதிகாரத்தையும், தமது இராஜ்யத்தின் முடிவையும் அறிந்திருந்த போதிலும் அவர் மேஜையிலிருந்து எழுந்து மண்டியிட்டு சீஷர்களின் கால்களை, குறிப்பாக தன்னை காட்டி கொடுக்க விருக்கும் சீஷனின் கால்களையும் கூட கழுவி, துண்டை எடுத்து துடைக்க துவங்கினார். உலகத்தின் மீது சகல அதிகாரமும், வல்லமையும் படைத்தவர் தமது அதிகாரத்தினால் அல்ல, துண்டு துணியைப் பயன்படுத்துவதின் மூலம் ஒரு தாழ்மையான பணிவிடை ஊழியராக தேவ இராஜ்யத்தின் மதிப்பீடுகளை வெளிப்படுத்தினார். இவ்விதமாக செய்ததின் விளைவாக வரப்போகும் இளந்தலைமுறைக்கு ஒரு புதிய அர்த்தத்தை வெளிப்படுத்தினார்.

தலைமைத்துவம் சேவை செய்கிறதிலிருந்து துவங்குகிறது. நீங்கள் விடுமுறை வேதாகமப் பள்ளியில் உதவி செய்தாலும், ஞாயிறு பள்ளியில் ஈடுபட்டாலும், மிஷனெரியாக தொலை தூரத்தில் பணியாற்றினாலும், உன்னதமான தலைவர்களாக மற்றவர்களை உயர்த்துவதற்காக பணிந்து நிற்க வேண்டும். பட்டம், பதவிகளுக்காக அல்ல, துண்டுத் துணியை (Towel) எடுத்து பணி செய்யும் கலாச்சார மாற்றம் ஏற்படவேண்டும்.

துண்டுத் துணியுடன் சேவை செய்தல் என்பது, அதிகாரத்திற்காக முழுக்கமிடுவதும் மற்றும் ஒருவர் மீது ஒருவர் ஏறி உச்சத்தை அடைவதும் போன்ற பிம்பத்தை நீக்கி துண்டுத் துணியுடன் பணிவிடை செய்யும் சமுதாயத்ததை உருவாக்க வேண்டும். தலைவர்களாக இருப்பவர்கள் குடும்பங்களிலும், இயக்கத்திலும், எந்த ஒரு கலாச்சாரத்தில் இருந்தாலும் துண்டுத் துணியைக் கொண்டு சேவை செய்ய புறப்பட்டால் அது முன்னேற்றத்திற்கானதாகவும், செழிப்பானதாகவும், பலமானதாகவும் இருக்கும். கிறிஸ்தவ குடும்பங்களில் கணவர் மனைவிக்கு அதி காரியாக அல்ல, மனைவி கணவருக்கு அதிகாரியாக அல்ல. இருவரும் ஒருவரை ஒருவர் மதித்து, நேசித்து, உயர்த்த வேண்டும்.

### 4. உங்களுக்கு சொந்த லேம்ப்ரைன் (Lamberene) வேண்டும்

ஜெர்மனியைச் சேர்ந்த ஆல்பர்ட் சுவைட்சரின் வாழ்க்கை அசாதாரணமானது. இவர் 1899இல் தத்துவத்தில், இறையியலில் முனைவர் பட்டம் பெற்றவர். ஸ்ட்ராஸ்பர்க் பல்கலைக்கழக விரிவுரையாளர். செயின்ட் நிக்கோலஸ் தேவாலயத்தின் போதகர் மற்றும் செயிண்ட் தாமஸ் இறையியல் கல்லூரியின் முதல்வராகவும் பணியாற்றினார். இவரை தேவன் தனக்கு பணிவிடை செய்ய அழைத்தபோது, தேவனுக்குக் கீழ்ப்படிந்து, 1913இல் மருத்துவ பட்டம் பெற்று 1914இல் காபோனுக்கு மருத்துவ மிஷனெரியாக புறப்பட்டுச் சென்றார். 1952இல் இவரது பணிவிடை ஊழியத்தைப் பாராட்டி அமைதிக்கான நோபல் பரிசு கொடுக்கப்பட்டது. உலக பிரசித்திப்பெற்ற டைம்ஸ் பத்திரிக்கையின் அட்டைப்படத்தில் இவரது புகைப்படத்தைப் போட்டு உலகத்தி லேயே தலைசிறந்த மனிதர் என்று வாழ்த்தி எழுதியிருந்தனர். ஆல்பர்ட் சுவைட்சர் லேம்ப்ரைன் என்ற இடத்தில் ஊழியம் செய்தபோது, ஒரு புதிய மருத்துவ மனையைக் கட்டி கூடுதலாக சேவை செய்தார். உங்களுடைய வாழ்வில் லேம்ப்ரைன் எது என்று கண்டுபிடித்து புதிய அத்தியாயத்தைத் தொடங்குங்கள்.

தலைமை போஸ்ட் மாஸ்டர் ஜெனரலாகவும், அஞ்சல்வாரிய உறுப்பினராகவும் இருந்து ஓய்வு பெற்றப் பிறகு என்னுடைய லாம்ப்ரேனாக நான் தெரிந்துகொண்டது என்னவென்றால், இந்தியாவில் அர்ப்பணமுள்ள இளைஞர்கள் சிவில் சர்வீஸில் இணைந்திட, அவர்களை உற்சாகப்படுத்தி இலவசமாக பயிற்சி அளித்து வருவது. கடந்தாண்டு மணிப்பூரிலிருந்து ஒரு சகோதரி ஐ.ஏ.எஸ். படித்து அவருடைய பகுதி யில் ஒரு அதிகாரியாக பணிசெய்ய வேண்டுமென்று வந்தபோது, அவளுக்கு பயிற்சி கொடுத்து உருவாக்கியதால் இன்று மணிப்பூரில் அவளுடைய இனத்தில் முதல் பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக பணியாற்றி வருகிறார். உங்கள் வாழ்வில் லேம்ப்ரைன் என்ன என்பதை அறிந்து அதை செயல்படுத்துவதற்கு துணிந்து முன்வாருங்கள்.

## 5. சிறந்த குறியீட்டைப் பின்பற்றுங்கள்

இயேசு கிறிஸ்துவின் மாதிரியான வாழ்வானது, நமது பதவி, கௌரவம், ஆற்றல் மற்றும் அதிகாரம் பற்றிய முழு கணிப்பைக் கேள்விக் குறியாக்குகிறது. நமக்குள் யார் பெரியவர் என்று சீஷர்கள் வாதிட்டபோது, உங்களில் பெரியவராக விரும்புகிறவர் உங்களுக்குள்ளே பணிவிடைக்காரராக இருக்க வேண்டும். முதன்மையாக இருக்க விரும்புகிறவர் அநேகருக்கு பணிவிடைக்காரராக இருக்க வேண்டும் என்பதை இயேசு தெளிவுப்படுத்தினார். இதை சுருக்கமாகச் சொன்னால் தாக்கம் ஏற்படுத்துகிறவராகவும், செல்வாக்கு மிக்கவராகவும், அதே நேரத்தில் பணிவிடை ஊழியராகவும் இருக்க வேண்டும்.

அன்னை தெரசா, 1946ஆம் ஆண்டு கல்கத்தாவிலிருந்து டார்ஜிலிங்க்கு இரயிலில் பயணம் செய்தபோது ஆண்டவரின் குரலைக் கேட்டார். சேரிப் பகுதிகளுக்குச் சென்று ஏழைகளிலும் மிகவும் ஏழ்மையானவர்களுக்கு கிறிஸ்துவின் சேவையைச் செய்ய வேண்டும் என்ற அழைப்பைப் பெற்றார். பின்னர் பல மாத ஆயத்தத்திற்குப் பிறகு அவர் கல்கத்தாவுக்குத் திரும்பினார். அங்கு சேரிப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு சேவை செய்து மிஷனெரிஸ் ஆஃப் சாரிட்டியைத் தொடங்கினார். அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு, பாரத ரத்னா விருது, டெம்பில்டன் பரிசு போன்ற பல விருதுகள் வழங்கப்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அன்னை தெரசா **பிறருக்காக வாழாத வாழ்க்கை வாழ்வே இல்லை** என்கிறார். உங்களுக்காக அல்ல, மற்றவர்களுக்காக வாழுங்கள், தேசத்தில் மாற்றத்தை கொண்டுவர அநேக அன்னை தெரசாக்கள், சாம் கமலேசன்கள், பேட்ரிக் ஜோஷ்வாக்கள் தேவை.

தேவ இராஜ்யத்தின் கலாச்சாரம் இவ்வுலகின் கலாச்சாரத்திற்கு எதிராகத்தான் இருக்கும். எனவே

- தாக்கம் ஏற்படுத்தும் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்தாலும் பணிவோடு இருங்கள்
- முரட்டுத்தனமாக அல்ல, மென்மையாக இருங்கள்
- ஆணவமாக அல்ல, கனிவாக இருங்கள்
- இரக்கமற்றவர்களாக அல்ல, இரக்கமுள்ளவர்களாக இருங்கள்
- பொய் சொல்பவர்களாக அல்ல, உண்மையாக இருங்கள்
- வெறுப்பவர்களாக அல்ல, நேசிப்பவர்களாக இருங்கள்
- சுயநலக்காரராக அல்ல, தயாளராக இருங்கள்

**உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது.** தேவனின் பார்வையில் தலைமைத்துவம் என்பது மற்றவர்களுக்கு சேவை செய்வதிலிருந்து துவங்குகிறது. தேவ இராஜ்யத்திற்கெதிரான கலாச்சாரத்தை முறியடித்து இந்திய தேசத்தில் தேவனின் இராஜ்யத்தை நிலைநாட்டிட நம்மை ஒப்புக்கொடுப்போம். கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவருக்கும் உதவி செய்வாராக! ஆமென்!!

**திரு. ஜாண் சாமுவேல்**, தலைவர், FMPB

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 11வது பொது காரியதரிசியாக

# அருட்திரு. விஜய் பிரசன்னா ஐசக் அவர்கள் பொறுப்பேற்ற ஆராதனை



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 11வது பொது காரியதரிசியாக அருட்திரு. விஜய் பிரசன்னா ஐசக் அவர்கள் பொறுப்பேற்ற ஆராதனையானது சென்னை, வேப்பேரியிலுள்ள இம்மானுவேல் மெத்தடிஸ்ட் ஆலயத்தில் மிக பக்தியோடும், தேவனுக்கு நன்றி செலுத்தும் விதமாகவும் மிகச் சிறப்பாகவும் நடைபெற்றது. இந்த வரலாற்று நிகழ்வானது FMPBயின் ஊழியப் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்கத் தருணமாக அமைந்தது. ஏனெனில் தேவனின் கிருபை மற்றும் வழிகாட்டுதலின்படி இத்தலைமைத்துவம் அமைந்தது.

## ஆராதனையின் முன்னுரை:

இந்த ஆராதனையானது சென்னை, FMPBயின் வாலிபர் குழுவின் துதி ஆராதனையுடன் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு மகிழ்ச்சி கலந்த தேவ பிரசன்னத்துடன் நிறைந்த சூழலை தேவன் அமைத்துத் தந்தார். ஊழியர்கள், மிஷனெரிகள், மூத்த மிஷனெரிகள், மிஷன் பங்காளர்கள் மற்றும் நாடு முழுவதிலும் இருந்து வந்த நலம் விரும்பிகள் இந்த பரிசுத்த நிகழ்வில் கலந்துகொண்டனர். நமது FMPBயின் 60 ஆண்டு கால ஊழியப் பயணம் குறு காணொளியாக திரையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## வரவேற்பு மற்றும் தலைவர் உரை:

கூட்டத்தை முறையாகத் தொடங்கி வைத்த FMPBயின் தலைவர் திரு. ஜாண் சாமுவேல் அவர்கள் அங்குக் கூடியிருந்த அனைவரையும் அன்புடன் வரவேற்றார். முக்கிய பிரமுகர்கள், ஆலயத் தலைவர்கள் மற்றும் ஊழியத் தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களின் வருகையை சபையில் அறிவித்தார். அவரின் உரையில், ஊழியச் சூழலில் ஒரு ஆவிக்குரிய தலைவரின் அழைப்பு மற்றும் பொறுப்புகளைப் பற்றி



குறிப்பிட்டார். வேதத்திலிருந்து எடுத்துக்காட்டுகள் மற்றும் FMPBயின் மூத்த தலைவர்கள் விட்டுச்சென்ற மரபிலிருந்து சேவைப் பணியாளர் தரிசனத்தை வரும் தலைமுறையினருக்கு வழங்குவது மற்றும் உண்மையுள்ள உக்கிராணத்துவத்தைக் குறித்தும் வலியுறுத்தினார். புதிதாக தெரிந்தெடுக்கப்பட்ட அருட்திரு. விஜய் பிரசன்னா ஐசக் அவர்களை, பொது காரியதரிசி பொறுப்பை நிறைவு செய்த அருட்திரு. S. ஜாண் பெர்லின் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

## பொறுப்பேற்கும் ஆராதனையின் முறைமை மற்றும் செய்தி:

முறையாக பொறுப்பேற்கும் நிகழ்ச்சியை திருநெல்வேலி திருமண்டலத்தின் CSI பேராயர் அருட்திரு. A.R.G.S.T. பர்னபாஸ் அவர்கள் நடத்தி வைத்தார்கள். அருட்திரு. விஜய் அவர்கள் யாவருக்கும் முன்பாக அழைக்கப்பட்டு சபையின் முன்னிலையில் பதவி பிரமாணத்தை எடுத்துக்கொண்டார். அதைத் தொடர்ந்து முக்கிய பிரமுகர்கள், போதகர்கள் மற்றும் ஊழிய தலைவர்கள் அவர் மீது கரங்களை வைத்து ஜெபித்து அவரை தேவனின் கிருபைக்கும், வழிகாட்டுதலுக்கும் ஒப்புக்கொடுத்தனர். FMPBயின் நவோதயா குழுவினர் சிறப்பு அர்ப்பணிப்பு பாடல் பாடி யாவரையும் ஒரு அர்ப்பணிப்புக்குள் நடத்தினர். பின்னர் பேராயர் பர்னபாஸ் அவர்கள் புதிய காரியதரிசி மற்றும் கூடியிருந்த அனைவரையும் ஊக்குவிக்கும் விதமாக வேதத்திலிருந்து தனது செய்தியை பகிர்ந்துகொண்டார்.

## அருட்திரு. விஜய் பி. ஐசக்கின் ஏற்புறை:

அருட்திரு. விஜய் பி. ஐசக் அவர்கள் கொடுக்கப்பட்ட தலைமைத்துவத்தைத் தாழ்மையுடன் ஏற்றுக்கொண்டு மறுமொழி அளித்தார். அவர் தன் உரையில் தேவாதி தேவனுக்கும் அதைத் தொடர்ந்து செயற்குழுவுக்கும் அவருக்கு முன் பொறுப்பை நிறைவேற்றியவருக்கும் மற்றும் தனது குடும்பத்தினருக்கும், அவர்களின் நிலையான ஆதரவிற்கும் தனது ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துகொண்டார். ஜெப வாழ்வை ஆழப்படுத்தவும், ஊழியர்கள் மீதான கரிசனையை பலப்படுத்தவும், பணித்தள வளர்ச்சியை அதிகப்படுத்தவும் மற்றும் தேவ ஊழியத்தில் அடுத்த தலைமுறையினரை உற்சாகமாக பங்குபெற வைப்பதுமான இந்த இயக்கத்திற்கான தனது தரிசனத்தை அவர் பகிர்ந்துகொண்டார்.

## அவர் கூறியதாவது:

என்னை அழைத்தவருக்கு உண்மையுள்ளவனாகவும், முன்னோடிகளின் அடிச்சுவடுகளில் பயபக்தியுடனும், பணிவுடனும் நடக்கவும், தியாகத்துடன் சேவை செய்யவும், இயக்கத்தை ஜெபத்துடன் வழிநடத்தவும் என்னை அர்ப்பணிக்கிறேன். அவருடைய நாமம் மாத்திரம் மகிமைப்படுவதாக!

## வாழ்த்துரைகள் சிறப்பு ஜெபங்கள் மற்றும் ஆசீர்வாதம்:

அருட்திரு. D. மோகன் (புது வாழ்வு A.G. சபை, சென்னை), பேராயர் அருட்திரு. கதிரொளி மாணிக்கம் (ECI சென்னை), அருட்திரு. பிரேம்குமார் (மெத்தடிஸ்ட் திருச்சபை, புதூர்), அருட்திரு. கிறிஸ்டோபர் சாமுவேல் (உதவி பேராய செயலாளர், CSI கர்நாடக மத்திய பேராயம்), சகோ. G.P.S. ராபின்சன் (இயேசு சந்திக்கிறார்

ஊழியங்கள்), Dr. ஐசக் ராஜா (IMA பொதுச் செயலாளர்), அருட்திரு. கனாஜிபாய் (CNI குஜராத் பேராயம்) மற்றும் திரு. கனகராஜ் (ஜெபக்குழு தலைவர் & செயற்குழு உறுப்பினர்) ஆகிய பிரமுகர்களால் வாழ்த்துரைகள் பகிரப்பட்டது. FMPBயின் முன்னாள் துணைத் தலைவர் மூத்த அண்ணன் டாக்டர் சந்திர சேகர் அவர்கள் FMPBயின் எதிர்காலத்திற்காகவும், புதிய காரியதரிசி மற்றும் அவரது குடும்ப திற்காகவும் FMPBயின் மூத்த தலைவர்கள் மற்றும் ஊழிய ஸ்தாபன தலைவர்களுடன் இணைந்து சிறப்பு ஜெபத்தை ஏறெடுத்தார். பேராயர் அருட்திரு. A.R.G.S.T. பர்னபாஸ் அவர்கள் ஆசீர்வாதத்தை வழங்கினார். மேலும் வந்திருந்தவர்களை தலைமைச் செயலக செயலர் அருட்திரு. Dr. J.J. ஹரீஸ் அவர்கள் ஐக்கிய விருந்துக்கு அழைப்பு கொடுத்தார்.

அருட்திரு. விஜய் பிரசன்னா ஐசக் அவர்கள் பொறுபேற்ற ஆராதனை, தேவன் நம் இயக்கத்தில் தனது பணிக்காக தெய்வீகத் தலைவர்களை இன்றும் எழுப்புவதற்கு உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்பதற்கு சாட்சியாக அமைந்தது. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஒரு புதிய தலைமைத்துவத்திற்குள் அடியெடுத்து வைக்கும்போது, இந்தியாவில் அறியப்படாத மக்களுக்காக ஜெபிக்கவும் மற்றும் செயல்படவும் ஒன்றிணைந்து நிற்போம் என்ற புதிய நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்புடன் கூடியிருந்தவர்கள் கலைந்து சென்றனர்.

**Rev. Dr. J.J. ஹரீஸ்,** செயலர், FMPB தலைமைச் செயலகம்


## நிதி அலுவலகத்திலிருந்து




**இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்**

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

**ICICI** - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icici**

**SBI** - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

**Indian Bank** - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Vijayalakshmipuram, Ambattur

*தொடர்பு கொள்ள:* **finance@fmpb.org, WhatsApp: 7904648270**

**காணிக்கை அனுப்புவதற்கு QR கோடு வசதி**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களைத் தாங்கி வருகிற தாங்கள் தேவையானால் பார்கோடு வசதியையும் பயன்படுத்திக் கொள்ள பட்சமுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

# கஜுவாலா
## பணித்தள வரலாறு




இந்தியாவின் மிகப் பெரிய பரப்பளவு கொண்ட மாநிலம் ராஜஸ்தான். கி.பி. 1800இல் ஜார்ஜ் தாமஸ் என்ற வரலாற்று ஆராய்ச்சியாளர் முதன்முதலில் இந்த மாகாணத்திற்கு 'ராஜ்புதானா' என்று பெயரிட்டு அழைத்தார். அதன்பின் புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியரான ஜேம்ஸ் டாட், 'ராஜஸ்தானின் பழங்கால பொருட்கள்' என்கிற புத்தகத்தில் இவ்விடத்தை ராஜ்தான் அல்லது ராஜஸ்தான் என்று குறிப்பிடுகிறார். அக்காலத்தில் ராஜாக்களால் பாதுகாக்கப்பட்ட பிரதேசமானதால் **ராஜாக்களின் நிலம்** என்றும், **ராஜஸ்தான்** என்று அழைக்கப்பட்டது. ஜெய்பூர் இம் மாநிலத்தின் தலைநகராக திகழ்கிறது. மேற்கு பகுதியில் பிரமாண்டமாய் நிற்கிற ஆரவல்லி மலைத் தொடரும், வடக்கில் தோன்றி மிகப்பெரிய தார் பாலைவனத்தில் மறைகிற **காக்கர்** ஆறும் இம்மாநில்தின் பூலோக சிறப்பம்சங்கள். உலகின் பழமையான மலைத்தொடர்களில் ஒன்றாக கருதப்படும் ஆரவல்லி மலைத்தொடரில் அமைந்துள்ள **மவுண்ட் அபு** ஒரு மலைவாசஸ்தலமாகவும், மாநிலத்தின் ஒரே சுற்றுலா ஸ்தலமாகவும் காணப்படுகிறது. இம்மாநிலம் 41 மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. முற்காலத்தில் பழங்குடியினராலும், மத்திய காலத்தில் ராஜ்புத் வம்சத்தின் பல்வேறு இனக்குழுக்களாலும் ஆளப்பட்டு வந்தது.

பிரியாவாளி என்று முற்காலத்தில் அழைக்கப்பட்ட **காஜுவாலா**, பிகானேர் மாவட்டத்தின் ஒரு சிறிய நகரமாகும். இது பாகிஸ்தானின் சர்வதேச எல்லையை ஒட்டி 23 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இது பல்வேறு கிராமங்களை உள்ளடக்கிய ஒரு நடுத்தர பஞ்சாயத்தாகும். மிகக் குறைவான மழைப் பொழிவையும், வறட்சியான கால நிலையையும் கொண்டது. வெப்பக்காலத்தில் மிக அதிக வெப்ப நிலையையும் குளிர் காலத்தில் அதிக குளிரையும் கொண்ட ஒரு பிரதேசமாக காணப்படுகிறது. இங்கு நிலவுகிற தண்ணீர் பற்றாக்குறையும், குறைவான பொருளாதார வாய்ப்புகளும்

மக்களை வறுமையில் தள்ளி, இங்கிருந்து புலம்பெயர்ந்து செல்ல உந்துகிறது. பருத்தியும், கோதுமையும் அதிகம் விளைகிறது. காஜ்வாலா ஊரைச்சுற்றிலும் ஏராளமான பருத்தி ஆலைகளும், கடுகு எண்ணெய் ஆலைகளும் நிறைந்திருக்கின்றன. ஊரின் எல்லைப்புறங்கள் செங்கல் சூளைகளால் நிரம்பி காணப்படுகின்றன.



கால்வாய் பாசனம் உதவியுடன் வேளாண்மை சிறந்து விளங்குகிறது. பரந்துவிரிந்த பசுமையான விளைநிலங்கள் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன.

மஜ்பி சீக்கியர், ராஜ்புத், ராமதாசியா, சீக்கியர், கும்கார், ஜாட், பாவ்ரி, மெக்வால், பஹாரி, புரோகித், சௌத்ரி, பீல்நாயக், பிஸ்னோய் மற்றும் முகமதியர் இனமக்கள் இப்பிராந்தி யத்திலுள்ள 58 கிராமங்களில் பெருமளவில் வசிக்கின்றனர். இவர்கள் இந்தி, பஹாரி மற்றும் பஞ்சாபி மொழியினை பேசுகின்றனர்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் திரு. வி. குமார் மற்றும் திரு. அம்ருத் பாய் அவர்களால் 2021ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பிற்குப் பின் இங்கு ஊழியம் துவங்கப்பட்டது. 04.04.2022 அன்று திரு. வி. குமார் மற்றும் திருமதி. பெட்ரிசியா குமார் குடும்பமாக இங்கு தங்கள் ஊழியத்தை பீல்நாயக், மேக்வால் மற்றும் பஹாரி இன மக்கள் மத்தியில் துவங்கினார்கள். மசூதிகளும், குருதுவார்களும் நிறைந்து காணப்படும் இப்பிராந்தியத்தில் ஈத், குல்பீர் போன்ற முகமதியர்களின் பெருவிழாக்களும், ராம்தேவ் மேளா போன்ற இந்து மத விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. இந்த மக்களின் முக்கிய தொழில்கள் விவசாயம் மற்றும் தினசரி கூலி வேலைகள். ஓராசிரியர் கொண்ட பள்ளி அநேகமாக எல்லா கிராமங்களிலும் உள்ளன. பெற்றோர் தங்கள் குழந்தைகைள விருப்பத்துடன் பள்ளிக்கு அனுப்புகிறார்கள். இதற்கு முன்பு வேறு எந்த ஒரு கிறிஸ்தவ அமைப்புகளும் இங்கு ஊழியம் செய்யவில்லை. ஆனால் தற்போது அண்டை நகரங்களிலிருந்து சில சுயாதீன போதகர்கள் இந்த பணித்தளத்தில் சபைகளை ஸ்தாபிக்கின்றனர். வெளிப்புற நற்செய்தி அறிவிக்கும் முறை சிறந்த ஊழிய முறையாக இங்கு காணப்படுகிறது. பஜன் கூடுகைகள், தனிப்பட்ட நபருக்கு நற்செய்தி அறிவித்தல் மற்றும் அற்புத விடுதலைகள் மூலமாக மக்களிடையே நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. நமது ஊழியங்களின் மூலம் மஜ்பி சீக்கியர்கள், பாவ்ரி மற்றும் கும்ஹார் இனமக்கள் மத்தியிலிருந்து விசுவாசிகளை தேவன் தந்துள்ளார்.



இப்பிராந்தியத்தில் நிறைந்து காணப்படுகிற மசூதிகளும், மந்திர கூடங்களும், குரு வணக்க முறைகளும் நற்செய்தி வெடித்து பரவ ஒரு தடைக்கல்லாக காணப்படுகிறது. கிறிஸ்தவம் ஒரு வெளிநாட்டு மதம் என்றும், கிறிஸ்தவ ஊழியர்கள் பணத்திற்காக தங்கள் மதத்திற்கு ஆள்பிடிக்கிறார்கள் என்றும் பரப்பப்படுகிற பொய் செய்திகள் ஊழியத்திற்கு மிகப்பெரிய தடையாக இருக்கிறது. இக்காரணங்களினால் அநேகர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்களது விசுவாசத்தை வெளிப்படையாக அறிவிக்க பயப்படுகின்றனர். பணத்திற்காக பொய் உபதேசங்களை பரப்பிவரும் பஞ்சாப் மாநிலத்திலிருந்து வந்த சில கள்ள போதகர்களின் செயல்கள் இவர்களின் சந்தேகத்தை உறுதி செய்யும் வண்ணம் இருக்கிறது.

இத்தனைத் தடைகளுக்கு மத்தியிலும் காஜுவாலா பணித்தளத்தில் அனுப்கார் மாவட்டத்தின் ராவ்லா கிராமத்திலிருந்து சகோதரி மன்ப்ரீத் கௌர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட முதல் விசுவாசியாவார். சங்கரியா பணித்தளத்தின் நுக்கேரா கிராமத்திலுள்ள நமது விசுவாசியும், அவரது உறவினருமான திருமதி. பரம்ஜித் கௌர் மூலமாக நற்செய்தி இவருக்கு பகிரப்பட்டது. 2022ஆம் ஆண்டு கங்காராம் வேறு பணித்தளத்திலிருந்து மாற்றப்பட்டு இந்த பணித்தளத்திற்கு வந்தவுடன் ராவ்லா கிராமத்திற்கு சென்று திருமதி. மன்பிரீத் கௌர் வீட்டிலே ஒரு ஜெபக் கூடுகை ஒழுங்கு செய்யப்பட்டது. அன்றிரவே ஏழுபேர் விசுவாசத்திற்குள் வந்து, ஐந்து பேர் அதனை அறிக்கை செய்தனர். இவ்வாறாக ராவ்லா கிராமத்தில் ஊழியத்திற்கான வழியை தேவன் தந்தருளினார்.

வேதாகம விளக்க வகுப்புகளும், உபவாச ஜெபங்களும் கிரமமாக நடத்தப்பட்டு விசுவாசிகள் ஆவிக்குரிய வழியில் நடத்தப்பட்டனர். இதற்கிடையில் ஆஸ்துமா வினால் பாதிக்கப்பட்டு சுவாசப் பிரச்சனையில் சிக்கித் தவித்த திருமதி. மன்பிரீத் கௌர் திடீரென மரித்துபோனார். அவரது மகனும் மருமகள் திருமதி. குல்விந்தர் சிங்கும் இணைந்து இரவு முழுவதும் போராடி ஜெபிக்கவே மரித்துபோன மன்பிரீத் கௌர் உயர் பெற்றார். இன்னும் ஜீவனுள்ள சாட்சியாக ராவ்லா கிராமத்தில் வசித்து வருகின்றார். தன்னுடைய கிராமத்தினருக்கு மற்றும் உறவினர்களுக்கு கிறிஸ்துவை சாட்சியாக அறிவித்து வருகின்றார். வேதாகம வழியிலே இக்கிராமத்தின் விசுவாசிகள் நமது ஊழியர்களால் நடத்தப்படுகின்றனர். முழு கிராமமும் கிறிஸ்துவின் சீடர்களாக தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## ஜெபக் குறிப்புகள்:

- அநேக சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித்தர...
- திருமதி. அங்ரெஜ் கௌர் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள...
- மனநலம் பாதிக்கப்பட்டுள்ள சுக்ரீத் கௌர் சுகம்பெற...
- ராவ்லா கிராமத்தின் குல்வீணந்தர் கௌரின் மூளையிலுள்ள கட்டி மறைய...
- செயலிழந்து காணப்படும் சல்வான்சிங்கின் வலது கை மீண்டும் செயல்பட...
- சந்தீப் சிங் தன் குடும்பத்தினருடன் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள...

- நற்செய்தி ஊழியங்களுக்கு எதிராகச் செயல்படும் சுரேஷ் சௌத்ரி, ரமேஷ், பாபுசிங், மற்றும் புரோகித் கணேஷ் ஆகியோர் கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட...
- சபையின் விசுவாசிகள் கிரமமாக போதிக்கப்பட்டு கிறிஸ்துவில் வேரூன்றி வளர...
- மிஷனெரிகள் வி. குமார் & பெட்ரிசியா அவர்களது பிள்ளைகள் மெர்சியா மற்றும் கிரேசியா ஆகியோருக்காக...



# பணித்தள விஜயம்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு தூத்துக்குடி தென் பகுதி, நாசரேத் பணி மாவட்டம் சார்பாக ஒன்பது பேர், ஜார்கண்ட் மாநிலத்தில் பணித்தள விஜயம் செய்யவும், கெப்பபேடா என்ற இடத்தில் கட்டப்பட்ட ஆலயத்தை 27.09.2024 அன்று பிரதிஷ்டை செய்யவும் தேவன் கிருபை செய்தார். அருள்திரு. வனமோகன ராஜன் அவர்கள் செய்தி கொடுத்து விசுவாசிகளை உற்சாகப்படுத்தினார்கள். அன்று இரவு கங்குபாடா சிறுமியர் விடுதிக்குச் சென்று அங்கு படிக்கும் பிள்ளைகளுக்காக ஜெபிக்க தேவன் உதவி செய்தார். அதைத் தொடர்ந்து சாந்தனா சிறுவர் விடுதியில் தங்கிவிட்டு மறுநாள் காலையில் விசுவாசிகள் மற்றும் ஊழியர்களுடன் இணைந்து ஜெபித்தோம். படாசிந்தரி என்ற இடத்தில் கட்டப்பட உள்ள ஆலயத்திற்காக ஜெபித்துவிட்டு, இரவில் விடுதி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளைக் காணவும், அவர்களின் தாலந்துகளைக் கண்டு கர்த்தரைத் துதிக்கவும் தேவன் கிருபை செய்தார். மறுநாள் 29.09.2024 அன்று ஹூல்டி என்ற இடத்தில் கட்டப்பட்ட ஆலயத்தை தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யவும் தேவன் கிருபை செய்தார். பிரதிஷ்டை ஆராதனையில் Rev. T.Y.P. ஆசீர் அவர்கள் செய்தி கொடுத்து விசுவாசிகளை உற்சாகப்படுத்தினார். மேலும் புல் கூரை அமைத்து ஆராதனை நடக்கிற பல்கி என்ற இடத்தில் இரவு ஜெபம் செய்துவிட்டு எங்கள் பயணத்தைத் தொடர்வதற்கு தேவன் கிருபை செய்தார்.

பணித்தள விஜயத்தின் ஆயத்தப்பணிகளை Rev. T.Y.P. ஆசீர் அவர்களும், பணித்தள விஜய காரியங்களை Rev. சிபி செல்வின் சாம், Rev. முத்தையா சாமுவேல், Rev. குமாரவேல், Rev. பால்ராஜ் அவர்கள் யாவரும் இணைந்து செய்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. கெப்பபேடா ஆலயம் கட்டுவதற்குப் பொருளாதார உதவி செய்த நாசரேத்தைச் சேர்ந்த திருமதி. ஜான்சிராணி அவர்களுக்காகவும், ஹூல்டி என்ற இடத்தில் கட்டப்பட்ட ஆலயத்திற்குப் பொருளாதார உதவி செய்த நாசரேத் மணிநகர் திருச்சபையாருக்காகவும், நாசரேத் ஸ்கேன் பொறுப்பாளர் திரு. பிரான்சிஸ் அவர்களுக்காகவும் கர்த்தரைத் துதிக்கின்றோம்.

நாசரேத் பணி மாவட்டம், FMPB

# அருள்திரு. சமரேந்திர சிங்

## அவர்களின் சாட்சி

# துன்பத்தின் மத்தியில் மகிழ்ச்சி



2025 ஜனவரி 26 அன்று உத்தரப் பிரதேசம், பிந்திகி பணித்தளத்திலுள்ள சோட்டேலால்பூர் கிராமத்தில் ஞாயிறு ஆராதனையை நடத்திக்கொண்டிருந்த போது 30-40 பேர் கொண்ட குழுவினர் காவல் துறையினருடன் வந்து, ஆராதனையை தடைசெய்ததோடு, நாங்கள் மதமாற்றம் செய்வதாகக் குற்றம் சாட்டி எங்களை பிந்திகி காவல் நிலையத் திற்கு அழைத்துச் சென்றனர். அன்று முழுவதும் நாங்கள் யாருடனும் தொடர்பு கொள்ளாதபடி செய்தனர். ஜனவரி 27 அன்று மருத்துவ பரிசோதனைகளுக்குப் பிறகு மாவட்ட நீதிபதி முன் நாங்கள் ஆஜர்படுத்தப்பட்டோம். அவர் மதமாற்ற தடைச்சட்டத்தைக் காரணம் காட்டி எங்களை ஃபத்தேபூர் சிறைக்கு அனுப்பினார். நாங்கள் ஜனவரி 27 முதல் பிப்ரவரி 15 வரை சிறையிலிருந்தோம்.

**துன்பத்தில் தேவனின் கரம்:** கர்த்தரின் கிருபையால் எங்களின் பிள்ளைகள் வெளி மாநிலத்தில் படித்துக்கொண்டிருப்பதால் எங்களுக்கு சிறையிலிருப்பது கடினமாக இருக்கவில்லை. நாங்கள் இருவரும் எங்கள் ஜீவனையும், பிள்ளைகளையும் கர்த்தரின் கரத்தில் ஒப்புக்கொடுத்து ஜெபித்தோம். எல்லாம் தேவனுடைய கட்டுப்பாட்டில் இருப்பதால் எதற்கும் கவலைப்பட வேண்டாம் என்றும், பிள்ளைகளை கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்றும் என் மனைவி எனக்கு தைரியம் கூறினார்.

**தேவ பிரசன்னம்:** யோசுவா 1:6-7 வசனங்களிலிருந்து நாங்கள் பெலனடைந்தோம். தேவன் யோசேப்போடே இருந்ததுபோல, எங்களுடனும் இருக்கிறார் என்பதை அறிந்தோம் (சங். 46, 121, ஏசா. 43, 1 பேதுரு 5). நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நமக்காக அனுபவித்த துன்பத்தையும், சிலுவையில் அறையப்பட்டதையும் நினைவுகூர்ந்தோம். எனவே இந்த தற்போதைய துன்பம் எங்களுக்கு ஒன்றுமில்லை என உணர்ந்து தேவனைத் துதித்தோம்.

**கர்த்தரின் பாதுகாப்பு:** கர்த்தரின் பாதுகாப்பின் கரம் எங்கள் மீது இருந்ததால் எதிர்ப்பாளர்களோ, காவல்துறையினரோ எங்களுக்கு எத்தீங்கும் செய்யவில்லை. அவரின் தெய்வீகக் கரம் எங்களைப் பாதுகாத்தது.

**சிறையில் ஊழியம்:**

- குற்றத்தில் ஈடுபட்ட இளைஞர்களுக்கு ஆலோசனை வழங்கவும், அவர்கள் தவறுகளிலிருந்து மனந்திரும்பும்படி ஊக்குவிக்கவும் தேவன் எனக்கு உதவி செய்தார். அவர்களின் பத்து பேர் என் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டனர். அவர்களுக்காக ஜெபித்தேன்.
- என் மனைவி பெண்கள் சிறையில் ஊழியம் செய்யும் வாய்ப்பைப் பெற்றார். அவர்களுக்கு நற்செய்தி அறிவித்து, அவர்களுக்காக ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். சிறையில் 15 ஆண்டுகளாக உதிரப்போக்கினால் பாதிக்கப்பட்டிருந்த உமா தேவி என்ற ஒரு பெண் ஜெபத்திற்கு பிறகு குணமடைந்தார்.

**ஜெபத்தின் வல்லமை:**

எங்களுக்காக ஜெபித்த நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு குடும்பத்தின் அங்கத்தினர்களுக்கு மிகுந்த நன்றியினைத் தெரிவித்துகொள்கிறோம். பிப்ரவரி 15 அன்று நாங்கள் விடுவிக்கப்பட்டோம். கான்பூர் பிராந்திய செயலர், இரண்டு சுதேச ஊழியர்கள் மற்றும் என் மாமனார் அருள்திரு. பிலிப் பிஷோய் (BYM ஓய்வு மிஷனெரி) ஆகியோரால் அன்புடன் வரவேற்கப்பட்டோம். உங்கள் ஜெபம், அன்பு மற்றும் ஆதரவிற்கு மிகுந்த நன்றி.

**அருள்திரு. சமரேந்திரசிங் & திருமதி. சுஸ்மிதா**

## மிஷனெரி தரிசனக் கூடுகை 2025

நாள்: 04.05.2025,
ஞாயிறு காலை 8.30 துவங்கி
மதியம் 12 மணி வரை
இடம்: எல்ஷடாய் ஜெபவீடு,
எல்லீஸ் நகர், மதுரை

தலைமை:
**பாஸ்டர். டேவிட் குணராஜ்**

தேவ செய்தி:
**அருள்திரு. ரூபன் சாமுவேல்**

பணித்தளப்பகிர்வு:
**திருமதி. மரகதமணி ரூபன்**

தொடர்பு: 9444663401

**உயர்ந்த அழைப்பைப் பெற்ற மக்கள் உயர்ந்த மதிப்பீடுகள் மற்றும் உயர்ந்த நோக்கங்களுக்காக நிற்கும்போதுதான் உலகின் மாற்றம் சாத்தியமாகும். உயர்ந்த அழைப்பு என்பது இந்த சமுதாயத்தின் நன்மைக்காக அசாதாரணமான நபராக இருந்து அசாதாரணமான காரியங்களை செய்ய கொண்டிருக்கும் உன்னத நாட்டமாகும்.**

*– ஜாண் சாமுவேல்*

GO INTO ALL THE WORLD AND PREACH THE GOSPEL TO ALL CREATION

**friends missionary prayer band**

Go or Send

## To tend the olive shoots- the second generation believers

# WANTED

*Teachers, Medical professionals*

# WE ARE HIRING

## PASSIONATE AND QUALIFIED

Teachers and Medical professionals

**School at Jharkhand (Pandeni)**

Mathematics / Science / History / PET

**School at Gujarat (Jhawda)**

Mathematics / Physics / Biology / Chemistry

**Hospital at Jharkhand**

Nurses / X-ray Technician / Pharmacist / Anaesthesiologist / Pediatrician


## WHY JOIN US?

- It is an opportunity to serve our Lord through your profession for a few years in your lifetime
- This is an investment for The Lord's Kingdom's sake in the life of young believers.
- An opportunity to transform communties by giving good education or medical services.

## WHO CAN APPLY

- A candidate who is bornagain and with a Missionary heart who are willing to stay on campus
- A candidate with good knowledge of the subject
- A candidate with a good communication skill in English

*Join our team as we are involved in shaping the future of the children from the marginalised society!*



**Salary for Teachers**

Any UG degree with BEd. - Rs.25000/-

Any PG degree with BEd - Rs. 27000/-

Send your Resume to the HRD

**hrd@fmpb.org**

*For further details please contact:* **FMPB,** 29, High School Road, Ambattur, Chennai 53.

8073130527 ☎ 044-26570404 / 26573353




# மாநில முகாமில் இளம் வாலிபர்கள் & வாலிபர்களுக்கான வேதாகமப் போட்டி

**வேதாகமப் போட்டிக்கான வயது வரம்பு: 15 முதல் 30 வரை**

- ✓ வேதாகமப் பகுதி யோசுவா & மாற்கு சுவிசேஷம்.
- ✓ 2025 ஜனவரி முதல் மே மாதம் வரையுள்ள கோரீத் மாத இதழிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.
- ✓ தேர்வு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் நடத்தப்படும். (ஆங்கிலம் NKJV வேதாகமம் பின்பற்றப்படும்)
- ✓ தேர்வு நாள் மாநில முகாமின் 2ஆம் நாள் (16.05.2025).
- ✓ தேர்வு நேரம் இரவு 8 மணி முதல் 10 மணி வரை.
- ✓ பரிசு பெற குறைந்தது 50 மதிப்பெண்கள் எடுக்க வேண்டும்.
- ✓ தேர்வில் முதன்மை பெறும் முதல் மூன்று நபர்களுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.
- ✓ மற்றவர்களுக்கு தகுதி சான்றிதழ் அளிக்கப்படும்.

இடம்: **பெத்தேல் வளாகம், டேனிஷ்பேட்டை, சேலம்**

*மேலும் விவரங்களுக்கு:*

**FMPB வாலிபர் பிரிவு, அலைபேசி எண்: 9445040148**



# 2025 - மாநில முகாமில்

## சிறுவர்களுக்கான மனப்பாட வசனப் போட்டி

**பிகினர்** (Pre KG முதல் - முதலாம் வகுப்பு வரை)
லூக்கா 15:17-24

**பிரைமரி** (2 - 4ஆம் வகுப்பு வரை)
லூக்கா 7:37-48

**ஜூனியர்** (5 - 7ஆம் வகுப்பு வரை)
1 கொரிந்தியர் 5:16-26

# நிலத்தில் விழுந்த கோதுமை மணி



## திருமதி. ஜெயந்தி கார்த்திகேயன்
**ஹரியானா**

திருமதி. எம். ஜெயந்தி, தமிழ்நாட்டின் தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு தாலுகாவில் 01.06.1982 அன்று ஒரு இந்து குடும்பத்தில் பிறந்தார். இவரது தாத்தா திரு. ஐயாசாமி, தெற்கு மண்டலத்தி லுள்ள மல்லனூர் பணித்தளத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் சுதேச ஊழியராக பணி செய்தவர். இவரது தந்தை இறந்தபோது இவருக்கு ஐந்து வயது. அன்பிற்காக ஏக்கத்துடன் இருந்த ஜெயந்தி, தனது சிநேகிதியின் மூலம் இயேசு கிறிஸ்துவை பற்றி அறிந்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார். சிறிது நாட்களுக்குப் பின் இவர் வேதத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தபோது இயேசுவின் அன்பினால் தொடப்பட்டு தனது பாவங்களை அறிக்கையிட்டு இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்.

இவர் நமது மிஷனெரிகளின் மூலம் கிறிஸ்தவ பாதையில் வழிநடத்தப்பட்டார். குடும்பத்தினரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் தன் விசுவாசத்தில் உறுதியாக நின்றதோடு, கர்த்தருக்காக முழுநேர ஊழியம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார். திரு. மார்ட்டின் அவர்களின் மூலம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்து, தர்மபுரி மாவட்டத்திலுள்ள நல்லம்பள்ளி பணித்தளத்தில் இரண்டு வருடங்களும், பிராந்திய அலுவலகத்தில் ஒரு வருடமும் தன்னார்வ ஊழியராக ஊழியம் செய்தார்.

15.12.1999 அன்று திரு. எஸ். கார்த்திகேயனை திருமணம் செய்துகொண்டார். 30.05.2003இல் இருவரும் முழுநேர ஊழியராக இணைந்து, 2004ஆம் ஆண்டு உத்தரப்பிரதேசத்திலுள்ள கச்சுவாவில் மிஷனெரி பயிற்சியை முடித்தனர். கர்த்தர் இவர்களுக்கு இரண்டு மகள்களை தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகள் இவாஞ்சலின் பி.எஸ்.சி. மருத்துவ உதவியாளர் படிப்பை முடித்துள்ளார். இளைய மகள் ஜாஸ்மின் மதுரை, லேடிடோக் கல்லூரியில் பி.ஏ. ஆங்கிலம் பயின்று வருகிறார்.

2005 முதல் இவர் தனது கணவருடன் இணைந்து ராஜஸ்தானிலுள்ள சங்காரியா, ஹனுமன்கார், சிகார் போன்ற இடங்களிலும், ஹரியானாவிலுள்ள பர்வாலா, பெஹுவா பணித்தளங்களிலும், இறுதியாக ரத்தியாவிலும் கடந்த 22 வருடங்கள் தேவப்பணியை நிறைவேற்றினார்.

இவர் எந்த பணித்தளத்தில் ஊழியம் செய்தாலும், அங்குள்ள மக்களின் கலாச்சாரத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொண்டு விசுவாசிகளில் ஒருவராக மாறிவிடுவார். பெண்கள் மற்றும் வாலிபர் கூடுகைகள் மூலம் அநேகரை கர்த்தரண்டை வழிநடத்தினார். பெரிய கூட்டங்களாக இருப்பினும் தைரியமாக கர்த்தரின் வார்த்தையைப் பிரசங்கிப்பார். இவர் எப்போதும் தாழ்மையாகவும், விசுவாசிகளிடம் அன்பாகவும், அக்கறையுடனும் இருப்பவர். விசுவாசிகளே தனது சொந்த உறவினர் என்றும் கூறுவார்.

திருமதி. ஜெயந்தி 14.4.2025 அன்று சாலை விபத்தின் மூலம் தேவ இராஜ்யத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். 16.04.2025 அன்று மாலை ரத்தியா ஆலயத்தில் இவரது அடக்க ஆராதனை நடைபெற்று, பத்தேபாதிலுள்ள கிறிஸ்தவ கல்லறைத் தோட்டத்தில் இவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. கடைசி தருணம் வரை இவர் தேவனுக்காக தீவிரமாக உழைத்து வந்தார். தனது விடாமுயற்சியினால் அநேகரின் இருதயங்களில் இயேசு என்னும் ஜீவ ஒளியை ஏற்றிவைத்தார். திருமதி. ஜெயந்தியின் ஆசீர்வாதமான வாழ்க்கைக்காக, ஊழியங்களுக்காக தேவனைத் துதித்து, இவரை இழந்து வாடும் இவரது கணவர் மற்றும் பிள்ளைகளின் ஆறுதலுக்காகவும், சமாதானத்திற்காகவும் ஜெபிப்போம்.




# திருநெல்வேலி பேராயருடன் ஓர் சந்திப்பு

இயக்கத்தின் பொது செயலர், திருநெல்வேலியின் விரிவுப் பணி தலைவர்களும் மற்றும் முன்னாள் துணைத் தலைவர் திரு. ஜேம்ஸ் தர்மபாலன் அவர்களுமாக இணைந்து திருநெல்வேலி, CSI பேராயர் Rt. Rev. Dr. A.R.G.S.T. பர்னபாஸ் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்த கூடுகை மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

பிஷப் அவர்கள் எங்களை கனிவுடன் ஏற்றுக்கொண்டு நமது இயக்கத்தின் தலைவர்கள் மற்றும் மிஷனெரிகள் திருநெல்வேலி திருமண்டலத்தின் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்கு பேருதவியாக இருப்பதாக பாராட்டினார். மேலும் திருமண்டலத்தின் ஊழியங்களிலும், வாலிபர் ஊழியங்களிலும் இன்னும் அதிகமாக உதவி செய்ய முன்வரவேண்டு மென்றும், FMPB மிஷனெரிகள் மற்றும் தலைவர்கள் ஊழியத்தின் தரிசனங்களை தங்கள் திருச்சபைகளில் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். திருச்சபை போதகர்களை குறுகியகாலத்திற்கு பணித்தள அனுபவம் பெற நமது பணித்தளங்களுக்கு மிஷனெரிகளாக அனுப்புவதைக் குறித்தும் பரிசீலிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

CSI திருநெல்வேலி திருமண்டலம் மற்றும் FMPB இடையேயான ஒத்துழைப்பின் சில பகுதிகளைப் பற்றி விவாதித்தோம். பாளையங்கோட்டையில் FMPB சார்பாக மிஷன் எக்ஸ்போ (Mission Expo) ஒன்று நடத்த ஏற்பாடு செய்து கிறிஸ்தவர்கள் மத்தியில் ஊழியத்தை குறித்ததான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் திருமண்டலத்தின் அனைத்து ஆலயங்களிலும் மிஷன் ஞாயிறுவையும் (Mission Sunday) நடத்திடவும் கேட்டுக்கொண்டார். திருமண்டலத்தின் தெரிந்துகொள்ளப்பட்ட கிராமங்களில் ஊழியம் செய்யவும், அறைகூவல் கூட்டங்களை நடத்துவதின் மூலம் பெண்கள் மற்றும் வாலிபர்கள் மத்தியில் ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும் மிஷனெரிகள் உதவிட வேண்டுமென்று அவர் வேண்டிக்கொண்டார்.

திருநெல்வேலி திருமண்டலத்தின் பள்ளி ஆசிரியர்கள் மாநாட்டில் பேசுவதற்கான வாய்ப்பை தேவன் எனக்குத் தந்தார். சுமார் 2000 பேர் கலந்துகொண்ட அக்கூட்டத்தில் ஆசிரியர்கள் பள்ளி மாணவர்களை வேதம் காட்டும் நல்லொழுக்கங்களில் வளர்க்கும்போது நம் தேசத்தில் மாற்றம் ஏற்படும் என்று கூறி அவர்களை ஊக்குவிக்க தேவன் உதவினார். இந்த சந்திப்பு தேசத்தில் பெரிய தாக்கத்தை கொண்டுவர ஜெபத்துடன் காத்திருப்போம்.

**திரு. ஜாண் சாமுவேல்,** தலைவர்.

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

## தேவனின் இதயத்துடிப்பு
## யாரை நான் அனுப்புவேன்?

தேவனின் இதயத்துடிப்பே ஆத்தும அறுவடை...!
இயேசு கிறிஸ்துவின் இறுதிக் கட்டளைக்கு
அடிபணிய விரும்புகிறீர்களா?
மக்களுக்குப் பணிசெய்து,
தேவ பணியை நிறைவேற்றிட,
உங்களுக்கு ஒரு வாய்ப்பு!

MISSIONARY WANTED MISSIONARY

**FMPB**
குடும்பத்தில்
இணைந்திட வாரீர்



# ஊழியர்கள் தேவை!

அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காக
நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?

**கல்வி / வயது வரம்பு**

குறைந்தபட்சம் +2 / அதற்கு மேல்
திருமணமாகாதவர்கள் - 30 வயது
திருமணமானவர்கள் - 35 வயது

- முன்னோடி ஊழியனாக
- சபைநாட்டும் ஊழியம் செய்ய
- வேதாகம மொழி பெயர்ப்பாளராக
- மிஷினெரி ஆசிரியராக
- மிஷினெரி மருத்துவராக
- சிறுவர் ஊழியம் செய்திட
- வாலிபர் மத்தியில் ஊழியம் நிறைவேற்றிட
- தொலைத் தொடர்பு ஊழியம் செய்திட

கலாச்சாரம் கடந்து சென்று ஊழியம் செய்திட
உங்களை அன்புடன் அழைக்கிறோம்

**மனிதவளத் துறை**
29, உயர்நிலை பள்ளி சாலை, அம்பத்தூர், சென்னை 53.
email: hrd@fmpb.org / www.fmpb.co.in
044 2657 0404 / 26573353

# நிலத்தில் விழுந்த கோதுமை மணி



**திருமதி. எஸ்தர் பேபி**

திருமதி. எஸ்தர் பேபி நத்தானியேல் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நெய்யூரில் 06.08.1952 அன்று பிறந்தார். இவர் செவிலியர் படிப்பை முடித்தபோது இவரது பகுதியில் நடந்த கூட்டத்தில், தேசத்தில் சுவிசேஷம் அறிவிக்க மிஷனெரிகளின் தேவைகளைக் குறித்து மூத்த மிஷனெரி ஒருவரின் மூலம் கேள்விப்பட்டார். அப்போது தேவன் தன்னை அவரது பணிக்கு அழைப்பதாக உணர்ந்தார். அவரது சகோதரிக்கு தீ விபத்து ஏற்பட்டபோது மருத்துவர்களால் காப்பாற்ற இயலாமல் போனது. தேவன் தன் சகோதரியை குணமாக்கினால் ஊழியத்திற்கு செல்வதாக இவர் தன்னை அர்ப்பணித்தார். அவ்வாறு தேவன் அற்புத சுகமளிக்கவே குடும்பத்தினரின் எதிர்ப்பையும் தாண்டி 12.08.1980இல் தனது 28வது வயதில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனெரியாக இணைந்தார்.

1981இல் மிஷனெரி அருள்திரு. நத்தானியேல் லோகராஜ் என்பவரை திருமணம் செய்தார். இவர்களுக்கு ஜாய் ஷாலோம் என்ற மகனுண்டு. தனது கணவருடன் இணைந்து மஹாராஷ்டிராவின் அக்குல்குவா பகுதியிலும், குஜராத்தின் செலம்பா, கேவடி, அங்லேஷ்வர் மற்றும் ராஜ்பிப்ளா பணித்தளத்திலும், உத்தரப்பிரதேசத்தின் ஜான்சி பணித்தளத்திலும், தெலுங்கானா மாநிலத்திலும் தேவனுடைய பணியைச் செய்தார். பெத்தேல் வேதாகம பயிற்சி மையத்திலும், பின்னர் ஆரவல்லி பிராந்தியம், சஹாயத்ரி பிராந்திய அலுவலகங்களிலும் ஊழியம் செய்தனர். பின் நாட்களில் மனிதவள மேம்பாட்டுத்துறை அலுவலகத்திலும், தாம்பரம் விரிவுப்பணி ஊழியத்திலும் குடும்பமாய் ஈடுபட்டு வந்தனர். இவ்வாறாக கடந்த 32 வருடங்கள் தேவனுடைய பணியைச் செய்து 2012 ஜூன் மாதம் ஊழியத்திலிருந்து ஓய்வுப் பெற்றார்.

திருமதி. எஸ்தர் பேபி தனது ஓய்வு காலத்தில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு, சென்னையில் தங்கி சிகிச்சைப் பெற்று வந்தார். 2023இல் அவரது கணவர் அருள்திரு. நத்தானியேல் லோகராஜ் தேவனுடைய ராஜ்யத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டப்பின் இவரது உடல்நிலை மேலும் பாதிக்கப்பட்டு 2025 ஏப்ரல் 8ஆம் தேதி அன்று தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசித்தார். இவர் விருந்தோம்பலில் சிறந்தவர். இவரது உற்சாகமான ஊழியத்தின் மூலம் அநேகர் தேவனின் இரட்சிப்பைப் பெற்றனர். 2 தீமோ. 4:7இல் பவுல் கூறுவதுபோல நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் என்பதற்கு இவர் ஒரு சாட்சி. இவரது விசுவாசமுள்ள சாட்சியான வாழ்க்கைக்காக தேவனைத் துதிப்போம். இவரது குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

## மிஷனெரி பிரதிஷ்டை

ரெட்ஹில்ஸ் பகுதியில் 2025 மார்ச் மாதம் 30ஆம் தேதி நடைபெற்ற தம்பதியர் கூடுகையில், கர்நாடகா மாநிலம், கோலார் பிராந்தியத்தில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரி சகோதரனை அருள்திரு. கே. அன்பழகன் மற்றும் அருள்திரு. பி. செல்வராஜ் அவர்கள் ஜெபித்து பிரதிஷ்டை செய்தனர். மிஷனெரியை திரு. டேவிட் ஞானசேகர் அவர்கள் குடும்பமாக ஜெபித்து தாங்குகிறார்கள்.

**திரு. ஜி. ரஞ்சித் பாண்டியராஜ்,**
கௌரவ முன்னேற்றப்பணி செயலர், ரெட்ஹில்ஸ்

## வருந்துகிறோம்



திரு. கந்தசாமி ஜாண்ராஜா அவர்கள் 10.08.1953ஆம் ஆண்டு தென்காசி மாவட்டம், அரியநாயகிபுரம் பகுதியில் இந்து குடும்பத்தில் பிறந்து, கணித ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். 1988இல் சகோதரி ஜெ. லில்லி கிரேஸ்மணியை கிறிஸ்தவ முறைப்படி வாழ்க்கைத் துணையாக்கினார். திருமணத்திற்குப்பின் கோவில்பட்டியில் குடும்பமாக வசித்து வந்தார். 2002ஆம் ஆண்டு அருட்திரு. எட்வின் ஜெபராஜ் ஐயா அவர்கள் செய்தியால் தொடப்பட்டு தேவனுக்கு தன்னை அர்ப்பணித்தார். அதன்பின் தான் பெற்ற இரட்சிப்பை வலுவாக்கி, இந்த இரட்சிப்பை இந்தியர் அனைவரும் அறியவேண்டும் என்ற தரிசனத்தோடு 2005ஆம் ஆண்டு முதல் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முதுகெலும்பாக செயல்பட ஆரம்பித்தார். பின்னர் கோவில்பட்டியை சுற்றியிருக்கின்ற அனைத்து பகுதிகளுக்கும் கௌரவ முன்னேற்றப்பணி செயலாளராக பொறுப்பேற்று, திறன்பட உண்மையும், உத்தமமாக செயல்பட்டு வந்தார்.

மிகுந்த தாழ்மை, எளிமை, தியாகம், விருந்தோம்பல், மாயமற்ற கனிவான அன்பு ஆகியவை அவரது தனிப்பண்புகள் ஆகும். அயராது உழைக்கக் கூடியவர், கடமையில் கண்ணியமானவர். கோவில்பட்டி திருச்சபையிலும் நல்ல ஐக்கியம் கொண்டு செயல்பட்டவர். வெகு தொலைவு சென்று ஊழியங்களை நேர்த்தியாகவும், பொறுப்பாகவும் செய்து வந்தார். அனைத்துக் கூடுகைகளிலும் கடலை மிட்டாய் வழங்கி ஊழியர்களை மகிழ்விப்பார். எதைச் செய்தாலும் புகழாரம் எதிர்ப்பாராதவர். பணித்தளத்தில் நடைபெறவுள்ள ஆலயப் பிரதிஷ்டைக்காக குடும்பமாக செல்ல ஆயத்தமாக இருந்தார். திடீரென ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 21.02.2025 அன்று தனது 72வது வயதில் இறைவனின் தோட்டத்தில் மலராக மணம் வீச சென்றுவிட்டார். அன்னார் விட்டுச் சென்ற அவரது அன்பு துணைவியார், இரு மகன்கள், மருமகள்கள் மற்றும் பேரப்பிள்ளைகள் அனைவரின் ஆறுதலுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**அருள்திரு. ஐ. மெயின்ராஜ்,** விரிவுப்பணி பிராந்திய செயலர் – தூத்துக்குடி வடக்கு

**மே 1 வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பாபு பெஞ்சமின்
திருமதி. சிப்போரா ஜீவரத்ன பீரோ
திருமதி. புரோசன்சிதா இப்ராயிம் மாலி
திரு. மனோஜ் P.J., திரு. ஜாண் பெனின் J.
திருமதி. கோகனி சுமித்ராபேன் கிறிஸ்டியன்
திரு. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் R.

## ஜம்மு

### ராம்கார்:

**ஜாண் எஸூங் & லிபெனி ஜமி**

**துதிக்க:** தொண்டை புற்றுநோயிலிருந்து ராம்கார் கிராமத்தைச் சேர்ந்த பிட்டுவுக்கு தேவன் பூரண சுகமருளினார். கடுமையான வயிற்று வலியிலிருந்து கீதாவையும், சஞ்சயின் மகன் ரத்லாலையும் தேவன் குணப்படுத்தினார். கடந்த நிதியாண்டில் நான்கு புதிய ஆராதனைக் குழுக்களை உருவாக்கிடவும், ஐந்து வேத பாட வகுப்புகளைத் துவங்கவும் கர்த்தர் கிருபை செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பர்மண்டல், சிமிலியால், ஸ்வங்கா ஆகிய கிராமங்களில் வாழும் மக்கள் மூட நம்பிக்கையிலிருந்து விடுபடவும், மெய்யான தேவனை அறிந்துகொள்ளவும்; ஊழியத்திற்கு எதிராக செயல்படும் மதவாத இயக்கங்கள் முற்றிலுமாக செயலிழந்துபோக; கிறிஸ்தவர்கள் தங்கள் சாட்சியுள்ள வாழ்க்கையின் மூலம் இயேசு கிறிஸ்துவை பிறருக்கு பிரதிபலித்துக்காட்ட ஜெபிப்போம்.

### ஜம்மு: பித்யுத் குமார் சிங்

**துதிக்க:** நான்கு கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். கேஷவ் குமார் என்பவர் இயேசு கிறிஸ்துவை குறித்து அறிந்துகொள்ள மிகுந்த வாஞ்சைக்காட்டி வருகின்றார். இரவு கூடுகைகளும், சத்சங் கூடுகைகளும் தடையின்றி நடைபெற்றது. பிஸ்னா கிராமத்தைச் சேர்ந்த ஆர்த்தி தேவிக்கும், குவால் கிராமத்தைச் சேர்ந்த ஆர்த்திக்கும் ஜெபத்தின் மூலம் தேவன் சுகப்பிரசவம் அருளினார். மனநிலை பாதிக்கப்பட்டிருந்த தேலி கிராமத்தைச் சேர்ந்த ரிஷாவ் குமாருக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விபத்தில் கால் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் சீமா சங்ரால் பூரண சுகம் பெற; வேலையின்றி தவிக்கும் பர்வின் தேவிக்கு தேவன் ஏற்ற வேலையைத் தர; அசுத்தாவியின் பயத்திலிருந்து போஸ்பெந்தாரா குடும்பத்தினருக்கு தேவன் விடுதலை அருள; பஜல்டா மற்றும் கரமதனா கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலை தந்தருள; அனிதா தேவி, கீதா தேவி, பிரவீன் தேவி, பசிகலா, தீபக் குமார் ஆகியோரின் குடும்பங்கள் பின்மாற்றத்திலிருந்து மனந்திரும்ப; செபானி குமாரி, குஷி குமாரி, விஸ்வஜீத் குமார் ஆகியோருக்கு ஏற்ற கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; கரண்குமார் வேலை செய்யும் செங்கல் சூளையில் சம்பளம் தராமல் ஏமாற்றிவரும் ஏஜெண்ட் மனந்திரும்பவும், நிலுவையிலுள்ள அனைத்து சம்பள பணம் பணியாளர்களுக்கு மீண்டும் கிடைக்கவும் ஊக்கத்தோடு ஜெபிப்போம்.

## மே 2 வெள்ளி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. லைசா பீட்டர் அருளானந்தம்
திரு. காட்வின் கிருபாகரன், திரு. சுனில் குமார்
திரு. சுசில் ஹெம்ரோம்
செல்வி. லதாபாய் கவபாவ்ரா

### ரியாசி: அய்யனார் டேவிட் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** பௌனி, கெரல் கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். தலவாரா கிராமத்திலுள்ள குஜ்ஜார் இன மக்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டி வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மார்பக புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட நமது மிஷனெரி டேவிட் அவர்களின் தாயார் எஸ்தர் காந்தம்மாவுக்கு அறுவை சிகிச்சை முடிந்து ஹீமோதெரப்பி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தேவன் பரிபூரண சுகம்தர; மிஷனெரி மன்பிரீத் கௌர் ஒற்றைத் தலைவலி மற்றும் முதுகு தண்டுவட பிரச்சனையிலிருந்து குணமடைய; ஊழியத்திற்கு எதிராக செயல்படும் எதிர்ப்பு சக்திகள் முறியடிக்கப்பட; இருளில் வாழும் ஜனங்கள் மெய்யான ஒளியை கண்டுக்கொள்ள ஜெபிப்போம்.

### நௌஷேரா:

### ஷேக் சுபானி & எமி பாக்கியா

**துதிக்க:** தரியாலா கிராமத்தில், அதிக குடிப்பழக்கத்தினால் மனநலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கலாராம் ஜெபத்தினால் குடியிலிருந்து விடுதலைப் பெற்று குடும்பத்துடன் சமாதானமாக வாழ்ந்து வருகிறார். நமது புதிய விசுவாசி பிங்கி தேவியின் காணாமல் போன தங்க கம்மல் விசுவாசமுள்ள ஜெபத்தின் மூலம் திரும்ப கிடைக்க செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்கிரி கிராமத்தில் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டு, குடும்பத்தில் சமாதானமின்றி காணப்படும் சானி மற்றும் சஞ்சீவ் சுமித் குடியிலிருந்து விடுதலை பெற; தீ விபத்தினால் வலது கையில் ஏற்பட்ட 80% தீக்காயத்தாலும், குடல் பிரச்சனையினாலும் அவதிப்படும் போல்சாய்க்கு தேவன் அற்புத சுகமருள; காய் ஆலயத்திற்கான நிலம் விரைவில் பதிவு செய்யப்படவும், சபையின் காணிக்கைக்கான வங்கிக் கணக்கு எவ்வித தடையுமின்றி துவங்கப்படவும்; இப்பணித்தளத்தில் காணப்படும் அந்தகார கிரியைகள் அழிய, பிசாசின் அரண்கள் நிர்மூலமாக, ஆளுகை செய்கிற துரைத்தனங்கள், மூட நம்பிக்கைகள் உடைக்கப்பட பாரத்தோடு ஜெபிப்போம்.

### தேவாலய துஷ்பிரயோகம்

*உத்திரப்பிரதேசத்திலுள்ள பர்த்தனா பணித்தளத்தில் எதிர்ப்பினிமித்தம் மேக்னா ஆலயம் மூடப்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் 08.03.2025 அன்று அப்பகுதியின் பஞ்சாயத்து அதிகாரி ராணா (எதிர்ப்பாளர் மற்றும் அரசியல்வாதி) நமது சுதேச ஊழியர் விஜயகுமாரை தொலைபேசியில் அழைத்து, மேக்னா ஆலய சாவியைக் கேட்டுள்ளார். அவர்கள் ஆலயத்தைத் திறந்து அரசாங்க மாட்டு கொட்டகைக்கான கட்டுமானப் பொருட்களை உள்ளே வைப்பதற்கு திட்டமிட்டிருந்தனர். சுதேச ஊழியர் ஆலய சாவியைக் கொடுக்க மறுத்ததால் பூட்டை உடைத்து ஆலயத்திற்குள் அத்தனை கட்டுமான பொருட்களையும் போட்டு வைத்துள்ளனர். இதில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு அதிகாரியும் மனந்திரும்பி, தங்கள் செயலுக்கு வருந்தி இயேசுவை ஏற்றுக்கொள்ள கருத்தாய் ஜெபிப்போம்.*

## மே 3 சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜெபராஜ் சாமுவேல் V.P.
திருமதி. ஷீலா சண்முகம், திரு. வினு M.
திரு. விக்டர் ஜெயசீலன் C.
திருமதி. சாராள் ஜான்சி ராணி ஜஸ்டின் Y.
திருமதி. ஆனந்தி சங்கர் M.

# ஹிமாச்சலப் பிரதேசம்

### ராம்பூர்: தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். ஜெகதீஸிக்கு குடும்பப் பிரச்சனையிலிருந்து தேவன் விடுதலை அருளினார். லெந்து நாட்களில் நடைபெற்ற உபவாச ஜெபக் கூடுகையில் விசுவாசிகள் உற்சாகத்துடன் பங்கு பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போர் எவ்வித தடையுமின்றி அறிக்கையிட; அதிக கால்வலியினால் அவதியுறும் சுங்கி தேவிக்கு தேவன் அற்புத சுகமருள; விசுவாசி ருன்ஜா ஆலயம் செல்வதை தடைசெய்யும் அவரது பிள்ளைகள் மனந்திரும்பி இயேசுவின் அன்பினால் தொடப்பட; கடுமையான வயிற்று வலியிலிருந்து விபுல் சுகம்பெற; தனது மனைவியை இழக்கக்கொடுத்துள்ள நோருராம் என்பவருக்கு தேவன் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள; காவல்துறை பணியில் சேர ஆர்வம் காட்டும் லக்கி மற்றும் சூரஜ்க்கு தேவன் உதவி செய்ய; அசுத்தாவியின் பிடியிலிருந்து விம்லாவை தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.

### ரோஹ்ரு:

**ஜாண்சன் சங்கர் & ஜெபராணி**

**துதிக்க:** டயூனி பகுதியில் ஆராதனை நடத்த ஏற்ற இடத்தை தேவன் தந்தருளினார். திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலியிலிருந்து மத்ருதேவியை தேவன் குணப்படுத்தினார். ஜுனா தேவியின் வயிற்றிலிருந்தக் கட்டியை ஜெபத்தின் மூலம் தேவன் மறைய செய்தார். பபுலுவின் வீட்டில் கேஸ் சிலிண்டர் வெடித்தபோதிலும் வீட்டிலிருந்த அனைவரையும் தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். பௌலாட் மற்றும் கௌனி ஆகிய இடங்களில் முழுஇரவு உபவாச ஜெபம் நடத்திட கர்த்தர் கிருபை செய்தார். தேவ்லி பகுதியில் மூன்று குடும்பங்கள் தேவனை ஆராதித்து வருகிறதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அனிதா, அஞ்சலி, சுனிதா ஆகியோருக்கு சுகப்பிரசவத்தை தேவன் கட்டளையிட; நியாரு ராமுக்கு வயிற்று புற்றுநோயிலிருந்து தேவன் அற்புத சுகமருள; மோரா பகுதியில் ஆராதனை நடத்த ஏற்ற இடத்தை தேவன் தந்தருள; புரானுக்கு கிறிஸ்தவ வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; அசுத்தாவியின் பிடியிலிருந்து நிர்மலாவுக்கு தேவன் விடுதலைத் தர; ஒரு வருட காலமாக தோல் ஒவ்வாமை யினால் அவதியுறும் சுதேச ஊழியர் சந்தீப்புக்கு தேவன் பூரண சுகமருள ஜெபிப்போம்.

## மே 4 ஞாயிறு

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஹெப்சிபாய் சைரஸ் சாமுவேல்
திருமதி. லீகர்ள் மேரி கோல்டன் இன்பராஜ்
திருமதி. சீதா ஐசக் R., திரு. ஜெபக்குமார் P.
திருமதி. ரவுத் ஜசோதாபேன் பிரமோத்குமார்
திருமதி. ஜெபசீலி டேனியல் மார்வெல்ராஜ்
திருமதி. ஏஞ்சலின் விக்னேஷ்வரன்
திரு. அனில் குமார், திரு. நிரஞ்சன் குமார்

## பஞ்சாப்

### அஹ்மத்கட் மண்டி:
### கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா

**துதிக்க:** இரத்தத்தில் ஏற்பட்ட தொற்றினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த அவி என்பவர் மருத்துவரால் கைவிடப்பட்ட நிலையில், விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதால் ஆலய ஆராதனையில் கலந்துகொள்கிறார். அமோன்தீப்பின் கண் அறுவை சிகிச்சை நல்லமுறையில் நடைபெற தேவன் உதவி செய்தார். பதார்கேரா, குக்ரானா ஆகிய கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டன. விசுவாசியின் மகள் திருமணம் எவ்வித தடையுமின்றி ஆசீர்வாதமாய் நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மிஷனெரியின் மாமியாருக்கு புற்றுநோயிலிருந்து தேவன் பரிபூரண விடுதலை அருள; வீட்டைவிட்டு சென்றுள்ள நமது விசுவாசி சஜனின் மனைவி மனந்திரும்பி வீடு திரும்ப; சமுதாயத்திற்குப் பயந்து தேவன் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட தயங்கும் 28 பேருக்காக; ராய்காட் சபையின் விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர; மிஷனெரியின் இளைய மகள் கீர்த்தனாவின் முகத்திலுள்ள வெள்ளைத் தழும்புகள் குணமாக ஜெபிப்போம்.

### மான்சா: தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

**துதிக்க:** இரண்டு கிராமங்களில் படக்காட்சி ஊழியம் செய்ய தேவன் உதவி செய்தார். லெந்து நாட்களில் சுமார் 42 குடும்பங்கள் உபவாசித்து ஜெபித்து வருகின்றனர். இவ்வாண்டு விடுதிப் பிள்ளைகள் அனைவரும் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிபெற தேவன் கிருபை செய்தார். அசுத்தாவியின் பிடியினால் பாதிக்கப்பட்ட சரண்ஜித் என்பவருக்காக விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது தேவன் அவருக்கு பூரண விடுதலை அருளினார். இதன் மூலம் அவரது குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். நீண்ட நாட்கள் திருமணத்திற்காக ஜெபித்து வந்த மான்சா என்பவருக்கு ஜெபத்தின் மூலம் நல்ல வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருளினார். கடந்த நிதியாண்டில் ஊழியத்தில் அநேக முன்னேற்றங்களை தந்து ஊழியம் விரிவடைய கிருபை செய்த தேவனைத் துதிப்போம்

**ஜெபிக்க:** ஜான்டுகே, ஜுனிர், காய் கிராமங்களில் நடைபெறவுள்ள சத்சங் கூட்டங்கள் நல்ல பலனைத் தர; மன்ட்ரா, ஷர்கா, கோஹார், போஹா ஆகிய கிராமங்களில் நடைபெறவுள்ள படக் காட்சி ஊழியங்கள் மூலம் தேவனின் அன்பை ஜனங்கள் உணர; தன் தகப்பனை இழக்கக்கொடுத்துள்ள புதிய விசுவாசியான கிரிபால்சிங்கிற்கு தேவன் ஆறுதல் அளிக்க; சிறுநீரகக் கல் மற்றும் கட்டியினால் அவதியுறும் மன்பிரீத் கௌருக்கு தேவன் அற்புத சுகமருள; மிஷனெரியின் தாயார் காந்தாரியின் இருதய நோயை தேவன் குணப்படுத்த; மிஷனெரி மன்னாவுக்கு தேவன் சுகப் பிரசவம் அருள ஜெபிப்போம்.

**மே 5 திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஸ்டீபன் ஜெயசீலன் B.
திருமதி. ஜெஸி ஜீவபிரபா டேவிட்
திருமதி. மேபல் வசந்தகுமாரி பாபுராஜ்
திரு. புஷ்பராஜ் R., திரு. பரணிதரன் S.

### அம்ரித்சர்:

**சித்தரஞ்சன் தாண்டி & தெஜஸ்விதா**

**துதிக்க:** புதிதாக மூன்று தொடர் பாளர்களை தேவன் தந்தருளினார். அநேக வருடங்கள் தலைவலியினால் வேதனைப்பட்ட காசா கிராமத்தைச் சேர்ந்த நிமோ கௌர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். ஆலயம் செல்லும் வழியில் விபத்தைச் சந்தித்த பரம்ஜீத் கௌரை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். ஊழியத்தில் அநேக சவால் களை சந்தித்தபோதிலும் சுவிசேஷத் திற்கு தேவன் அநேக வாய்ப்புகளை தந்தருளினார். ஹோசியார் நகர் பகுதி களில் ஊழியம் செய்ய ஜாஸ்பல் சிங் தன்னை அர்ப்பணித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 20 வருடங்களாக குடிப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் புதிய தொடர்பாளர் நரேந்தர் சிங், ரோஷன் சிங், போலா சிங், சோனு சிங் ஆகியோரை தேவன் விடுவிக்க; குடலிறக்க பிரச்சனையிலிருந்து சபை மூப்பர் ராணி கௌர் சுகம்பெற; சின்னா கிராமத்தில் ஆராதனைக் குழு ஆரம்பிக்க ஊழியர்கள் எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்த மாயிருப்போர் தங்கள் விசுவாசத்தில் பெலப்பட; காசா பகுதியில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள ஊழியரை தேவன் எழுப்பித்தர; ராஜா சான்சி, முல்லுநங்கல் ஆலயங்களில் தேவன் எழுப்புதலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

## உத்தராகண்ட்

### மல்தன்சோர்:

**ஷிஷு பால் & அனிதா**

**துதிக்க:** தனோரி, நபாப்புரா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க கர்த்தர் கிருபை செய்தார். மோகன் நகர் கிராமத்தில் பெண்கள் கூடுகை சிறப்பாக நடைபெற்றது. அசுத்தாவியின் பிடியிலிருந்து அஜய் மற்றும் குல்வந்த் சிங்கை விடுவித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கல்லீரல் தொற்றினால் பாதிக்கப் பட்டுள்ள மிஷனெரியின் மனைவி அனிதாவுக்கு தேவன் பூரண சுகமருள; பருமடார் மற்றும் பாம்நகர் எல்லைகளில் ஊழியம் விரிவடைய; பிரதாப்பூர், பாக்பூர், தாரி மற்றும் ஹல்துவா கிராமங்களில் புதிய தொடர்பாளர்களை தேவன் தந்தருள; வரும் நாட்களில் நடைபெறவிருக்கும் வாலிபர் மற்றம் சிறுவர் முகாம் பயனுள்ளதாக அமைய; இந்தர்பால், மீனாக்ஷி, தர்மேந்தர், அனுராதா, ஷேர்சிங் ஆகியோர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அனில்ராஜ், கோபால், மல்கித்சிங், பிரதாப் சிங் ஆகியோர் தேவனின் அன்பினால் தொடப்பட ஜெபிப்போம்.

## மே 6 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ராஜேந்திரன் S.
திருமதி. கிறிஸ்டி ராஜன் E.
திரு. சந்தியா நாயக், திரு. சாம்ராஜ் D.
திருமதி. விமலா டெய்சி ஜாண்பால் ஹாரிஸ்
செல்வி. மெர்சி நெம்லியான்மாவி

# ஹரியானா

## ஜீவன் நகர்:

### அலியாக்கீம் ஜெனா & தீபிகா

**துதிக்க:** அதிகளவு சர்க்கரை நோயினால் ஆபத்தான நிலைக்குச் சென்ற கிரண் கௌர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். லம்பி, அபுப்சேகர், ஷேர்கார்க், தாபாவலி ஆகிய கிராமங்களில் 1000 மணி நேர ஜெபம் சிறப்பாக நடைபெற்றது. லோகார் கிராமத்தைச் சேர்ந்த ராமன் என்பவரின் ஊக்கமான ஜெபத்தைக் கேட்ட தேவன் சொந்தமாக டிராக்டர் வாங்க கிருபை செய்தார். ஜீவன்நகர் பகுதியில் பரவி வந்த வைரல் காய்ச்சல் மற்றும் தொற்றுகளிலிருந்து மிஷெனரி மற்றும் சுதேச ஊழியர் குடும்பங்களை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாக நிலைத்திருக்க; ஊழிய விரிவாக்கத்திற்காக ஜீவன் நகர் பணித்தளத்தில் துணை மையம் அமைக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; திட்டமிட்டுள்ள சத்சங் கூடுகைகள், வேதபாட வகுப்புகள், ஜெபக்கூடுகைகள், படக்காட்சி ஊழியங்கள் எந்தவித தடையின்றி நடைபெற; மிஷனெரியின் மகன் ஜெஹோயாகீம் மூல வியாதியிலிருந்து சுகம்பெற; இப்பணித்தளத்திலுள்ள 22 மக்களினங்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தேவன் மிகுந்த பலனைத் தர ஜெபிப்போம்.

# ராஜஸ்தான்

## ஹனுமான்கட்: முதவத்து ராஜு நாயக் & புக்கியா ஜான்சிபாய்

**துதிக்க:** சுனிதாவின் ஜெபத்தைக் கேட்ட தேவன் அவரின் சகோதரருக்கு புது வாழ்வு அருளினார். டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட ஜாக்சர்சிங், கடுமையான காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட கிரண் கௌர் ஆகியோர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றனர். உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டு மரண படுக்கையிலிருந்த பரம்சிங்கிற்காக ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தின் மூலம் அவருக்கு பூரண சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பணித்தளத்தில் ஊழியத்திற்கு காணப்படும் எதிர்ப்புகள் மறைய; கர்ப்பவதியான பிரகாஷின் சரீர பெலவீனங்கள் மறைய; விசுவாசி போலாராமை இழக்கக்கொடுத்துள்ள அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலையும், சமாதானத்தையும் தேவன் கட்டளையிட; எதிர்ப்பின் காரணமாக பலர் விசுவாசத்தை விட்டு பின்வாங்குகிறார்கள். விசுவாசிகள் கிறிஸ்துவில் உறுதியாய் நிலைத்திருக்க; அறுவை சிகிச்சை செய்துள்ள சோமாவுக்கு தேவன் பூரண சுகமருள; ரஞ்செட்க்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள ஜெபிப்போம்.

மே
7
புதன்

உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. குணசெல்வி ஃப்ளாரன்ஸ் சுதாகரன்
திரு. சமரேந்திர சிங், திரு. குமாரவேல் S.
திரு. டேனியல் அருள்மணி J.
திருமதி. நகோமி ராஜம் சாவ் புன்யா
திருமதி. மேனகா கோபிகிருஷ்ணன்

**தபுக்காரா: ராஜம்மாள் ஜான்சன், டேனியல் மார்வெல்ராஜ் & ஜெபசீலி**

**துதிக்க:** ஷாஹாபாத் கிராமத்தைச் சேர்ந்த நவ்யாவின் மாமா மரணத்தின் விளிம்பில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நேரத்தில் நமது புதிய விசுவாசி நவ்யாவின் குடும்பத்துடன் இணைந்து அவருக்காக ஊக்கமாக ஜெபித்த போது தேவன் அற்புத சுகமருளினார். திரியாவாஸ் கிராமத்தைச் சேர்ந்த பவன் தொடர்ந்து வேதாகம வகுப்பில் கலந்துகொண்டு ஜெபித்தபோது அதிக சம்பளத்துடன் நல்ல வேலை கிடைக்க தேவன் கிருபை செய்தார். விவாகரத்துக்காக நீதிமன்றத்திற்கு சென்ற பிரீத்திக்காக விசுவாசிகள் ஜெபித்தபோது அவர் மனந்திரும்பி கணவருடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறார். லாக்டவுனுக்குப் பிறகு தனது வியாபாரத்தை மீண்டும் துவங்க சிரமப்பட்ட சரிதாவுக்கு ஜெபத்தின் மூலம் ஒரு கடை திறக்க தேவன் உதவி செய்தார். பூஜாவுக்கு நீண்ட நாட்களாக இருந்த சுவாச பிரச்சனை ஜெபத்தினால் சுகம்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அரசு பணிக்காக தேர்வுகள் எழுதியுள்ள விசுவாசிகள் வஜய், அனு, ராம்கன்யா ஆகியோர் வெற்றிபெற்று வேலை வாய்ப்புகள் பெற; விசுவாசி ரேகா விஜய்க்கு தேவன் சுகப்பிரசவம் அருள; இஸ்ரோதா கிராமத்தில் ஒருவர் பின் ஒருவராக இரண்டு பேர் இறந்துள்ளதால் மன அழுத்தத்திலிருக்கும் பூனம், மனிஷா, சங்கீதா, ரேஷ்மா ஆகியோருக்கு தேவன் ஆறுதலையும், சமாதானத்தையும் தர; இந்த மாதம் அறுவடை செய்யவுள்ள நமது விசுவாசிகளுக்கு நல்ல விளைச்சலையும், கால சூழ்நிலைகளையும் தேவன் சாதக மாக்கித்தர; ராய்சீக்கிய விசுவாசிகளுக்கு இடையூறாக காணப்படும் சமுதாய தடைகள் மற்றும் மிஷனெரிகளுக்கு ஊழியத்தில் வரும் எதிர்ப்புகள் நீங்கவும், எதிர்ப்போர் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## அவர் செட்டைகளின் மறைவில்

*ராஜஸ்தானிலுள்ள ஹனுமன்கார் பணித் தளத்தில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரி சுகவீனமாய் இருந்த தனது தாயாரை பார்த்துவிட்டு திரும்பும்போது ஹனுமன்கார் காவல்துறை அதிகாரி டி.எஸ்.பி. மூன்று முறை அலைபேசியில் தொடர்புகொண்டு ஆலய பதிவேடு, விசுவாசிகளின் விவரங்கள் போன்றவற்றை கேட்டு அறிந்து கொண்டார். இதனால் தனது பணித்தளத்தில் ஏதோ நடக்கிறது என்று மிஷனெரி உணர்ந்துகொண்டார். அதே சமயம் இவர்களுக்கு முன்பதிவு பயணச்சீட்டு கிடைக்காததால், உடல்நிலை சரியில்லாத குழந்தையுடன் பிரயாணம் செய்வது கடினம் என்று நினைத்து பிள்ளைகளை தாய் வீட்டில் விட்டுச் செல்ல தீர்மானித்தார். அச்சமயம் அவரது பணித்தள விசுவாசிகள் அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, 'பணித்தளத்தில் மூன்று நாட்கள் காவல்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தியதாகவும், ஊழியரைக் குறித்து விசாரித்து, அவரது தொலைபேசி எண்ணை கேட்டுப் பெற்றுக்கொண்டதாகவும் கூறி சில நாட்களுக்குப் பின் வருமாறு கேட்டுக் கொண்டனர்.' இந்த பதற்றமான சூழ்நிலை மாறவும், நமது ஊழியர்கள் விடுதலை யோடு ஊழியம் செய்யவும் பாரத்தோடு ஜெபிப்போம்.*

மே
8
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜஸ்டின் Y.
திருமதி. நிருபோமா கோஸ்லா நாத்தான் குமார்

## உத்தரப்பிரதேசம்

### ஜாலவ்ன்:

**கவித் ராகேஷ் ரத்திலால் &**
**ஈகார் ரேஷ்மா மாருதி**

**துதிக்க:** விசுவாசிகளின் ஜெபக் கூடுகை, இரவு ஜெபக் கூடுகைகள், நற்செய்தி கூட்டங்கள், சிறு ஜெபக் கூடுகைகள் தடையின்றி நடைபெற தேவன் கிருபை செய்தார். புதிய ஜெபக்குழுக்கள் துவங்க தேவன் உதவி செய்தார். இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ள புதிய விசுவாசிகளுக்காகவும், அவர்களின் குடும்பங்களுக்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் ஹேமலதா & தினேஷ் குடும்பத்தை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; இருதயப் பிரச்சனையிலிருந்து ராம் பகதூர், சரீர பெலவீனத்திலிருந்து ராமகாந்தி ஆகியோருக்கு தேவன் பூரண சுகமருள; ஒரு வாரகாலமாக காய்ச்சலினால் அவதிப்பட்டு வரும் ஒரு வயது குழந்தை சான்வி மற்றும் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள பிடோலி ஆகியோருக்கு தேவன் இரக்கம் பாராட்ட; புதிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிடவும், சுவிசேஷத் திற்கு எதிர்ப்பு தெரிவிப்போர் மனந் திரும்பி இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**பர்த்தனா: எஸ். ராஜன் & ஜெபமலர்**

**துதிக்க:** சிறுநீரகப் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டிருந்த ஜான்விக்கும், டெங்கு காய்ச்சலினால் அவதியுற்ற மனிஷாவுக்கும் தேவன் பரிபூரண சுகமருளினார். விபத்திலிருந்து விசுவாசி சஞ்சீவை தேவன் அற்புதமாய் பாது காத்தார். அனிதா, ராம்வீர், வில்பா ஆகியோருக்கு தேவன் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை அருளினார். மகளிர் தினத்தன்று பெண்களாகவே முழு ஆராதனையை நடத்த கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மேக்னா சபை மீது போடப் பட்டுள்ள வழக்கும், சுதேச ஊழியர்கள் விஜய் குமார், ஜெயகரன், ஷியாம் சுந்தர் மற்றும் சபை மூப்பர் துள்சிராம் ஆகியோரின் மீது போடப்பட்டுள்ள நீதி மன்ற வழக்கும் விரைவில் முடிக்கப்பட; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ராம்பேடி சிங்கிற்கு தேவன் பூரண சுகமருள; பிசாசின் பிடியினால் கஷ்டப்படும் கீதா, அனில், பிரேம லதா ஆகியோர் விடுதலை பெற; திருமணத்திற்காக காத்திருக்கும் சந்தியா வுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை அமைய; முதியோர் கல்வி நடத்தும் ஆசிரியரான சர்வேஷ் குடும்பம் சபை ஊழியங்களிலும் உற்சாகத்துடன் பங்கு பெற்று வருகிறார்கள். தேவன் அவர்களை வல்லமையாக எடுத்து பயன்படுத்த ஜெபிப்போம்.

மே
9
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. முத்துச்செல்வி செந்தில்குமார்
திரு. வகேரா பிரமோத்குமார் தர்மபாய்

## மத்தியப் பிரதேசம்

### தர்ணி & காண்ட்வா விடுதி:

**ஏகலைவன் ஜேம்ஸ் & பெரில்**

**துதிக்க:** ஷேக்புரா கிராமத்தில் புதிய ஆராதனைக்குழு தொடங்க தேவன் கிருபை செய்தார். ஜில்பிபவர் மற்றும் ஜமாபாலியா கிராமங்களில் கர்த்தரின் அன்பை பறைசாற்ற திறந்த வாசலை தேவன் கட்டளையிட்டார். இயேசு திரைப்பட நிகழ்ச்சியின் மூலம் அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டனர். தொலைநோக்கு திட்டத்தின் மூலம் புதிய கிராமங்களை சந்திக்க உதவி செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அடிக்கடி மயங்கி விழும் ராதிகாவுக்கு தேவன் பூரண சுகமருள; கண்பார்வை பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள ரேகா மற்றும் சீதாவுக்கு தேவன் பூரண சுகம்தர; இடுக்கி கிராமத்தினர் ஒருமனதோடு ஆலயம் கட்ட நிலத்தை ஒதுக்கித்தர; நடைபெறவிருக்கும் விடுமுறை வேதாகமப் பள்ளி சிறப்பாக நடைபெற; உஷ்ணத்தினால் விடுதிப் பிள்ளைகள் பாதிக்கப்படாமலிருக்க; கோர்க்கு இனத்திலிருந்து சுதேச ஊழியரை தேவன் எழுப்பித்தர; கசமார் கிராமத்தில் வசிக்கும் மகேஸ்வரி என்ற சிறுமிக்கு 15 நாட்களுக்குள் இரத்தம் குறைந்து உடல் வீங்குவது வழக்கமாக உள்ளது. பெற்றோரின் விசுவாசமுள்ள ஜெபத்தைக் கேட்டு தேவன் அற்புத சுகமருளவும், அதினிமித்தம் கிராமத்தினர் இயேசு கிறிஸ்துவை அறியும் வாய்ப்பைப் பெறவும் ஜெபிப்போம்.

## அஸோம்

### லக்கிம்பூர்:

**ஆரோன்சிங் நர்சாரி & ரீனா**

**துதிக்க:** புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை செய்தார். இரவு கூட்டங்களின் மூலம் விசுவாசிகள் உற்சாகப்படுத்தப்பட்டனர். தன்னார்வ ஊழியரின் மனைவிக்கு சுகவீனத்திலிருந்து தேவன் சுகமருளினார். கடந்த மாதம் அனைத்து நிகழ்ச்சிகளும் தடையின்றி நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் வளர; ஏழு கிராமங்களில் பின்தொடர் பணி தடையின்றி நடைபெற; புதிய ஜெபக்குழு துவங்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; குடிக்கு அடிமைப்பட்டுள்ள பீபுல் மற்றும் பாபுல் சுங்க்ராங் குடியிலிருந்து விடுதலைபெற; தன்னார்வ ஊழியரின் மனைவி ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், ஊழியத்தில் உற்சாகத்துடன் ஈடுபடவும்; எதிர்ப்பின் மத்தியிலும் நாரேன் சின்ட்டே மற்றும் சுரபி சின்ட்டே விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க ஜெபிப்போம்.

## மே 10 சனி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கென்னத் கரியப்பா
திருமதி. ரத்னம்மா சந்தியா நாயக்
திருமதி. ஜெயா கௌரி சிபி செல்வின்
திருமதி. சாந்தம்மாள் ஜாண்சன்
திரு. உம்பியாக் லால், திருமதி. சரணி டிகே
திருமதி. ஷீபா புஷ்பராணி ஜாண் பெனின்
திரு. ஹென்றி சாலமோன் G.
திரு. பங்காரு நாயுடு கர்ரி
திருமதி. ரஷ்மி பிரவா பிரதாப் ரஹாங்
திருமதி. சங்கீதா ஜெசிந்தா இம்மானுவேல் S.
திரு. டேனியல் தனசிங் S.

### கோகாமுக் & தகுவாகனா:

**டென்சிங் & கவிதா**

**துதிக்க:** வலிப்பு மற்றும் மூளை சம்பந்தபட்ட பிரச்சனையினால் அவதியுற்று வந்த லோக்கி நோரக் என்பவருக்காக விசுவாசிகள் உபவாசித்து ஜெபித்தபோது அவர் பூரண சுகம் பெறவே அவர் தற்போது இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளார். கோலிகான், பாலி சாப்பரி, கமான் சாப்பரி மற்றும் ரெகோம் சாப்பரி போன்ற புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க திறந்த வாசலை தேவன் கட்டளையிட்டுள்ளார். வயிற்றிலுள்ள கட்டியினால் கடுமையான வயிற்று வலி மற்றும் சாப்பிட முடியாமல் கஷ்டப்பட்டு வந்த ஜெயபதிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத சுகமருளினார். ஒய்கோனகாங் சாங்க்ரான் மற்றும் அவரது குடும்பத்தினர் வியாதி நீங்க பூஜைகள் செய்து, அனைத்தையும் இழந்து, உணவுக்குக்கூட வழியின்றி தவித்த வேளையில், இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டபோது தேவன் குடும்பத்தின் அனைத்து சூழ்நிலைகளையும் மாற்றியதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போதைப் பழக்கத்தினால் மனநிலை பாதிக்கப்பட்ட நிபுதேய் என்பவர் அதிலிருந்து விடுதலை பெற்று இரட்சிக்கப்பட; குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் கம்போதியை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; கண் பிரச்சனை மற்றும் கால் வலியால் அவதிப்படும் மெமோரி கமானை தேவன் குணப்படுத்த; ஹதியமோரா கிராமத்தில் நடைபெறும் ஆராதனைக்கு காணப்படும் தடைகள் நீங்க, செங்காலிசுட்டி கிராமத்தில் தற்போதுள்ள ஆலயத்தின் மேற்கூரை காற்று மழையினால் இடிந்து விழுந்ததால், தேவனை ஆராதிப்பதற்கு புதிய ஆலயம் விரைவில் கட்டப்பட ஜெபிப்போம்.

### *மறுபடியும் இயேசுவின் பாதம்*

*உத்தரகாண்ட், பாஸ்பூர் பணித்தளத்திலுள்ள தேவிபுரா கிராமத்தைச் சேர்ந்த சந்தூரி என்பவர் விசுவாசத்திலிருந்து பின்வாங்கி பழைய வழிபாட்டிற்கு திரும்பியதோடு, பிற விசுவாசிகளையும் அப்படியே செய்ய வற்புறுத்தியும் உள்ளார். பானகேடா கிராமத்தில் நடைபெறும் ஆராதனையையும் நிறுத்த வலியுறுத்தி வந்தார். திடீரென அவரது சகோதரி சுகவீனப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவர் அவரின் காலின் ஒரு பாதியை நீக்கவேண்டும் என்று கூறி அறுவை சிகிச்சையின் மூலம் பாதிக்காலை அகற்றிவிட்டனர். சந்தூரி தனது கிராமத்திற்குச் சென்ற போது, கிராமத்தினர் அனைவரும் அவருக்கு எதிராக மாறியதை அறிந்து தனது தவறை உணர்ந்து, பாவத்தை அறிக்கையிட்டு அழுது ஜெபித்தார். மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ள அவர் தனது சகோதரிக்காக ஜெபிக்கும்படி சபையாரைக் கேட்டுக்கொண்டார்.*




**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜோன்ஸ் ஸ்வீட்லின் பால் டேனியல்
திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ்
திரு. ஆனந்த குமார் செல்வராஜ் V.
திருமதி. ஜின்சி சாந்தகுமார் J.

## ஜார்க்கண்ட்

### கங்குபாடா சிறுமியர் விடுதி:

**ஈவ்லின் பாக்கியா, எஸ்தர் சாவித்ரி**

**துதிக்க:** கடந்த மாதத்தில் விடுதி பிள்ளைகள் அனைவரும் தங்களின் முழு ஆண்டு தேர்வை நல்ல முறையில் எழுதி முடிக்க கர்த்தர் உதவி செய்தார். விளையாட்டு பயிற்சி எடுப்பதற்கு மைதானம் இல்லாத நிலையிலும் தேவ கிருபையால் விளையாட்டு போட்டியில் 15 பரிசுகள் வாங்க தேவன் அநுக்கிரகம் செய்தார். புதிய கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் நடைபெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விடுதியில் படிக்கும் பிரிசில்லா (7ஆம் வகுப்பு), மரியம் (5ஆம் வகுப்பு) ஆகிய இரண்டு பிள்ளை களின் தாயார் வியாதியினால் பாதிக்கப் பட்டு மரித்து விட்டார்கள். இந்த பிள்ளை களுக்காகவும், அவர்களின் குடும்பத்தின ருக்காகவும் ஜெபிப்போம். கோடை காலத்தில் ஏற்படும் தண்ணீர் பற்றாக் குறை நீங்க; அம்மைநோய், மலேரியா, வலிப்பு வியாதி போன்றவை வராதபடி விடுதியிலுள்ள அனைவரையும் கர்த்தர் பாதுகாக்க; விடுமுறைக்குச் வீட்டிற்கு சென்றிருக்கும் பிள்ளைகளின் சுகத் திற்காக, ஆவிக்குரிய வாழ்விற்காக; விலைவாசி உயர்வின் காரணமாக எல்லா பள்ளிகளிலும் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பிள்ளைகளின் படிப்பு பாதிக்காதபடி உணவு, சீருடை, புத்தகம் போன்ற அனைத்து தேவைகளும் தடையின்றி நிறைவாய் கிடைக்க ஜெபிப்போம்.

### நோனிஹாட்:

**பென்ஹர் எம். & மேரி ஜான்சி ராணி**

**துதிக்க:** மரத்திலிருந்து விழுந்ததால் சிறுநீரகப்பாதையில் நரம்பு சேதமடைந்து மரணத்தருவாயிலிருந்த தேவ்லால் முர்மு ஜெபத்தின் மூலம் உயிர்பெற்றுள்ளார். காந்தினி மராண்டியின் கர்ப்பப்பையில் இருந்த பெரிய கட்டி அறுவை சிகிச்சையின் மூலம் எவ்வித பாதிப்பின்றி அகற்றப்பட தேவன் உதவி செய்தார். பஹாமுனி ஹஸ்தா மஞ்சள்காமாலை நோயிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றார். ஒன்பது இடங்களில் ஆவிக்குரிய எழுச்சி முகாம் நன்கு நடத்தப்பட்டன. பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு படுக்கையிலிருந்த தலாமாய் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று ஆலயத்திற்கு நடந்து வர கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜித்லால் டுடு, திவாசி சோரன், புத்லால் சோரன் ஆகியோர் மனநிலை பாதிப்பிலிருந்து விடுதலைபெற; புதிய விசுவாசியான பாபய் முர்மு பக்கவாதம் மற்றும் வலிப்பு வியாதியிலிருந்து குண மடைய; சோனலால் கிஸ்கு சயரோகத்தி லிருந்தும், பபுலு ஹஸ்தா வலிப்பு வியாதி யிலிருந்தும், டோர்பாரி முர்மு சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும் பரிபூரண சுகம்பெற; இருசக்கர வாகன விபத்தில் மரித்துப்போன பக்கு ஹெம்ரோம் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; டாம்னா, பாரமசியா ஆகிய சபைகளின் மூப்பர்கள் வேதத்தின்படி தங்களை காத்துக்கொள்ள ஜெபிப்போம்.

## மே 12 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. குமார் பால் K.
திருமதி. மித்லேஷ் தீப்ரத்னா

### கைராபானி சிறுவர் விடுதி:
### மனோஜ்குமார் பானி & சந்தானி பானி

**துதிக்க:** விடுதி மாணவர்களுக்கு வேதாகம வகுப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. TWR இயக்கத்தின் மூலம் நடத்தப்பட்ட வேதாகமப் போட்டியில் நமது மாணவர்கள் முதல் பரிசை வென்றனர். பெற்றோருக்கு நடத்தப்பட்ட கூடுகையில் 70 பேர் கலந்துகொண்டனர். மாணவர்களுக்கு உயர் கல்விக்கான ஆலோசனை வகுப்புகள் நடத்த கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 12ஆம் வகுப்பு முடித்துள்ள 7 மாணவர்கள் உயர் கல்விக்கான தகுந்த வகுப்புகளை தேவ சித்தத்தின்படி தேர்வு செய்ய; ஆங்கில பாடத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு தேவன் ஞானம் அருள; கோடைக்காலத்தில் நிலவும் தண்ணீர் பற்றாக்குறையை தேவன் பூர்த்தி செய்ய; புதிதாக சேர்க்கப்பட்டுள்ள சிறுவர்கள் உற்சாகத்துடன் விடுதியில் தங்கி படிக்கும் சூழலை தேவன் உருவாக்கித்தர; கால் எலும்பு முறிவினால் கஷ்டப்படும் தோரம் தேவ் ஹெம்ரோம் சுகம்பெற; விடுதி ஊழியர்களுக்கு தேவன் நல்ல சுகமருளி, உற்சாகத்துடன் பணி செய்ய ஜெபிப்போம்.

### தெலோ: அருளானந்தம் & லைசா

**துதிக்க:** டோம்டி கிராமத்தைச் சேர்ந்த ரமேஷ் சோரனை பெரிய விபத்திலிருந்து தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். கடந்த ஓராண்டு காலமாக சொந்த வீட்டிற்காக ஜெபித்து வந்த மார்த்தா ஹெம்ரோமுக்கு அரசாங்கத்தின் மூலம் வீடு கிடைக்க தேவன் உதவி செய்தார். விஷப்பாம்பு கடியிலிருந்து அக்னேஷிஷ்யை தேவன் பாதுகாத்தார். குட்டிபேரா கிராமத்தில் நடைபெற்ற மேளாவில் 3800க்கும் அதிகமானோர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். பால் கிராமத்தைச் சேர்ந்த மோசே ஹன்ஸ்தா மனநிலை பாதிக்கப்பட்டு சுற்றித்திரிந்தார். அவருக்காக கிராமத்தின் விசுவாசிகள் தினமும் கூடி ஜெபித்தபோது தேவன் அவருக்கு பூரண சுகமருளினதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளோர் தேவ அறிவில் வளர; மலையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இரவு ஜெபக் கூடுகையில் அநேகர் கலந்துகொள்ள; மூண்ட்லி, ரோன்சாரா, பத்தோர்கட்டா ஆகிய ஆராதனைக் குழுக்களில் கலந்துகொள்வோர் விசுவாசத்தில் வேரூன்றி வளர; ரோஜன் பகுதியில் பகல் நேர பராமரிப்பு மையத்தை நடத்த ஏற்ற இடத்தை தேவன் தந்தருள; ரங்கா சபையின் மூப்பர் பப்லு பாஸ்கி, ராஜோன் சபை மூப்பர் பர்னபாஸ் ஹன்ஸ்தக், பிரிஸில்லா பாஸ்கி, சாந்தி முர்மு ஆகியோரை காச நோயிலிருந்து தேவன் குணப்படுத்த; ராஜோன், கேரோசோல், முர்காபானி, கல்டா ஆகிய கிராமங்களில் விரைவில் ஆலயங்கள் கட்டப்பட; இப்பகுதியில் ஊழியம் விரிவடைய தன்னார்வ ஊழியர்களை தேவன் எழுப்பித்தர ஜெபிப்போம்.

## மே 13 செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஆல்பின் T., திரு. மித்ரன் E.
திரு. ரமேஷ் வேல்ராஜ் A.
திரு. முத்தையா U. சாமுவேல்
திருமதி. பங்கஜம் ஹரிபாபு குந்த்ரா
திருமதி. ஹேனா மேரி ஸ்லெஸர் ராஜேந்திரன்
திரு. நெஹேமியா

### அமலகாச்சி:

**கஜன் சம்பிரமரி & ரோஷிலா**

**துதிக்க:** சில்காவன் ஆலயத்தில் 30 விசுவாசிகள் கூடி ஜெபித்து கொண்டிருந்தபோது மேற்கூரையிலிருந்து விஷபாம்பு ஒன்று விசுவாசிகளின் மேல் விழுந்தபோதிலும் யாருக்கும் எந்த தீங்கும் அணுகாதபடி தேவன் பாதுகாத்தார். விசுவாசிகளின் ஆவிக்குரிய மேளா சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். ஆபத்தான நிலையிலிருந்த சுமன் பஹாரியா என்ற குழந்தைக்கு ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத சுகமருளினதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜிர்லி கிராமத்தில் விசுவாசிகளுக்கு காணப்படும் எதிர்ப்புகள் நீங்கவும், விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் உறுதியாய் நின்று தங்கள் விசுவாசத்தை அறிக்கையிடவும்; நடைபெறவிருக்கும் விடுமுறை வேதாகமப்பள்ளி, வாலிபர் முகாம் பயனுள்ளதாய் அமைய; இப்பகுதியில் நிலவும் தண்ணீர் பஞ்சம் நீங்க; வரும் நாட்களில் முதியோர் கல்வி திட்டம் சிறப்பாக நடைபெற; சாமுவேல் பஹாரியா, லூக்கா பஹாரியா குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; சன்பஹார் கிராமத்தில் துவங்கப்பட்டுள்ள ஆராதனைக் குழுவை நடத்த அர்ப்பணிப்புள்ள தன்னார்வ ஊழியரை தேவன் எழுப்பித்தர; ஊழியத்திற்கு இடையூறு விளைவிக்கும் ஜாமா, டோகோலா, சிபு, லெண்டோ, கம்ப்ளா, பாமோன், ஜர்கோ, சுனில் ஆகிய மந்திரவாதிகள் மனந்திரும்ப ஜெபிப்போம்.

### ராஜ்மஹால் சமுதாய கல்லூரி:

**ஸ்டாலின் ஜீவா & செல்வராணி**

**துதிக்க:** நமது மிஷனெரிகள், கல்லூரி ஊழியர்கள் மற்றும் மாணவர்களை கொடிய விஷப் பூச்சிகள், விஷப் பாம்புகள் மற்றும் பலவித ஆபத்துகளிலிருந்து தேவன் பாதுகாத்தார். மாணவர்கள் படிப்பிலும், விளையாட்டுகளிலும் சிறந்து விளங்குகின்றனர். சமுதாயக் கல்லூரியின் அனைத்து தேவைகளையும் தேவன் குறைவின்றி சந்தித்து வருவதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வரும் கல்வியாண்டில் கணிப்பொறி, செவிலியர், தையல், ஓட்டுநர், மின்சாரத்துறை, வெல்டிங் போன்ற பயிற்சிகளுக்கு அநேக மாணவர்கள் சேரவும், கணினி மற்றும் செவிலியர் படிப்புகளை கற்பிக்க அர்ப்பணமுள்ள ஆசிரியர்களை தேவன் எழுப்பித்தரவும்; முன்னாள் மாணவர்களின் ஆவிக்குரிய மற்றும் சாட்சியான வாழ்விற்காக, புதிய மாணவர்களின் படிப்பிற்காக, இரட்சிப்பிற்காக, முடக்கு நோய்க்கு சிகிச்சைப் பெற்று வரும் ஸ்டாலின் ஜீவா & ராணி ஸ்டாலின் பூரண சுகமடைய; சிற்றாலயத்தின் மேற்கூரை மற்றும் பணிக்கான தேவைகள் சந்திக்கப்பட; சுற்றுச் சுவர் மற்றும் ஆண்கள் தங்குமிடம் அமைக்க அனுமதி கிடைக்க ஜெபிப்போம்.

மே
14
புதன்
*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஞானபுஷ்பம் அருள்ராஜ்
திரு. வினோத் குமார் சிங், திரு. ரவி K.
திருமதி. மமதா திம்மண்ணா

## பர்ஹர்வா & பத்னா சிறுமியர் விடுதி:

**பீட்டர் பிரபாகரன்& விமலா; வசாவா அருணாபேன், சிங் நய் சியான்**

**துதிக்க:** மூன்று இடங்களில் லெந்துகால உபவாச ஜெபம், மூன்று இடங்களில் சபை மூப்பர் கூடுகை, விசுவாசிகள் கூடுகைகள் மற்றும் விடுமுறை வேதாகமப் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி, விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு திடப்படுத்தல் வகுப்புகள் ஆகியவை நடத்த தேவன் கிருபை செய்தார். வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்த பாபுதான் சோரன், சோனா கிஸ்கு, மரியம் முர்மு, சோகாகினி ஹன்ஸ்தா, சீமோன் கிஸ்கு ஆகியோருக்கு சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பொருளாதாரத் தேவைகளை சந்திக்க சாராயம் விற்கும் நமது விசுவாசிகள் சிலருக்கு மாற்று வேலை வாய்ப்புகளை தேவன் தந்தருள; தடைசெய்யப்பட்டுள்ள பாரமசியா, ஜிடியா ஆராதனைக் குழுக்கள் மீண்டும் துவங்கப்பட, கெஸ்ரோ ஆலயம் மீண்டும் கட்டப்பட; சிமல்டாப், குவர்பூர், ஜமுர், சூச்சி, கொக்காரா கிராமங்களில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; பெலவீனப்பட்டுள்ள சோகானி முர்மு, கெஸ்ரோ, கலாசர் ஆகியோருக்கு தேவன் சுகமருள; நமது விடுதியில் படிக்கும் 210 பிள்ளைகளுக்கும் இந்த கல்வியாண்டின் பள்ளிக்கட்டணம் தடையின்றி கிடைக்க ஜெபிப்போம்.

## மஹாரோ:

**இம்மானுவேல் கார்த்தி & ஜோதி லக்ஷ்மி**

**துதிக்க:** சிவக்கோல் கிராமத்தைச் சேர்ந்த சிவலால் பூஜாரின் மகளை விஷப்பாம்பு கடித்தது.விசுவாசிகள் அனைவரும் கூடி ஜெபித்தபோது தேவன் புதுஜீவனை அருளினார். பமன்டியா கிராமத்தைச் சேர்ந்த ரஞ்சித் பூஜார் விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியதோடு தன் பெற்றோரும் ஆலயத்திற்கு செல்வதை தடைசெய்து வந்தார். அவருக்காக சபையார் ஊக்கத்துடன் ஜெபித்தபோது ரஞ்சித் மனந்திரும்பி மீண்டும் ஆலய ஆராதனையில் பங்குபெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டுவோர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; பஸ்திரா கிராமத்தைச் சேர்ந்த சந்திரகாந்தியின் சிறுநீரகம் சீராக செயல்பட; உயர் கல்விக்கு காத்திருக்கும் வாலிபர்கள் தேவ சித்தத்தின்படி படிப்பைத் தேர்வு செய்து படிக்க; பலவித அடிமைத்தனத்திலிருக்கும் வாலிபர்கள் விடுதலைபெற்று இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

மே
15
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜான்சி ராஜேந்திரன்
திரு. தாமஸ் மேத்யூ, திரு. பாபு புஷ்பராஜ் D.
திருமதி. சாந்தி ஞானப்பண்டிதன்
திருமதி. டாக்டர். வில்சட் கிறிஸ் L.
திருமதி. செல்வராணி பரணிதரன்
திருமதி. லட்சுமி வேடியப்பன்
திரு. பிஜு லால், திரு. பாகிரதி பிசோயி
திரு. கிம்பால் திலீப்பாய் ரகுபாய்
திரு. சுரேஷ் மால்தோ S.
திரு. தேபாஷிஸ் ஹெம்ரோம்
செல்வி. மெலிடக், திரு. அஜய் பார்டே

# மேற்கு வங்காளம்

## தப்பன்: ஹரமோகன் பிரபுதாஸ் நாயக் & சூசம்மா

**துதிக்க:** கடந்த நிதியாண்டில் அநேக கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலை அருளினார். ஜெபத்தின் மூலம் மூக்கில் இரத்தம் வடிந்துகொண்டிருந்த ஜெய்தீப் முர்முவையும், பக்கவாதத்திலிருந்து பாஜாய் சோரனையும் தேவன் குணப்படுத்தினார். பருல் டுடுவுக்கு சுகப்பிரசவம் அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலயம் வருவதை நிறுத்தியுள்ள ஸ்ரீமோல், ஜத்தின் கிஸ்கு ஆகியோர் தங்கள் பழைய தொழிலில் இருந்து விடுபட்டு மீண்டும் விசுவாசத்திற்குள் வர; தப்பன் பகுதியில் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; நெஞ்சு வலியிலிருந்து சபீனா ஹெம்ரோம், இடது கை வலியிலிருந்து லக்கி டுடு, வாத நோயிலிருந்து அன்டாலல் டுடு, நான்கு மாதமாக கால் வலியில் கஷ்டபடும் மாய்கா டுடு ஆகியோரை தேவன் குணப்படுத்த; டெடுல்மூடா கிராமத்தைச் சேர்ந்த பிலிமோன் முர்மு மற்றும் பரமேஸ்வர் முர்மு தேவனின் இரட்சிப்பைப் பெற்று கொள்ள ஜெபிப்போம்.

## மால்டா:

### உதிப்தகுமார் பாக் & சூர்ஜ்ய காந்தி

**துதிக்க:** ஷிட்டல்பூர் மற்றும் நாக்ராம் பகுதிகளில் மீண்டும் ஆராதனை துவங்கப்பட்டு, புதிதாக அநேகர் கலந்துகொண்டு தேவனை ஆராதித்து வருகின்றனர். மேற்கு வங்காளத்தில் வாழும் மால்தோ மக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசலை தேவன் தந்து வருகிறார்; இப்பணித்தளத்தில் ஊழியம் செய்யும் மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள், தன்னார்வ ஊழியர்கள் அனைவருக்கும் தேவன் தந்தருளின சுகம் மற்றும் பிரயாண பாதுகாப்புகளுக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மேற்கு வங்காளத்திலுள்ள சுடானி, கெலாரி, குரியேல் மற்றும் பல கிராமங்களில் வாழும் மால்தோ மக்களுக்கு ஷிட்டல்பூர் கிராம விசுவாசிகள் சாட்சியாய் வாழ்ந்து அநேகரை கிறிஸ்துவண்டை வழிநடத்த; சுனிராம், சுக்கு, லோடிலா ஆகியோரின் குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; கைவிரல்களில் ஏற்பட்டுள்ள தொற்றிலிருந்து அரோட்டி பஹாரியாவையும், மூட்டு வலியிலிருந்து புதின் பஹாரியாவையும் தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

மே
16
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. எபனேசர் G. சாம், திரு. வில்சன் D.
திருமதி. சினிக்தா ஜீவன் ரஞ்சன்
திருமதி. கிறிஸ்டி ஜெயந்தி சதீஷ் குமார்

## கங்காராம்பூர்: தீஹே ஜேம்ஸ் & சரணி

**துதிக்க:** அநேக புதிய இடங்களில் நற்செய்தி கூட்டங்கள் நடத்தவும், இயேசு திரைப்படம் திரையிடவும், புதிய விசுவாசிகளுக்கானக் கூடுகை சிறப்பாக நடைபெறவும் தேவன் உதவி செய்தார். குடிப்பழக்கத்தினால் அடிக்கடி மனைவியுடன் சண்டையிட்டு வந்த பால்டன் சிரேன் சபையாரின் ஜெபத்தின் மூலம் குடியிலிருந்து விடுதலைப் பெற்று, குடும்பத்துடன் சமாதானமாக வாழ்கிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திட்டமிட்டுள்ள அனைத்துக் கூடுகைகளும் தடையின்றி நடைபெறவும், மக்கள் இருதயங்களில் தேவன் கிரியை செய்யவும், விசுவாசிகள் இக்கூட்டங்களில் உற்சாகத்துடன் பங்குவும் பெறவும்; நமது சபை விசுவாசிகளும், மூப்பர்களும் ஆவிக்குரிய சாட்சியுள்ள வாழ்க்கை வாழ ஜெபிப்போம்.

## கரன்டிகி: கய்தியென்ஜின் வய்ஃபெய் &மெலடி டிம்சோன்டிங்

**துதிக்க:** புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், இரவு கூட்டங்கள் நடத்தவும் தேவன் கிருபை செய்தார். உடல் வலி மற்றும் வீக்கத்திலிருந்து நமது விசுவாசி பாட்டியா டுடுவுக்கு ஜெபத்தினால் தேவன்அற்புத சுக மருளினார். விசுவாசிகளின் விவசாய சாகுபடி வேலைகள் நன்றாக நடை பெற்று வருகிறது. குண்டர்கோ கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசி பர்கா கிஸ்குவின் பசு மாடு நீண்ட காலத்திற்கு பிறகு ஜெபத்தின் மூலம் கருவுற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஆசீர்வாதமாக நடைபெற; விசுவாசத்தைவிட்டு பின் வாங்கியுள்ள ஹோபன் ஹன்ஸ்தா குடும்பம் & சிபு பாஸ்கி குடும்பம் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மதவாதிகளின் இருதயங்களில் தேவன் இடைபட; உல்குட்டு மற்றும் சட்னிகுட்டு கிராமங்களில் ஞாயிறு ஆராதனை விரைவில் துவங்கப்பட; சோஹர்காவ் கிராமத்தில் கிறிஸ்துவினிமித்தம் விசுவாசிகள் கிராமத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்களின் பாதுகாப்பிற்காக; ஆறு வயதாகியும் உட்கார முடியாமல் பெலவீனப்பட்டுள்ள சுதீப் முர்முவுக்கு தேவன் அற்புதம் செய்ய; இப்பணித்தளத்திற்குத் தேவையான சுதேச ஊழியர்களை தேவன் எழுப்பித்தர ஜெபிப்போம்.

**மே**
**17**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆசீர் T. Y. P.
திருமதி. உல்தாள் மேகி எஸ்தர் தாமஸ் S.K.
திருமதி. வசந்தி ஜெபக்குமார்
திருமதி. ஞான ஜெபஷீலா டேனியல் அருள்மணி
திரு. முதாவத்து ராஜு நாயக்

**பாலூர்ஹட்: ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின், ரஞ்சன்**

**துதிக்க:** வெளிப்புற சந்திப்பு ஊழியத்தில் மிலன் முர்மு அதிக ஆர்வம் காட்டி வருகின்றார். இரண்டு பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். தங்கள் அண்டை வீட்டார் இரட்சிக்கப்பட்டு சமாதானத்தோடு வாழவேண்டும் என்று அனுதினமும் விசுவாசிகள் தவறாமல் ஜெபித்து வருகின்றனர். விசுவாசிகள் கூடி தேவனை ஆராதிக்க ஒரு ஆலயம் கட்ட நிலத்தை நன்கொடையாக கொடுக்க போன்ஹாட் கிராமத்தின் விசுவாசி முன்வந்துள்ளார். உயர் இரத்த அழுத்தத்திலிருந்து அமோல் கிஸ்கு, விபத்தில் ஏற்பட்ட காயங்களிலிருந்து கஜோலி சோரன், தலை மற்றும் காது வலியிலிருந்து சரோஜினி ஹஸ்தா, குறைந்த இரத்த அழுத்தத்திலிருந்து சுஸ்மிதா டுடு ஆகியோர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இந்நிதியாண்டில் செய்யப்படும் ஊழியங்கள் மிகுந்த பலனைத் தர; பல கிராமங்கள் கொண்ட இந்த பஞ்சாயத்தில் இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிவிக்கவும், திரளானோர் இரட்சிக்கப்படவும்; சிமோல் மார்டி-பக்க வாதம், ஜோஹன் முர்மு-தோலில் தொற்று, அரோட்டி ஹஸ்தா & சுசன்னா ஹஸ்தா-டைபாய்டு & மஞ்சள் காமாலை, ரூபா ஹெம்ரோம்- டைபாய்டு ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; அலோ முர்மு அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற; நமது விசுவாசிகளின் பிள்ளைகள் ஞாயிறு ஆராதனையிலும், சிறுவர் வகுப்புகளிலும், வேதாகம வகுப்புகளிலும் தவறாமல் பங்குபெற; வரும் நாட்களில் நடத்த திட்டமிட்டுள்ள அனைத்து ஊழியங்களும் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

## அடைக்கலமும் பெலனும்

*ராஜஸ்தான், தப்காரா பணித்தளத்திலுள்ள லாவண்டர் கிராமத்தில், மனநிலை பாதிக்கப் பட்டிருந்த ஈஸ்வருக்காக ஜெபித்துவிட்டு வெட்டியாவாஸ் கிராமத்தின் வழியாக நமது ஊழியர் மற்றும் அவரது மனைவி வீடு திரும்பிக்கொண்டிருந்தனர். அப்பொழுது அக்கிராமத்திலுள்ள குருதுவாரா குழுவினர் நமது ஊழியர்களைப் பின்தொடர்ந்து அவர்களைப் பிடித்து அடித்துள்ளனர். தேவ கிருபையால் அவர்கள் அங்கிருந்து தப்பி வீடு திரும்பினர். அதைத்தொடர்ந்து குருதுவாரா குழுவினர் நமது ராய்சீக்கிய விசுவாசிகளின் வீடுகளுக்குச் சென்று, அவர்களை மிரட்டி ஒரு மாதத்திற்குள் தாய்மதம் திரும்ப வேண்டுமென்று அவகாசம் தந்துள்ளனர். ஓரிரு குடும்பங்கள் தங்கள் விசுவாசத்தில் பின்வாங்கிவிட்டனர். எதிர்ப்பாளர்களின் இருதயங்களில் தேவன் கிரியைசெய்யவும், ராய்சீக்கிய விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிற்கவும், ஊழியர்களின் பாதுகாப்பிற்காகவும் ஊக்கமாக ஜெபிப்போம்.*

**மே**

**18**

**ஞாயிறு**

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ராஜம்மாள் ஜாண்சன்
திருமதி. எலிசபெத் சாலமோன் ஞானசேகர்
செல்வி. கோன்கனி சந்திரிகாபேன் சாஹன்பாய்
திரு. ஸ்டீபன் R., திரு. முத்துக்குமார் M.
திருமதி. பொற்செல்வி ஃபெலிக்ஸ் கமாலியேல்
திருமதி. ரீட்டாஞ்சலி கரடா ஹமுவேல் லிம்மா
திருமதி. ஷீபா வெங்கடேஷ் வடார்
திரு. கவித் ராகேஷ் ரத்திலால்
திருமதி. ஜான்சி ராணி யுவனேஷ்
திருமதி. சிங் கான் மாவி தங்வன்சங்

## ராணிகஞ்ச்:

### துருபராஜ் பெபர்த்தா & புஷ்பாஞ்சலி

**துதிக்க:** ஹசிமாசி கிராமத்தைச் சேர்ந்த எலினா முர்மு மற்றும் சத்கேரா கிராமத்தைச் சேர்ந்த முங்லி சோரன் ஆகியோருக்கு வயிற்றுப்போக்கிலிருந்து கர்த்தர் சுகமருளினார். புதிய கிராமங்களில் இரவுக் கூடுகைகள் தடையின்றி நடத்த தேவன் கிருபை செய்தார். இரண்டு இடங்களில் எவ்வித தடையுமின்றி இயேசு திரைப்படம் திரையிட தேவன் உதவி செய்தார். நீண்ட காலமாக ஆலய ஆராதனையில் பங்குபெறாமலிருந்த சுனிராம் டுடு குடும்பத்திற்காக சபையார் தொடர்ந்து ஜெபித்தபோது மீண்டும் அவர்கள் ஆலயத்திற்கு வர தேவன் உதவி செய்தார். நடைபெற்ற உபவாச ஜெபத்தில் அநேக வாலிபர்கள் வாஞ்சையோடு கலந்து கொண்டு ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். லெந்து நாட்களில் நமது விசுவாசிகள் ஒவ்வொரு இல்லங்களையும் சந்தித்து உபவாசித்து ஜெபித்து வருகின்றனர்; ராணிகஞ்ச் பணித்தளத்தில் பிராந்திய அளவில் நடைபெற்ற மேளாவில் திரளானோர் கலந்துகொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். இம்மேளாவை நடத்த கால் பந்து விளையாட்டு மைதானத்தை வழங்கிய அதிகாரிகளுக்காகவும், அனுமதி அளித்த காவல் துறை அதிகாரிகளுக்காகவும், மின்சார வாரியத்திற்காகவும், இம்மேளாவின் ஆசீர்வாதத்திற்காக ஜெபித்த அனைவருக்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவுள்ள அனைத்து கூட்டங்களும் தடையின்றி நடைபெற; மேற்படிப்பிற்காக தேர்வுகள் எழுதும் விசுவாசிகளின் பிள்ளைகள் நல்ல மதிப்பெண்களுடன் வெற்றிபெற; கன்டோர் கிராமத் தலைவர்கள் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; சுதேச ஊழியரின் குடும்பத்திற்கு தேவன் நல்ல ஆரோக்கியத்தைக் கட்டளையிட; விசுவாசிகள் ஆத்தும ஆதாயப் பணியில் வாஞ்சையுடன் ஈடுபட; விசுவாசத்தை விட்டு பின்வாங்கியுள்ளோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; நடைபெறும் ஆவிக்குரியக் கூடுகைகள் மற்றும் ஞாயிறு ஆராதனைகளில் அனைத்து விசுவாசிகள், வாலிபர்கள் மற்றும் சபை மூப்பர்கள் தவறாமல் பங்குபெற ஜெபிப்போம்.

## மே 19 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜான்சி பாலாஜி G.
திரு. ஹேமந்த குமார் சபார்

### பாக்குவாஹாட்: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** விசுவாசி மரியம் டுடுவின் கணவர் வேலை நிமித்தம் பெங்களூருக்கு புலம்பெயர்ந்து சென்றவர் நினைவாற்றலை இழந்து சக ஊழியர்களை விட்டு பிரிந்து காணாமல் போய்விட்டார். அவருக்காக குடும்பத்தினர் செய்த ஊக்கமான ஜெபத்தினால் மீண்டும் பத்திரமாக அவர் வீடுவந்து சேர்ந்தார். கடன் பிரச்சனையிலிருந்து நரேஷ் குடும்பத்தை தேவன் விடுவித்தார். சுசிலா பெஸ்ரா, விஸ்வநாத் டுடு, ராஜன் முர்முவின் தாயாருக்கு ஜெபத்தின் மூலம் சரீர பெலவீனங்களிலிருந்து தேவன் சுகமருளினார். குட்கு கிராமத்தைச் சேர்ந்த சுனில் மரண்டி குடும்பம் விசுவாசத்தினிமித்தம் கிராமத்தினரால் வெளியேற்றப்பட்டபோதிலும் விசுவாசத்தில் உறுதியாக இருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நீம்டங்கா மற்றும் சில்தானி பகுதிகளில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க, விஸ்வந்த் டுடு, கரு ஹஸ்தா ஆகியோர் தொடர்ந்து ஆலய ஆராதனையில் பங்குபெற, முதியோர் கல்வி விரைவில் துவங்கப்பட; மாணிக்பூர் சபையைச் சேர்ந்த கோமலி ஹஸ்தா பக்கவாதத்திலிருந்து சுகம்பெற; மால்டோபாடா, படாடியா, தாலிகோட்டு, கோபால்பூர் ஆகிய ஆராதனைக் குழுக்கள் சபைகளாக வளர்ச்சிப்பெற; ஆலயம் கட்ட நிலம் வழங்கக்கூடாதென்று குடும்பத்தில் பிரச்சனை செய்து வரும் சுஜோன் ஹெம்ரோம் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; உத்தர்கர்மா பகுதியில் அதிகரித்து வரும் கள்ள தீர்க்கதரிசிகளிடமிருந்து விசுவாசிகளை தேவன் பாதுகாக்க; சில்தானி பகுதியைச் சேர்ந்த பிலிப், மாலின் டுடு குடிப்பழக்கத்திலிருந்து விடுதலைபெற; இக்கிராமத்திலுள்ள மக்கள் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; அர்ப்பணமுள்ள தலைவர்களை சபைகளிலிருந்து தேவன் எழுப்பித்தர ஜெபிப்போம்.

## சத்தீஸ்கார்

### லுடேக்: கருணாகரன் & எலிசபெத்

**துதிக்க:** 16 வயது அஞ்சலிக்கு உதிரப்போக்கிலிருந்து தேவன் சுகமருளினார். அநேக மாதங்களாக பேச இயலாமலிருந்த 14 வயது ரோஷின் மிஞ்ச் ஜெபத்தின் மூலம் பேசத் துவங்கியுள்ளாள். ஜெபத்தின் மூலம் நோகார்சாய் தனது நிலத்தை திரும்பப்பெறவும், வீடு கட்டவும் தேவன் உதவி செய்தார். சுதேச ஊழியரான சஞ்சய் எக்கா & அம்ரிட்டா எக்காவை இருசக்கர வாகன விபத்திலிருந்து அற்புதமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோகியாகார் கிராமத்தைச் சேர்ந்த ஜெயா மார்பக புற்றுநோயிலிருந்து பரிபூரண சுகம்பெற; பஞ்சம் என்பவருக்கு சீரான கண்பார்வையை தேவன் தந்தருள; சைத்து, அனிஷ், பசந்தி, அமித், சந்தோஷ் ஆகியோரின் குடும்பங்களை குழந்தை பாக்கியத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; பக்கவாதத்திலிருந்து விசுவாசி ஜென்டேரை தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

மே
20
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஸ்டான்லி ஜார்ஜ், திருமதி. எஸ்தர் எசக்கியா
திருமதி. ஞானலின் செல்வ விஜிலா சுந்தர்சிங்
திரு. மிர்ஜ்யோ கிஸ்கு, திரு. இளங்கோவன் S.
திரு. எட்வர்ட் ராஜதுரை R.

## குஜராத்

### அஹ்வா & பிப்பள்வாடா:

### விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.

**துதிக்க:** கோக்லி கிராமத்தைச் சேர்ந்த சுமன்பேன் சிறுநீரகக்கல் பிரச்சனையிலிருந்து சுகம்பெற்றார். மால்காதேவ் கிராமத்தில் புதிய குடும்பங்கள் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். சாலை விபத்திலிருந்து ஆஷிஷ் அற்புதமாய் பாதுகாக்கப்பட்டார். பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்த 20 வயது இளைஞன் சஞ்சய்பாய் மூன்று நாட்கள் தொடர் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுமிகளுக்கான விடுதி அருகில் இல்லாததால் பெண் பிள்ளைகள் படிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அஹ்வாவிலுள்ள சின்சோலி பகுதியில் சிறுமிகளுக்கான விடுதி கட்டப்பட; அம்தாவா கிராமத்தைச் சேர்ந்த ஆனந்தி பேன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற; எட்டு இடங்களில் கட்டப்பட்டு வரும் ஆலயக் கட்டுமானப் பணிகள் எவ்வித தடையுமின்றி விரைவில் கட்டி முடிக்கப்பட; அஹ்வா பணித்தளத்திலுள்ள மோஹுபாடா கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைத்துள்ளது. ஆனால் அங்கு விக்கிரகத்திற்கு கோவில் கட்டுவதால், ஆலயம் கட்ட எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள். எதிர்ப்புகள் மறையவும், ஆலயம் விரைவில் கட்டப்படவும், இக்கிராமத்தினர் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

### சில்வாசா: டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்

**துதிக்க:** ஷைலி கிராமத்தைச் சேர்ந்த தாக்கலுபேன் அவர்களின் ஹோட்டலில் பயன்படுத்தி வந்த கேஸ் சிலிண்டர் வெடித்து, ஏற்பட்ட தீ விபத்தில் யாருக்கும் எவ்வித தேசமும் வராதபடி தேவன் பாதுகாத்தார். பாம்பு கடி, பிசாசின் பிடி, பெரும்பாடு போன்ற பிரச்சனைகளிலிருந்து நமது விசுவாசிகளுக்கு தேவன் விடுதலை அருளினார். 1000 மணி நேர உபவாச ஜெபம், வாலிபர் கூடுகை, விசுவாசத்தை அறிக்கையிடும் நிகழ்ச்சிகள் யாவும் தடையின்றி நடத்த உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகம் செயலிழந்திருக்கும் சலீம், பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பாவனி பேன், ராதே பேன், நரம்பு பிரச்சனையிலிருந்து காகடுபேன் ஆகியோருக்கு தேவன் அற்புத சுகமருள; நடக்கவிருக்கும் விடுமுறை வேதாகமப் பள்ளி நிகழ்ச்சி, வாலிபர் கூடுகை தடையின்றி நடைபெறவும், அநேக சிறுவர்கள், வாலிபர்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்குபெற்று தேவனால் ஆசீர்வதிக்கப்படவும்; குடி மற்றும் போதை வஸ்துகளுக்கு அடிமைப்பட்டுள்ள மாந்தா பாய், சோமல் பாய், சமர்பாஸ் ஆகியோர் அதிலிருந்து விடுதலை பெற; பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டுள்ள 14 வயது சிறுமி எலிசா பேனுக்கு தேவன் விடுதலைத்தர ஜெபிப்போம்.

## மே 21 புதன்

உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. விஜயராணி ஆல்பின் T.

### மோட்டாபண்டா:

**மர்குஸ் மால்தோ & சாரா**

**துதிக்க:** அனைத்து ஆராதனைக் குழுக்களிலும் ஞாயிறு ஆராதனை, இரவுக் கூட்டங்கள், வாலிபர் மற்றும் பெண்கள் கூட்டங்கள் தடையின்றி நடைபெற தேவன் உதவி செய்து வருகிறார். கடந்த மாதம் அறுவடை பண்டிகை விசுவாசிகளின் மத்தியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. புதிதாக சிலர் ஆலய ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். கடந்த நாட்களில் நடைபெற்றக் கூட்டங்களின் மூலம் சில வாலிபர்கள் தங்கள் வாழ்வை ஊழியத்திற்கென அர்ப்பணித்துள்ளனர். விசுவாசத்தில் பின்தங்கியுள்ள குடும்பங்களை சந்தித்து, அவர்களை உற்சாகப்படுத்தவும், அவர்கள் மீண்டும் ஆராதனையில் கலந்துகொள்ளவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆலய ஆராதனையில் பங்குபெறுவோர் இயேசு கிறிஸ்துவை முழுமனதுடன் ஏற்றுக்கொள்ள; விசுவாசிகளின் வாலிபப் பிள்ளைகளுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; வேலையின்றி தவிக்கும் விசுவாசிகளுக்கு நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்க; சபை மூப்பர்கள், சுதேச ஊழியர்கள் உற்சாகத்துடனும், ஆத்தும பாரத்துடனும் ஊழியம் செய்ய ஜெபிப்போம்.

### சூரத்:

**மாதவராய் (ஓய்வு) & ஜெபதங்கம்**

**துதிக்க:** குடும்பப் பிரச்சனையின் காரணமாக விவாகரத்து செய்யவிருந்த சமீர்பாய் & மோனிஷா பேன் குடும்பத்தில் தேவன் சமாதானமருளி மீண்டும் சேர்ந்து வாழ கிருபை செய்தார். குல் தீப்பாய் & மாதவராய் சந்தித்த விபத்தில் சிறுகாயங்களுடன் அற்புதமாய் தேவன் அவர்களை பாதுகாத்தார். மின்சார தாக்குதலிலிருந்து புஷ்பாபேன் & தீபக் பாய் ஆகியோர் தேவனால் காப்பற்றப்பட்டனர். காசநோய் மற்றும் இரத்த வாந்தியிலிருந்து குடியாவுக்கு தேவன் சுகமருளினார். பலவிதமான நோய்களிலிருந்து நமது விசுவாசிகள் ஜெபத்தின் மூலம் குணமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குழந்தை பாக்கியம் இல்லாததால் தன் கணவரால் கொடுமைப்படுத்தப்படும் நிஷா பேனுக்கு தேவன் இரக்கம் பாராட்ட; ஆராதனை நடத்த பெரிய இடம் கிடைக்க; பிங்கிபேனுக்கு தேவன் சுகப் பிரசவமருள; குடிப்பழக்கத்திலிருந்து சஞ்சய் பாய் விடுதலைபெற; ரோனித் மற்றும் ஹன்சிஹா படிப்பில் ஆர்வம் காட்ட; உடல் முழுவதும் அரிப்பினால் கஷ்டப்படும் கணேஷ்பாய், சுவாச நோயிலிருந்து ஊர்மிளா பேன், கர்ப்பப்பை கட்டியிலிருந்து ஷோபா, கால்வீக்கம் மற்றும் வலியிலிருந்து நிஷா சுஜித் ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள ஜெபிப்போம்.

## மே 22 வியாழன்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜெயசேகர் P.T., திரு. சுனில் தத்தா காரா
திரு. பிபின் பிஹாரி பிரதான்

### கவாண்ட்:

**அகிலேஷ் குமார் & கிரண்தேவி**

**துதிக்க:** மகுடபாரி, கடாமடி கிராமங்களில் ஆலயக் கட்டுமானப் பணி துவங்கப்பட தேவன் உதவி செய்துள்ளார். ஏழு மாதங்களாக தலைவலியினால் அவதியுற்ற காஜாலி பென் ஜெபத்தினால் சுகம் பெற்றார். அசுத்தாவியினால் கட்டப்பட்டிருந்த புதிய விசுவாசி கீதாபென் குடும்பத்திற்கு விடுதலையைக் கட்டளையிட்ட தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசியான குமார் பாயின் மனைவி ராஷிலாபென் இரண்டு குழந்தைகளுடன் பிரிந்து சென்றுவிட்டார். தேவன்தாமே அவர்களின் குடும்பத்தில் சமாதானத்தை அருளி மீண்டும் குடும்பமாக இணைந்து வாழ; ரீட்டா பென்–நெஞ்சு வலி & தலைவலி, ரிங்கா பென்–நெஞ்சு வலி, துதிபென்–பார்வை இழப்பு, ராகபென்–மார்பகக் கட்டி ஆகியோர் பல வருடங்களாக வியாதியினால் வேதனைப்படுகின்றனர். இவர்களுக்கு தேவன் பரிபூரண சுகமருள; தோராலி பென் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு வேதத்தை வாசித்து வருவதால், இவரை அடித்து துன்புறுத்தும் இவரது கணவர் மனந்திரும்ப ஜெபிப்போம்.

### நிஜர் & செலம்பா:

**யுவனேஷ் & ஜான்சி ராணி**

**துதிக்க:** புதிதாக ஜெபக்குழுக்கள் துவங்க தேவன் கிருபை செய்தார். விசுவாசிகளின் பிள்ளைகள் தங்கள் தேர்வுகளை நல்ல முறையில் எழுத தேவன் உதவி செய்தார். காதுவலியினால் அவதிப்பட்ட பதுபாய்க்கு தேவன் பூரண சுகமருளினார். ஊழியர்களுக்கு தேவன் அருளின சுகம், பெலன், பிரயாண பாதுகாப்புக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகளின் பிள்ளைகளுக்கு மேற்படிப்பிற்கான வாய்ப்புகளை தேவன் தர; சுவாசக் கோளாறினால் அவதிப்படும் அனிஷா பென், போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் முண்டியாபாய் ஆகியோருக்கு தேவன் விடுதலை அருள; நடக்கவிருக்கும் விடுமுறை வேதாகமப் பள்ளியில் அநேக சிறுவர்கள் கலந்துகொண்டு இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க; நடைபெறவுள்ள மகளிர் கூடுகை மூலம் பெண்கள் மத்தியில் ஆவிக்குரிய எழுப்புதலை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

### தேவனாலே விடுதலை

*மத்தியப்பிரதேசம், கால்வா பணித்தளத்திலுள்ள சேஜாபாத் கிராமத்தைச் சேர்ந்த 25 வயதான பார்வதி தனது தகப்பனாரின் ஈமச்சடங்கின்போது, அவரது பூத உடலின் மீது வைக்கப்பட்டிருந்த தேங்காயை அவரின் உறவினர் எடுத்து பார்வதியின் கையில் கொடுத்தார். அந்நேரம் முதல் அசுத்தாவியின் பிடியினால் தாக்கப்பட்டு, ஆறு மாதங்களாக மனநிலை பாதிப்புக்குள்ளானார். நமது விசுவாசி ஃபுல்கை கொல்லு என்பவர் அவரின் குடும்பத்தினருக்கு சுவிசேஷம் அறிவித்து பார்வதியை ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். நமது விசுவாசிகள் அனைவரும் இணைந்து அவளுக்காக ஊக்கத்துடன் ஜெபித்தபோது தேவன் பூரண விடுதலையைக் கட்டளையிட்டார். இதன்மூலம் பார்வதி இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தேவனை மகிமைப்படுத்தி வருகிறார். அல்லேலூயா!*

மே
23
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கண்ணுசாமி தாமஸ்
திரு. விஜய் பாபு S.
திரு. கோபிகிருஷ்ணன் M.
செல்வி. எஸ்தர் நிஷோனி J.

## சொரம்பா & கடோட்:
**புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா**

**துதிக்க:** குடலிறக்கத்தினால் அவதிப்பட்டு வந்த அஜித்சிங் பாய் அறுவை சிகிச்சையின்றி ஜெபத்தின் மூலம் பூரண சுகம் பெற்றார். ஜாங்ராவ் ஆலய பிரதிஷ்டை வைபவம் தேவ நாமம் மகிமைப்பட சிறப்பாக நடைபெற்றது. கரும்பு ஏற்றிச்சென்ற சுமன் பாயின் வாகனம் விபத்துக்குள்ளானபோதும் வேலையாட்கள் யாருக்கும் காயம் ஏற்படாதபடி பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பேசும் திறன் குன்றியுள்ள ஆயுஷ் என்ற குழந்தை, அசுத்தாவியினால் அவதிப்படும் சங்கு பென், ரும்சிபாய், பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் கனிபென் மற்றும் பெரும்பாடு நோயினால் அவதிப்படும் ஹெமன்சி பாய் ஆகியோருக்கு தேவன் சுகமும் விடுதலையும் அருள; கர்த்தருக்குள் நித்திரையடைந்த அரவிந்த் பாயின் குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் அளிக்க; விசுவாசிகளுக்கு இடையூறு செய்வோர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; புதிய விசுவாசிகள் தைரியமாய் கிறிஸ்துவை அறிக்கையிட ஜெபிப்போம்.

# மகாராஷ்டிரா

## சோப்டா: வசாவா பாங்சிங்
**மௌலியா & ஏமன்பேன்**

**துதிக்க:** புதிய விசுவாசிகளான சுனில் மற்றும் பபிதாவின் சாட்சியான வாழ்க்கையின் மூலம் அவர்களது பெற்றோர்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுகொள்ள வாஞ்சைக் காட்டுகிறார்கள். ஜெபத்தின் மூலம் அஜய் காலில் இருந்த கட்டி மறைந்தது. விடுதி மாணவர்களுக்கு மூன்று நாட்கள் விடுமுறை வேதாகமப் பள்ளி நடத்த தேவன் கிருபை செய்தார். ரோஹித் என்ற வாலிபன் முழுநேர ஊழியத்திற்கென தன்னை ஒப்புக் கொடுத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எதிர்ப்பினிமித்தம் தடைபட்டுள்ள சோப்டா கிராமத்தின் ஆராதனை மீண்டும் துவங்கப்பட; நமது விடுதிப்பிள்ளைகளை தேவன் கோடை கால வெப்பத்திற்கு விலக்கி பாதுகாத்துக்கொள்ள; கலாங்கி கிராமத்தைச் சேர்ந்த ராகேஷின் குடும்பம் தேவனின் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## இயேசுவின் நாமத்தில் சுகம்

*மஹாராஷ்டிராவிலுள்ள சாலீஸ்கான் பணித்தளத்தில் பட்டோண்டா கிராமத்தில், இரண்டு மாத குழந்தைக்கு சிறுநீரகம் வீங்கி, சிறுநீரகப்பாதையில் தொற்று ஏற்பட்டது. அக்குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் கூறியபோது குழந்தையின் பெற்றோர் ஆலயத்திற்கு வந்து விசுவாசிகளோடு இணைந்து பாரத்தோடு ஜெபித்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் அறுவை சிகிச்சையின்றி குழந்தைக்கு அற்புத சுகமருளினார். தேவனுடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக!*

மே
24
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வேதமாணிக்கம் அப்பாதுரை N.

## இகத்புரி: நாகராஜன் & திலகவதி

**துதிக்க:** அநேக வருடங்களாக வயிற்று வலியினால் அவதிப்பட்டு வந்த அம்பிகாவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் பூரண சுகமருளினார். குடியின் அடிமைத்தனத்திலிருந்து காலு கங்குர்டேவுக்கு தேவன் விடுதலை அருளினார். தாம்னி கிராமத்தைச் சேர்ந்த ஜெயா பாயின் குடும்பத்தினரை ஜெபத்தின் மூலம் வியாதியிலிருந்து தேவன் சுகப்படுத்தினார். தாம்னி கிராமத் தலைவர் ஆராதனை நடத்தவிடாமல் தடைசெய்ததோடு, விசுவாசிகளையும் பயமுறுத்தி வந்தார். ஜெபத்தின் மூலம் தேவன் அனைத்து பிரச்சனைகளிலிருந்தும் விடுதலை கொடுத்தார். கரோல் கிராமத்தைச் சேர்ந்த லீலா விஷ்ணு விறகு எடுக்கச்சென்ற போது மூன்று தலை கொண்ட பாம்பிடமிருந்து தேவன் அற்புதமாய் பாதுகாத்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தாலேகாவ் கிராமத்தைச் சேர்ந்த நந்தாபாய் உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதிகளவு சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். தேவன் அவருக்கு பரிபூரண சுகமருள; தொண்டை வீக்கத்தினால் கஷ்டப்படும் கிஷான் மற்றும் மீரா சுகம்பெற; விசுவாசி கீர்த்தை இழக்கக்கொடுத்துள்ள அவரது கணவர் மற்றும் பிள்ளைளின் ஆறுதலுக்காக; அங்கீதாவின் குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள; விசுவாசிகளின் வாலிபப் பிள்ளைகளுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் தந்தருள; சம்பத் & சோனாலி குடும்பத்திலுள்ள கருத்து வேறுபாடுகள் மறைய; மிஷனெரியுடைய சகோதரியின் கணவருக்கு மஞ்சள் காமாலையினால் சரீரத்திலுள்ள பல உறுப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

## பெயிண்ட்:

### அலெக்ஸ் பிரபு & பிரியா கெத்ஸி

**துதிக்க:** அருண் என்பவரை பெரிய விபத்திலிருந்து தேவன் அற்புதமாய் பாதுகாத்து புது ஜீவனைத் தந்துள்ளார். நாக்கேபாடா கிராமத்தைச் சேர்ந்த ஷியாம் என்பவருக்கு அனைவரின் ஜெபத்தின் மூலம் சிறுநீரக சம்பந்தப்பட்ட அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்து சுகம் பெற்றுள்ளார். நால்ஷேத் கிராமத்திலுள்ள கமலாபாய் & சாக்ஷியை விஷப்பாம்பின் கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். ஆம்பே கிராமத்தைச் சேர்ந்த கிரண் என்பவருக்கு ஜெபத்தினால் சுகப்பிரசவம் அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வலிப்பு நோயினால் கஷ்டப்பட்டு வரும் பான்குல்கர் கிராமத்தைச் சேர்ந்த ஸ்தாவன் (ஒரு வயது), பல்லவி ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; கர்ப்பப்பை வீக்கத்தினால் அவதியுறும் கல்பனாவுக்கும், தலையில் பெரிய கொப்பளங்களால் கஷ்டப்படும் சரளாவுக்கும், நெஞ்சுவலியினால் கஷ்டப்படும் தாராபாய்க்கும், இரண்டு மாதங்களாக காய்ச்சலினால் பாதிக்கப் பட்டுள்ள மனோகருக்கும் தேவன் பூரண சுகம்தர; இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விரும்பும் அஞ்சனாவுக்கு பழைய வாழ்க்கையைக் குறித்ததான பயங்கள் நீங்க; 15 வருடங்கள் குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் சங்கர் & பத்திபாயை தேவன் ஆசீர்வதிக்க; சிறுமியர் விடுதிக்கு ஒரு சமையல்காரர் விரைவில் கிடைக்க ஜெபிப்போம்.

## மே 25 ஞாயிறு

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஃப்ரீடா பேபி எட்வர்ட் சாம்
திருமதி. ராஜரத்னம் ஆபிரகாம்
திருமதி. கிறிஸ்டா ரவிக்குமார், திரு. கின்ஸ்லி A.R.
திருமதி. ஷைலா குப்புசுவாமி
திரு. ஜம்மின்லுன் T., திரு. விஜய் குமார்

### நேர்: மூர்த்தி & பாரதி

**துதிக்க:** புதிதாக அநேகர் ஆலய ஆராதனையில் பங்கு பெற்று வருகின்றனர். ஐந்து இடங்களில் சங்கிலித் தொடர் ஜெபங்கள், இரவு ஜெபங்கள் தடையின்றி நடத்தப்பட தேவன் உதவி செய்தார். பெண்கள் கூடுகை, சிறுவர் வகுப்புகள் ஆகியவை சிறப்பாக நடைபெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பீல் இன மக்கள் அனைவரும் இயேசு கிறிஸ்துவை அறிந்துகொள்ள; இயேசு திரைப்படம் பார்த்தோர் அவரே மெய்யான தெய்வமென்று விசுவாசிக்க; இனம்புரியா நோயினால் அவதியுறும் பாராகு டாடா பரிபூரண சுகம் பெற; சபையில் நடைபெறவிருக்கும் அனைத்து ஊழியங்களும் ஆசீர்வாதமாக நடைபெற ஜெபிப்போம்.

### சுர்கானா:
### மயில்சாமி ஜோசப் & ஏசுமணி

**துதிக்க:** கடந்த மாதம் நற்செய்தி ஊழியத்தின் மூலம் புதிய ஆத்துமாக்களை தேவன் தந்துள்ளார். ஜெபத்தின் மூலம் பின்மாற்றத்திலிருந்த நமது விசுவாசிகள் மீண்டும் ஆலய ஆராதனையில் பங்குபெற்று வருகின்றனர். புதிதாக ஆராதனைக் குழு துவங்கப்பட்டுள்ளது. பிசாசின் பிடியிலிருந்து ரோஜினியை விடுவித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய ஆத்துமாக்கள் தடையின்றி தொடர்ந்து ஆலய ஆராதனையில் கலந்துகொள்ள; விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட தடையாயிருக்கும் சமுதாயத் தடைகள் நீங்க; குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் சோம்நாத் & மந்தாபாய்க்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள ஜெபிப்போம்.

### போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** பெண்கள் கூடுகை, வாலிபர் கூடுகை, சத்சங் கூடுகை, உபவாச கூடுகை போன்ற அனைத்துக் கூடுகைகளிலும் தேவன் பலத்த கிரியைகளை நடப்பித்தார். நமது விசுவாசி ஆஷாராம் பாய் சந்தித்த விபத்தில் சிறுகாயங்களுடன் பாதுகாக்கப்பட்டார். புதிதாக ஆராதனைக்கு வருபவர்களுக்காகவும், இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போருக்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகக் கல்லினால் அவதிப்படும் சுனில் பாய், நெஞ்சுவலியினால் துன்புறும் தரம்சிங் பாய், சர்க்கரை நோயினால் தாக்கப்பட்டுள்ள துஷாபாய், சுபிபாய் மற்றும் தலையில் கட்டியினால் வேதனைப்படும் மேனகாபாய் ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; பக்கவாதத்தினல் பாதிக்கப்பட்டிருக்கும் கங்கிபாய், சாகுபாய், சுக்லால் பாய், மங்கில மற்றும் பேசும் & கேட்கும் திறனை இழந்துள்ள மீனாபாய், தீபக், பிண்டுபாய் ஆகியோரை தேவன் குணப்படுத்த; ஜேனுபாய் & கவிதா பாய் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

## மே 26 திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சிசிலி ஞானம் ராஜ்குமாரி அருமைநாயகம்
திரு. பாபுராஜ் K., திருமதி. ஜெபலா விஜயகுமார்
திருமதி. மைக்கேல் ஜாண் சாமுவேல்
திருமதி. ஹெப்சி செல்வம் தவமணி
திருமதி. தும்படா ரசிலாபேன் ராமுபாய்
திரு. டேனியல் ராஜாமணி S.

### சாலீஸ்காவ்:

**ஏசுபிரகாஷ் & சுனந்தாபெல்லி**

**துதிக்க:** பட்டோன்டா கிராமத்தில் இரண்டு மாதக் குழந்தை ஒன்று சிறுநீரக வீக்கம் மற்றும் தொற்றினால் பாதிக்கப்பட்டதினால், அறுவை சிகிச்சை செய்யும்படி மருத்துவர்கள் பரிந்துரைத்தபோது, ஊழியர்களும், விசுவாசிகளும் கூடி ஜெபித்த வேளையில் தேவன் பரிபூரண சுகமருளினார். தோலில் தொற்று மற்றும் கால் புண்ணினால் கஷ்டப்பட்டு வந்த ஜோதி யாதவ்க்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். 5 வயது கார்த்திக் சிறுநீரகத் தொற்றிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உணவுக் குழாயில் தொற்று ஏற்பட்டு அவதியுறும் லீலாபாய், பல் வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ள ஷோபாய், வாத நோயினால் வேதனை அனுபவித்து வரும் வத்சலாபாய் ஆகியோரை தேவன் குணப்படுத்த; வாய்புண்ணினால் கஷ்டப்படும் ஒரு வயது குழந்தை புத்தானுக்கு தேவன் சுகமருள; நாகாட் மற்றும் முக்கேட் கிராமங்களில் ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்போர் மனந்திரும்ப; சஞ்சய் மார்ஷல் அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

### கட்சாந்தூர்:

**பால் ஆல்பர்ட் & ராணி ஜெஸிலெட்**

**துதிக்க:** அகுர்கபா கிராமத்தில் இயேசு திரைப்படம் திரையிட கிராம மக்கள் அனுமதி அளித்தனர். ராகேபள்ளி மற்றும் நிராலா கிராம மக்கள் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர். வேதாகம வகுப்புகள், மேளா மற்றும் சுகமளிக்கும் கூட்டங்கள் தடையின்றி சிறப்பாக நடைபெற உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய விசுவாசி ராதா பாய் கிறிஸ்துவுக்குள் வேரூன்றி வளர; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் காமத்குண்டா கிராம மக்கள் மனந்திரும்பி இயேசுவின் அன்பினால் தொடப்பட; நடக்கமுடியாமலிருக்கும் ஸ்ரீகாந்த் பவன் மற்றும் கௌதம் இவர்களின் கால்களை தேவன் பெலப்படுத்தி நடக்க செய்ய; இனம்புரியாத நோயினால் கஷ்டப்பட்டு வரும் கிஷான், ஜோதி, மஞ்சுளா ஆகியோர் இயேசுவின் தழும்புகளால் குணமடைய ஜெபிப்போம்.

### விண்ணக மருத்துவர்

*ராஜஸ்தான், தப்காரா பணித்தளத்திலுள்ள லாவண்டர் கிராமத்தில், மனநிலைப் பாதிக்கப்பட்டிருந்த ஈஸ்வர் என்பவர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எந்த மருந்தாலும் அவரை குணப்படுத்த முடியாது என்று மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் அவரை வீட்டிற்கு அழைத்து வந்தனர். சோர்வோடு இருந்த அக்குடும்பத்திற்காக ஜெபிக்கும்படி நமது மிஷனெரியை விசுவாசி சீமா அழைத்துச் சென்றார். மிஷனெரி ஈஸ்வரின் குடும்பத்தைச் சந்தித்து நற்செய்தியை அறிவித்து, ஜெபித்தபோது உடனடியாக ஈஸ்வர் சுகம்பெற்றார். கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக!*

**மே 27 செவ்வாய்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜோசப் துரைராஜ் P.
திருமதி. ரெபெக்காள் ஞானம் சார்லஸ் செல்லகுமார்
திருமதி. அருள்மேரி அன்பையா, திரு. எலிஷா தய்மி
திரு. சாமுவேல் ஜெபகுமார் A., திரு. டேவிட் R.
திருமதி. மாயா சூசன் சுனில் K. மேத்யூ

### தலாசரி: கெடாம் ஸ்ரீனிவாசராவ் & ராஜ்யலட்சுமி

**துதிக்க:** பட்கர்பாடா மற்றும் வார்வேடு கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்கள் மற்றும் இரவுக்கூடுகைகள் தடையின்றி நடைபெற தேவன் உதவி செய்தார். ஓசர்வீரா மற்றும் சாரி ஆலயங்களை ஜெபக்குழு தலைவர்கள் பார்வையிட்டு விசுவாசிகளை உற்சாகப் படுத்தினர். விசுவாசி காக்கடுதேவல் சிங்டாவை பெரிய விபத்திலிருந்து அற்புதமாய் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 14 வருடங்களாக குழந்தையின்றி தவிக்கும் குண்டா திலிப், சுனிதா மற்றும் சஞ்சனா குடும்பங்களை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; வேதபாட வகுப்புகள் மற்றும் பெண்கள் ஜெபக் குழுக்கள் தடையின்றி தொடர்ந்து நடைபெற; நடக்கவிருக்கும் கோதாவரி மேளாவின் அனைத்துத் தேவைகளும் சந்திக்கப்படவும், ஆயத்தப் பணிகளுக்காகவும் மற்றும் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபிப்போம்.

## கர்நாடகா

### ஷிக்காவ்: நரேந்திரா குமார்

**துதிக்க:** ஒரு வருடமாக புற்றுநோயினால் அவதியுற்ற பாத்திமாவை ஜெபத்தின் மூலம் தேவன் குணமாக்கினார். புஷ்பாவின் கையிலிருந்த கட்டி அறுவை சிகிச்சையின்றி ஜெபத்தின் மூலம் மறையும்படி கர்த்தர் கிருபை செய்தார். சிறுநீரகத் தொற்றினால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த கிரிஜம்மாவுக்காக விசுவாசிகள் ஊக்கமாய் ஜெபித்தபோது அவருக்கு பூரண சுகமளித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்தவர்களுக்கான கல்லறைத் தோட்டம் அமைக்க உள்ளூர் தலைவர்கள், தாசில்தார் மற்றும் அரசு அதிகாரிகள் இருதயங்களில் தேவன் கிரியை செய்து ஏற்ற இடத்தை ஒதுக்கித்தர; புதிய விசுவாசிகள் தேவ பக்தியிலும், விசுவாசத்திலும் வளர; அசுத்தாவியின் பிடியினாலும், பில்லி சூனியக் கட்டுகளினாலும் பாதிக்கப்பட்டு பேசவும், நடக்கவும் இயலாமலிருக்கும் மல்லவ்வாவிற்கு தேவன் விடுதலை அருள ஜெபிப்போம்.

### முண்ட்காட்:

### கோன்கா கிரி பாபு & லூர்து மேரி

**துதிக்க:** வாசகொப்பு, ஹானகுண்டு, மஞ்சுகேரி, பங்காபுரா ஆகிய இடங்களில் சுவிசேஷத்தைக் கேட்ட மக்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வாஞ்சைக்காட்டி வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கருச்சிதைவு ஏற்பட்டதினால் மனசோர்வுற்றிருக்கும் ரேஷ்மா & சுரேஷ் தம்பதியினருக்கு தேவன் ஆறுதல் அருள; தொடர்ந்து ஆலய ஆராதனையில் கலந்துகொண்டாலும் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட தயங்கும் 20 பேருக்காக ஜெபிப்போம்.

மே
28
புதன்

உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜெயசெல்வி மணிமாறன்

### ஷிரஹட்டி:

**ஆஷா பிராப்தா பால் & தீனாகுமாரி பெபர்தா**

**துதிக்க:** அசுத்தாவியின் பிடியினால் பாதிக்கப்பட்ட மஞ்சுளாவுக்காக உபவாசித்து ஜெபித்தபோது தேவன் அவருக்கு அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை அருளினார். திருமணமாகி நான்கு வருடங்களாக குழந்தையின்றி தவித்த லக்ஷ்மிக்காக ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தின் மூலம் அவருக்கு குழந்தை பாக்கியம் அருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு வருடங்களுக்கு முன்பு வீட்டைவிட்டு காணாமல்போன விசுவாசியின் மகன் முத்து பத்திரமாக வீடு திரும்ப; சபைக்கு வரும் வாலிபர்களான மௌனேஷ், பிரகாஷ், மஞ்சு, தர்மா, ரமேஷ், தீபா, மஞ்சுளா ஆகியோருக்கு ஏற்ற கிறிஸ்தவ வாழ்க்கைத் துணை அமைய ஜெபிப்போம்.

### கஜேந்திரகடா:

**லுபின் முர்மு & சலோமி ஹன்ஸ்தா**

**துதிக்க:** இரத்தப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு கடந்த ஓராண்டாக சிகிச்சைப் பெற்று வந்த 10 வயது சிறுமி பார்த்திபாவு ஜெபத்தின் மூலம் குணமடைந்தாள். எதிர்ப்பின் மத்தியிலும் இயேசு திரைப்படக் காட்சிகளை வெளிப்படையாக திரையிட தேவன் கிருபை செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குர்பா, வால்மீகி மற்றும் கொஞ்சிகோரி மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவிக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; தைராய்டு பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள பரத் பூரண சுகம்பெற ஜெபிப்போம்.

### ஹலியால்:

**தாங்லால் ஸௌ & நெம்ஸாவா**

**துதிக்க:** விசுவாசி சோபா மாருதிக்கு தாலுகா அலுவலகத்தில் அரசாங்க வேலைக் கிடைக்க தேவன் உதவி செய்தார். இரவில் வீட்டிற்கு வெளியே சென்ற ஸ்வர்ணனின் கால் வழியாக பாம்பு சென்ற போதிலும் எந்தத் தீங்கும் அணுகாமல் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவில் வேரூன்றி வளர; கடன் பிரச்சனையினால் கஷ்டப்படும் கீதாவின் குடும்பத்திற்கு தேவன் உதவி செய்ய; புதிய தொடர்பாளரான நாம்தேவ் மனைவி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற; குழந்தை பாக்கியத்திற்காக காத்திருக்கும் மஞ்சுளா, பிரேமா, பார்வதி ஆகியோரை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; நந்த்காட் பகுதியில் ஆலயம் கட்ட நிலம் வாங்கி, தடையின்றி ஆலயம் கட்டி முடிக்க தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம்.

## மே 29 வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஷக்கீனா க்ருபா ரக்ஷனா பரே
திரு. இம்மானுவேல் S.

### முண்டர்கி: சாமுவேல் பெபர்தா

**துதிக்க:** வாலிமீக்கி இன மக்கள் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டி வருகிறார்கள். கோபல் பகுதியில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்துள்ளார். சன்னாதாசர் சமூகத்தைச் சேர்ந்த துர்கப்பா சரீர பெலவீனங்கள் நீங்கி சுகம் பெற்றுள்ளார். புதிதாக அநேகர் ஆலய ஆராதனையில் பங்கு பெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அரசின் இலவச வீடு திட்டத்தில் பயன்பெற விசுவாசி பஞ்சமிக்கு கிராம பஞ்சாயத்துத் தலைவரின் கண்களில் தயவு கிடைக்க; மூன்று வருடங்களாக நீதிமன்ற வழக்கிலிருக்கும் சுதேச ஊழியர் சந்தோஷின் வழக்கு விரைவில் முடிக்கப்பட; படக்காட்சி ஊழியத்திற்கு தேவையான உபகரணங்களை தேவன் தந்தருள; மகிர்ஷின் பெபர்த்தாவின் சிறுநீரகப் பிரச்சனை குணமாக ஜெபிப்போம்.

### நிட்குண்டி:

**மஞ்ஜ்யா நாயக் & லமானி ரத்னா**

**துதிக்க:** இரண்டு வருடங்களாக சரீர பெலவீனத்தினால் கஷ்டப்பட்டு வந்த நேத்ராவுக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். 4 வயது சிறுமி சரிகாவுக்கு தலையிலிருந்தக் கட்டி அறுவை சிகிச்சையின் மூலம் அகற்றப்பட தேவன் கிருபை செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரத்தக் குறைப்பாட்டினால் ஒவ்வொரு மாதமும் உடலில் இரத்தம் செலுத்த வேண்டிய நிலையிலுள்ள 15 வயது ஷில்பாவுக்கு தேவன் இரக்கம் பாராட்ட; இம்மாதம் நடைபெறவிருக்கும் அனைத்துக் கூடுகைகளும் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

## ஆந்திரப் பிரதேசம்

### பலமநேர்:

**பால் குப்புசாமி & ஷைலா**

**துதிக்க:** குருசுவாமி மற்றும் அவரது மனைவியை விபத்திலிருந்து தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். சௌமியா, மதுமட்டி, விக்கி, சர்வீஸ்வரி ஆகியோர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாகவுள்ளனர். அநேக வருடங்களாக நடக்க முடியாமலிருந்த ஜெயராஜ் ஜெபத்திற்குப்பின் கோலூன்றி நடக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வெங்கட லக்ஷ்மம்மாவுக்கு மீண்டும் தொண்டையில் ஏற்பட்டுள்ள புற்றுநோயை தேவன் குணப்படுத்த; பசவராஜாகன்ட்ரிகா கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; இரத்தத்தில் தொற்று ஏற்பட்டுள்ள தீயாவுக்கு தேவன் சுகமருள; சித்தூர் பிராந்தியத்திலுள்ள நமது ஆலயங்கள் அனைத்திற்கும் நமது இயக்கத்தின் பேரில் பட்டா கிடைக்க; ஆறு மாதங்களாக அரசாங்கத்திலிருந்து வரும் முதியோர் உதவி தொகை கிடைக்காமலிருக்கும் கங்குலம்மாவுக்கு விரைவில் உதவி பணம் கிடைக்கவும், கால் முறிவு ஏற்பட்டுள்ள அவரது மகனை தேவன் குணப்படுத்தவும் ஜெபிப்போம்.

## மே 30 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மெர்லின் ஜெனட் பிராங்ஃக்ளின்
திருமதி. கிளாடி பியூலா சாமுவேல் ஜெபகுமார்
திரு. இஸ்ரேல் நத்தானியேல் எட்வர்ட் S.
திரு. ரூபன் ரவி M., திரு. வாவச்சன் M.P.
திருமதி. அஞ்சலிதேவி பாண்ட்டுமிலி அகிபாடா
திருமதி. உஷா ஏசுபாபு

### கொத்தச்செருவு: தேசாய் திலீப் பாய் & ராந்தே லக்ஷ்மிபேன்

**துதிக்க:** மூன்று புதிய கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியங்களின் மூலம் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. சாய்நகரில் நடைபெற்ற பெண்கள் கூடுகை தேவ நாமத்திற்கு மகிமையாக ஆசீர்வாதமாக நடைபெற்றது. இரண்டு கிராமங்களில் புதிதாக ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட்டுள்ளது. வலிப்பு வியாதியிலிருந்து இம்மானுவேல், நெஞ்சு வலியிலிருந்து அஜய், சரீர பெலவீனங்களிலிருந்து ஓபுலம்மா ஆகியோர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகளான அஜய் மற்றும் தனுஜைக்கு ஏற்ற வேலை வாய்ப்புகளை தேவன் கட்டளையிட; சரீரப் பெலவீனங்களில் கஷ்டப்படும் இம்மானுவேல் உபேந்தர் மற்றும் முழங்கால் வலியினால் அவதியுறும் மரியம்மா ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; முத்யாலம்மா & ஷஷிகலா ஆகியோருக்கு நல்ல வேலை மற்றும் ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க; கிறிஸ்தவ ஜீவியத்திலிருந்து பின்மாற்றமடைந்துள்ள நரசம்மா & கங்காதரி குடும்பங்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; பிரபாவதி காய்ச்சலிலிருந்து சுகம்பெறவும், குடும்பத்தின் பணத் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

### சதும்: அனில் மஹாலி & பிரசாந்தி

**துதிக்க:** மருதிவாரிபள்ளி, மோத்த வாரிபள்ளி, மாடுமாதாராபள்ளி, காந்தலபள்ளி ஆகிய கிராமங்களில் முதல்முறையாக சுவிசேஷம் அறிவிக்கவும், தனி நபர்களை சந்தித்து நற்செய்தி அறிவிக்கவும் தேவன் கிருபை செய்தார். தாமலசெருவு விசுவாசிகள் முழுஇரவு ஜெபம், ஞாயிறு ஆராதனைகளில் ஆர்வத்துடன் பங்குபெற்று வருகின்றனர். ராம்புரம் கிராமத்தைச் சேர்ந்த எஸ்தரம்மாவுக்கு விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் சுகப்பிரசவத்தில் ஆண்குழந்தை பிறக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** எம்.பி.ஏ. படித்து முடித்து வேலைக்காகக் காத்திருக்கும் விசுவாசி கேமந்தராஜுக்கு ஏற்ற வேலை கிடைக்க; குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள ஸ்ரீகாந்த் விடுதலைபெற்று இரட்சிக்கப்பட; சுப்பிரமணியன், அம்ருதா, சுகன்யா, குருநாதன், சௌதமி, விஜய்குமார், ஜெய்பிரகாஷ், யோகேஷ், சந்திரம்மா, அருணா, சோபனா, லோகநாதன், ஓலம்மா, நாகம்மா, குமாரி, கிரிதா ஆகியோருக்கு காணப்படும் எதிர்ப்புகள் நீங்கி, தைரியத்துடன் இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட; லக்ஷ்மி, சொருபா குடும்பங்களை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

மே
31
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சந்திரன் K.V., திரு. விஜயன் T.
திருமதி. சந்தானி பர்தன் மனோஜ்குமார் பானி
திருமதி. சுவாதி ஷர்மா ஜக்மோகன் சிங்
திரு. அருள் ஆசீர் D.

# தமிழ்நாடு

## வெட்டவலம்:

### பிரைட் ஜெயக்குமார் & பியூலா

**துதிக்க:** பெரிய ஓலப்பாடி ஆலயத்தை தங்கராஜ் அவர்கள் பொறுபேற்று ஆலய வளாகத்தை சீராகப் பராமரித்து வருகிறார். தங்கராஜ் மற்றும் கிரிஷுக்கு சுவிசேஷம் அறிவிக்கும் வாய்ப்பை தேவன் தந்தருளினார். காலயேசோரத்தூர், பெரிய ஓலப்பாடி ஆலயங்களில் நடைபெறும் சிறுவர் வகுப்புகளில் சிறுவர்கள் உற்சாகத்துடன் பங்கேற்கின்றனர். பயங்கரமான சொப்பனங்களிலிருந்தும், பிசாசின் கட்டுகளிலிருந்தும் சரண்யா மற்றும் அவரது மகன் லோகேஷுக்கு தேவன் விடுதலை அருளினார். மேலும் அவரது கணவர் அன்பரசு குடியிலிருந்து விடுதலைப் பெற்று குடும்பத்துடன் சமாதானமாக வாழ்ந்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஞாயிறு பள்ளியில் உற்சாகத்துடன் கலந்துகொள்ளும் பிள்ளைகள் இரட்சிக்கப்படவும், அதன் மூலம் அவர்களின் குடும்பத்தினர் இயேசுவின் அன்பை அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறவும்; ஓலப்பாடி கிராமத்தைச் சேர்ந்த வேல் முருகன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெறவும், ராகுலுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை அமையவும் ஜெபிப்போம்.

## பாவ்ரி வேதாகம மொழிபெயர்ப்புப்பணி:

### ஜேன் அமுத கிருபை

**துதிக்க:** சங்கீதம் மற்றும் எஸ்தர் புத்தகத்தின் குழு ஆய்வு நல்ல முறையில் நடைபெற்றதற்காகவும், யாத்திராகமத்தின் பத்து அதிகாரங்களும், நீதிமொழிகளின் பத்து அதிகாரங்களும் மொழிபெயர்க்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுமுறை வேதாகமப் பள்ளி மற்றும் ஞாயிறு பள்ளியின் புத்தகங்களை பாவ்ரி மொழியில் மொழிபெயர்க்க தேவையான ஞானம் மற்றும் கிருபைகளுக்காக; மொழி பெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மிஷனெரியின் வலது கையிலுள்ள வலி நீங்கவும், கர்ப்பப்பையிலுள்ள கட்டிகள் மறையவும்; ஆடியோ வேதாகமம் அனைத்து விசுவாசிகள் கைகளில் கிடைக்கவும், அவர்கள் வேத வசனங்களை கேட்டு தேவனை இன்னும் அதிகமாய் அறிந்துகொள்ளவும், பாவ்ரி மொழியில் புதிய ஏற்பாடு எல்லா சபைகளிலும் வாசிக்கப்படவும், ஒவ்வொரு விசுவாசியும் வேதத்தை வாசித்து வசனத்திற்குக் கீழ்படிந்து வாழ கற்றுக்கொள்ளவும்; மிஷனெரியின் இரண்டாம் மகள் நளதமின் மேற் படிப்பின் சேர்க்கைக்காக ஜெபிப்போம்.

**404**
**மிஷனரி ஆல்பம்**



# திரு. டென்சிங் & திருமதி. ஜேஸ்மின் கவிதா ராணி

தமிழ்நாடு, தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள வெள்ளாளன்விளை கிராமத்தைச் சேர்ந்த திரு. ரத்தினராஜ் & திருமதி. கிரேஸ் தம்பதியினருக்கு 16.04.1979 அன்று திரு. டென்சிங் பிறந்தார். சிறுவயதிலிருந்தே தேவபக்தி மற்றும் கிறிஸ்தவ ஒழுக்கத்தில் வளர்க்கப்பட்டார். சிறுவயதில் கேட்ட மிஷனெரிகள் மற்றும் இரத்த சாட்சிகளின் வாழ்க்கை வரலாறு இவரது உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதால் தானும் ஒருநாள் இரத்த சாட்சியாக மரிக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால் வாலிப பருவத்தில் பாவ சோதனைகளில் சிக்கி மன சமாதானத்தை இழந்தார். ஒருநாள் மத். 11:28 வசனத்தின் மூலம் தேவன் இவருடன் இடைபட்டு, பாவத்திலிருந்து விடுவித்தார். பின்னர் கடவுளின் அழைப்பை ஏற்ற இவர் தேவனுக்கு ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து இரண்டு வருடம் கர்நாடகாவில் கிராம ஊழியம் செய்தார். அதன்பின் மூன்று வருடம் இறையியல் கற்று தன்னை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்திக்கொண்டார். ஒருவருடம் தன்னார்வலராக சென்னை விரிவுப்பணியில் ஊழியம் செய்து, 2010இல் முழுநேர ஊழியராக FMPBயில் இணைந்தார்.

விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த நீதிபதி திரு. மாரியப்பன் தேவ ஆசீர்வாதம் & பேராசிரியர் திருமதி. ஜெயா தமிழரசி ஆகியோருக்கு இளைய மகளாக 23.09.1982 அன்று சகோதரி. கவிதா ராணி பிறந்தார். இவரது பெற்றோர் நம் இயக்கத்தின் விரிவுப்பணி ஊழியத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்கள். சிறுவயதில் திக்குவாயாக இருந்ததால் படிப்பில் தேர்ச்சி அடைய இயலவில்லை. எனவே 8ஆம் வகுப்பு இறுதியில் மனமுடைந்தவராய் தற்கொலைக்கு முயற்சி செய்த வேளையில் “என் மகளே நான் உன்னை நேசிக்கிறேன். நீ என் வேதத்தை எடுத்து வாசி” என்று தேவன் தெளிவாக இவருடன் பேசினார். கிறிஸ்துவுக்கு தன் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்தப்பின் படிப்பிலும், விளையாட்டிலும் சிறந்து விளங்கினார். தடகளத்தில் சிறந்து விளங்கியதோடு, தேசிய ஹாக்கி வீராங்கனையாகவும், தமிழ்நாட்டின் மாநில அணியின் கேப்டனாகவும் விளங்கினார். கல்லூரி படிப்பை முடித்தப்பின் தேவனின் அழைப்பிற்கு கீழ்ப்படிந்து 2007இல் FMPBயில் மிஷனெரியாக இணைந்தார். மிஷனெரி பயிற்சிக்குப்பின் அசாம் மாநிலத்திலுள்ள மிஸ்ஸிங் என்ற பழங்குடியின மக்கள் மத்தியில் தேவனுடைய ஊழியத்தை செய்து வந்தார்.

15.05.2010 அன்று சகோதரர் டென்சிங் & சகோதரி கவிதா ராணியின் திருமணம் நடைபெற்றது. அதன்பின் குடும்பமாக ஜான்சி மிஷனெரி பயிற்சி மையத்தில் இரண்டு வருடங்கள் ஊழியம் செய்தனர். பின்னர் அசாமின் மஜுலி பணித்தளத்தில் ஊழியத்தை ஆரம்பித்தனர். தற்போது குகாமுக் & டொக்குவகானா பணித்தளங்களில் தேவ ஊழியத்தை நிறைவேற்றி வருகின்றனர். ஆறு வருடங்கள் குழந்தையின்றி இருந்த இவர்களுக்கு தேவன் இரண்டு பெண் குழந்தைகளைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகள் லிசா மிராக்ளின் (07.07.2015) 5ஆம் வகுப்பும், இளைய மகள் லியா பிரைஸ்லின் (12.10.2017) 2ஆம் வகுப்பும் டோனாவூரிலுள்ள சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகின்றனர். மூத்த மகள் லிசா இரண்டாம் வகுப்பு படிக்கும் போது இரத்த புற்றுநோய் இருப்பதாக கண்டறியப்பட்டு, சிகிச்சைப் பெற்று வருகிறாள். இம்மாதம் மூன்றாம் வாரத்தில் சிறிய அறுவை சிகிச்சை செய்யப்பட உள்ளது. தேவ கிருபையாலும், அநேகரின் ஜெபத்தினாலும் தேவன் இம்மட்டும் லிசாவை பாதுகாத்து வருகிறார். இம்மிஷனெரி குடும்பத்தை நம் ஜெபத்தில் தாங்குவோம்.

## முகாம் வளாகம் வந்தடைய:

- டேனிஷ்பேட்டை பெத்தேல் வளாகம், சேலம் - பெங்களூர் நெடுஞ்சாலையிலுள்ள தீவட்டிப்பட்டியிலிருந்து 6 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.
- சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து பொம்மிடி, லோக்கூர், இராமமூர்த்தி நகர் செல்லும் பேருந்துகள் மூலம் வரலாம்.
  (பஸ் நிறுத்தம்: பெத்தேல் மருத்துவமனை)
- ஜோலார்பேட்டை - ஈரோடு மார்க்கமாக வரும் இரயிலில் பயணித்து வருவோர், டேனிஷ்பேட்டை இரயில் நிலையத்தில் இறங்கவும்.
- உங்கள் வருகை குறித்த தகவலைப் பயண ஒழுங்கிற்கான பொறுப்பாளர்களிடம் தெரிவித்தால் உங்களைச் சந்தித்து அழைத்து வருவார்கள்.
- மே 15ம் தேதி அதிகாலை முதல் சேலம் இரயில் நிலையம், சேலம் பேருந்து நிலையம், டேனிஷ்பேட்டை, தீவட்டிப்பட்டி சந்திப்புகளில் உங்களுக்கு உதவி செய்ய தன்னார்வ உதவியாளர்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளார்கள்.

**பயண ஒழுங்கிற்குத் தொடர்பு கொள்ள:**
சகோ. A. ஞானதாஸ் 90922 45090
சகோ. P. ரத்னராஜ் 94873 25000

## முகாம் குறிப்புகள்:

- முகாம் வளாகத்திற்குள் ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் தங்குவதற்குத் தங்குமிடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வேதாகமம், நோட்டு, பேனா, தட்டு, டம்ளர், போர்வை மற்றும் டார்ச்லைட் கொண்டு வாருங்கள்.
- உபவாச ஜெபநாளான வெள்ளிக்கிழமை (மே 16ம் தேதி ) மாலை 5.00 மணிக்கு உணவு வழங்கப்படும்.
- மே 18ம் தேதி காலை திருவிருந்து ஆராதனையுடன் முகாம் நிறைவுபெறும்.

**தமிழ்நாடு அளவிலான இளம் வாலிபர்கள் மற்றும் வாலிபர்களுக்கான வேதாகமத் தேர்வு**




- **வேதாகமப் பகுதி: யோசுவா மற்றும் மாற்கு**
  **2025 ஜனவரி முதல் மே மாதம் வரையுள்ள கேரீத் மாத இதழிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.**
- தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்வு நடத்தப்படும். (NKJV ஆங்கில வேதாகமம் பின்பற்றப்படும்)
- இடம்: பெத்தேல் வளாகம், டேனிஷ்பேட்டை, சேலம்
- தேர்வு நாள்: மாநில முகாமின் 2ஆம் நாள் (16.05.2025)
- தேர்வு நேரம்: இரவு 8 மணி முதல் 10 மணி வரை
- பரிசு பெற குறைந்தது 50 மதிப்பெண் எடுக்க வேண்டும்
- தேர்வில் முதன்மை பெறும் முதல் மூன்று நபர்களுக்குச் சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். மற்றவர்களுக்குத் தகுதிச் சான்றிதழ் அளிக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு:
**FMPB Youth Wing, Ph: 9445040148**

QR code for Camp location in Google map

முகாம் முன்பதிவிற்கான மின்னஞ்சல் முகவரி
annualcampfmpb2025@gmail.com

*முகாம் குறித்த விபரங்களுக்கு:*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

29, உயர்நிலைப்பள்ளிச் சாலை, அம்பத்தூர், சென்னை - 600053.
தொலைபேசி : 044 - 26570404, 9443039555, 9488805454

Regd. Newspaper for India No.17759/69

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நடத்தும்

# தமிழ் [illegible] முகாம் 2025

**மே 15 ↔ 18**

வியாழன் காலை 9.30 மணி முதல் — ஞாயிறு காலை 7.30 மணி வரை

இடம்

**பெத்தேல், டேனிஷ்பேட்டை, சேலம்**

## செய்தியாளர்கள்

சகோ. சுசி பிரபாகரதாஸ்
சகோ. G. ஜாண் சாமுவேல்
சகோ. விஜய் P. ஐசக்
சகோ. S. ஜாண் பெர்லின்
சகோ. Y. நவநீதர்
சகோ. S. இம்மானுவேல் ரஞ்சித்சிங்
மற்றும் பணித்தள ஊழியர்கள்

தரிசனமிகு பாடல்கள்
அனலூட்டும் செய்திகள்
உணர்வூட்டும் சந்தியா வேளைகள்
பணித்தளப் பகிர்வுகள்

கருப்பொருள்:

**இவர்களிலும் அதிகமாய்**

யோவான் 21:15



- பெரியவர்கள் | வாலிபர்கள் | இளம் வாலிபர்கள் | சிறுவர்களுக்கென தனித்தனி கூடுகைகள்
- பதிவுக்கட்டணம்: பெரியவர்களுக்கு ரூ. 300/–
  சிறுவர்களுக்கு ரூ. 200/–

முகாம் முன்பதிவுக்கான QR குறியீடு

ஆவிக்குரிய வாழ்வில் பெலப்படவும்,
மிஷனெரித் தரிசனத்தில் வளரவும்,
ஜெபக்குழுவாக, குடும்பமாக, சபையாக
**பங்குபெற அழைக்கிறோம்**

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***